THAYAGAM

# தாயகம்

17
.
09
.
93

75¢

உண்மை:5
தேடல்:11

17. 09. 93



## சமாதானத்தின் கைகுலுக்கல்

### வாஷிங்டனில் மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம்

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**TEXTILES, GIFTS, EVERSILVER ITEMS & BOOKS**

**566 A Parliament St**
**(Parliament/Wellesley)**
**(416) 964-8601**
**324-9345**
**968-9545**

**வர்த்தகர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு**

தலைநகை, தலைப்பாகை வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன், அனுராதா ரமணன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, லேனா தமிழ்வாணன், மு.கருணாநிதி, கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா உட்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.**

இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் உடனுக்குடன் பணம் அனுப்பி வைக்கப்படும்**

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

# இஸ்ரேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் சமாதான ஒப்பந்தம்

கடந்த முப்பது வருடங்களாக எதிரிகளாக இருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட சமாதான ஒப்பந்தம் ஒன்றை வாஷிங்டனின் கடந்த 13ம் திகதி கைச்சாத்திட்டுக் கொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் முடிவில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும் இஸ்ரேலிய பிரதமர் ராபினும் கைகுலுக்கிக் கொண்டனர். இந்த ஒப்பந்தப்படி இரு தரப்பினரும் பரஸ்பரம் அங்கீகரித்துக் கொள்வதுடன் இஸ்ரேலிய இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து வெளியேறவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் தலைமையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ராஜதந்திரிகள் கலந்து கொண்டனர். முன்னாள் ஜனாதிபதிகளான ஜிம்மி காட்டர், ஜோர்ஜ் புஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அக்டோபர் 13ம் திகதி அமுலுக்கு வரும் இந்த திட்டத்தின்படி முதலில் கல்வி, கலாசாரம், சுகாதாரம், சமூக நலன், வரி, உல்லாசப் பயணத்துறை என்பன முதலில் பாலஸ்தீனியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வரும்.

டிசம்பர் 13ம் திகதி முதல் ஜெரிக்கோவிலிருந்தும் காசாவிலிருந்தும் இஸ்ரேலிய இராணுவம் வெளியேறத் தொடங்கும். இந்த வெளியேறுதல் 94 சித்திரை 13ம் திகதி முழுமை பெறும்.

அடுத்த வருடம் ஜுலை 13ம் திகதிக்கு முன்னர் பாலஸ்தீனியப் பகுதிகளில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பின்னர் 96 சித்திரை 13ம் திகதி நிரந்தர தீர்வு காண்பது பற்றிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும். இதில் ஜெருசலேம், பாதுகாப்பு, எல்லைகள், அகதிகள், குடியேற்றங்கள் பற்றி ஆராயப்படும்.

1999 சித்திரை 13ம் திகதி முதல் நிரந்தர தீர்வு அமுலாகும்.

இந்த ஒப்பந்தத்தில் இஸ்ரேல் சார்பில் வெளிநாட்டமைச்சர் சிமோன் பெரஸ், பாலஸ்தீன விடுதலை இயக்கச் சார்பில் மஹ்முத் அப்பாஸ் ஆகிய இருவரும் கைச்சாத்திட்டனர்.

அரபாத் பச்சை நிற இராணுவச் சீருடையுடனும் பாரம்பரிய அராபிய முக்காடுடனும் காணப்பட்டார். ஆயினும் அவர் தனது வழமையான கைத்துப்பாக்கியுடன் காணப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்காக முன்பு கேம்ப் டேவிட் ஒப்பந்தம் கைச்சாத்தாகிய மேசையே பயன்படுத்தப்பட்டது.

# தொடரும் காமினி இணைப்பு நாடகம்

பெரும் ஆச்சரியத்தை உருவாக்கி பின்னர் முக்கியத்துவத்தை இழந்த காமினி யூ.என்.பி இணைப்பு விரைவில் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் காமினி தேசிய அட்டவணையில் பாராளுமன்றத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார் என்றும் பின்னர் மற்றவர்கள் சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் ஐ.தே.கட்சியினர் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதும் மேற்கு மாகாண சபை சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருப்பதால் காமினியை இணைப்பதன் மூலம் ஐ.தே.கட்சி மேல் மாகாணத்தில் பெரும்பான்மையைப் பெற்று அங்கு ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று எதிர்பார்க்கின்றனர்.

எனவே காமினியை கட்சிக்குள் இணைத்துக் கொள்வதற்கு பிரதியுபகாரமாக ஐ.தே.கட்சியினர் மேற்கு மாகாண சபையின் அதிகாரத்தை எதிர்பார்க்கிறார்கள்.

# கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பில் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் நடைபெற்ற கைது நடவடிக்கைகளின் போது சுமார் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் ஐம்பது பேர் வரையானோர் புலிகள் என்று பொலிசார் கூறுகின்றனர்.

அத்துடன் முக்கியமான சில ஆவணங்களையும் கைப்பற்றியதாகவும் இதில் சிலர் வியாபார நிறுவனங்களையும் வைத்திருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# தமிழ் இராணுவ மேஜர் ஜெனரல்

தமிழர் ஒருவர் இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். இராணுவத்தின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த செல்லையா துரைராஜா ஒரு வைத்தியராவர். இவர் விளையாட்டுத் துறையிலும் வீரர்களுக்கான மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

## ஏடு இட்டோர் இயல்

# உலகிடமிருந்து கற்றுக் கொள்வோம்

எமது வாழ்வுக்காலத்தில் நாம் கற்பனை செய்ய முடியாத ஆச்சரியம் தரும் பல விடயங்களை கண்முன்னால் காணக்கூடிய நிலையில் இருக்கிறோம். ரஷ்ய உடைவு, பேர்லின் சுவர் உடைவு, மண்டேலா விடுதலை என்று பல விடயங்கள் சில வருடங்களுக்கு முன்னர் எதிர்பார்க்க முடியாதன. இந்த தொடரில் இந்த வாரம் வாஷிங்டனில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தம் எங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. பயங்கரவாதிகளுடன் பேச மாட்டோம் என்ற இஸ்ரேலின் பிரதமரும் (இவர் சமீபத்திய பலஸ்தீனிய எழுச்சியின் ஆரம்பக் கட்டத்தில் அதை நசுக்க முயன்றவர்), இஸ்ரேலை அங்கீகரிக்க மாட்டோம், அவர்களைக் கடலில் தள்ளுவோம் என்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும் கைகுலுக்கிக் கொண்டதை நாம் காண்கிறோம்.

எங்கள் நிலை? அரசு சார்பில் கைகுலுக்கிக் கொண்ட பிரேமதாசா புலிகளால் கொல்லப்பட, புலிகள் சார்பில் கைகுலுக்கிக் கொண்ட மாத்தயா புலிகளால் தடுப்புக்காவலில் உள்ளதாகவும் தான் செய்திகள் வருகின்றன.

இரு தரப்பினருக்கும் சமாதானம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருந்தாலும், இந்த ஒப்பந்தம் உண்மையாக அமுலாகுமா என்பதை காலம் தீர்மானிக்க வேண்டியதாக இருந்தாலும் இது மத்திய கிழக்கில் முழுமையான சமாதானத்திற்கான ஒரு வழிகோலுதல் என்பதை மறுக்க முடியாது.

கைச்சாத்திடப்பட்ட புதிய ஒப்பந்தப்படி பரஸ்பர அங்கீகரிப்பும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பாலஸ்தீனியர்களின் சுயாட்சியும் இஸ்ரேலுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை பலஸ்தீனியர்கள் நிறுத்துவதும் சம்மதத்துக்குள்ளாகியுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டாலும், 'வெறும் காகிதத்தில் கையெழுத்திடுவது மட்டும் போதாது, இந்த நோக்கத்தை யதார்த்தபூர்வமாக்குவது தான் உண்மையான பிரச்சனை' என்று ராபின் கூறியதை நினைவு கூர வேண்டும். ஒப்பந்தப்படி ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் காசாவிலும் ஜெரிக்கோவிலும் சிவில் நிர்வாகம் பலஸ்தீனியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அங்கிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு, இடைக்கால அரசிற்கான தேர்தல் நடத்தப்பட்டு, இறுதியான நிரந்தரத் தீர்வு காணப்படும். இது நடைபெறுவதற்கான கால எல்லை நீண்டதாயினும் இன்றைய சமாதான ஒப்பந்தம் இதுவரை காலமும் பகைவர்களாக நினைத்துக் கொண்ட பலரை கட்டித்தழுவ வைத்திருக்கிறது. ரொறன்ரோ முதல் ஜெருசலேம் வரை யூதர்களும் பலஸ்தீனியர்களும் கட்டித் தழுவிக் கொண்டு கைகுலுக்குவதை தொடர்பு சாதனங்களில் காண்கிறோம். இப்போது ஆபிரகாமின் மகனை ஈசாக்கின் வழிவந்தவர்களான இஸ்ரேலியர்களும் ஆபிரகாமுக்கு அடிமைப் பெண் ஆகார் இடத்தில் பிறந்த இஸ்மாயிலின் வழிவந்த பலஸ்தீனியர்களும் தங்கள் புராதன தொடர்புகளை ஞாபகமூட்டிக் கொள்கிறார்கள்.

இத்தனை லட்சம் மக்களும் ஒருவரையொருவர் வெறுத்துக் கொண்டதற்கு இந்த தலைவர்கள் தான் காரணமோ என்று கூட சிந்திக்கத் தோன்றுகிறது. ஓரிரு மனிதர்களின் கைகுலுக்கல் எவ்வளவு தூரம் சாதாரண மக்களின் உணர்வுகளைத் தீர்மானித்து அவற்றில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. ஏற்கனவே இந்த வேறுபாடுகளினால் உயிர் துறந்தவர்கள் பலர் இருந்தாலும், 'சிந்தப்பட்ட இரத்தம் போதும்' என்று இரு தரப்பினரும் ஓத்துக் கொண்டுள்ளார்கள்.

மறுபுறத்தில் இரு தரப்பிலுமே இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து 'எமது மண்ணில் ஒரு அங்குலத்தையும் விட்டுக் கொடுக்க மாட்டோம்' என்றும் 'இஸ்ரேலியர்களை கடலுள் தள்ளுவோம்' என்றும் வெறும் உணர்வுகளுக்குள் அகப்பட்டு கோஷம் போடும் கூட்டங்களும் இல்லாமல் இல்லை. கைச்சாத்திட்ட இரு தரப்பினரும் உறுதியாக இருக்கும்வரை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது.

இன்றைய எங்கள் நிலை எந்த வித நம்பிக்கையையும் ஊட்டும் நிலையில் இல்லை. மிதவாதி என்று கருதப்பட்ட ஜனாதிபதி தானும் ஒரு இனவாதி என்ற நிலையிலேயே இருக்கிறார். இருப்பது பயங்கரவாதப் பிரச்சனை என்றும் அது இராணுவரீதியாகவே தீர்க்கப்படும் என்றதுடன் இராணுவத்தினரையும் முடுக்கி விட்டுள்ளார். யூதர்களின் மேலாதிக்கவாதமான ஸயோனிஸம் என்ற பதம் சமீபத்திய வாஷிங்டன் பேச்சுவார்த்தைகளில் பயன்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டியது. சிங்கள இனவாதம் இன்னமும் பல பாடங்களை படிக்க வேண்டியிருப்பதுடன் அதன் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் அளவிலும் நிலையிலும் இந்தியாவோ, அமெரிக்காவோ தற்போதைய நிலையில் இல்லை.

மறுபுறத்தில் புலிகளைப் பொறுத்தவரை பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இஸ்ரேல் பேசியது போல தங்களை மட்டுமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோஷத்தை மீண்டும் எழுப்பலாம். இதில் கருத்திற்கு எடுக்க வேண்டிய விடயம், பலஸ்தீன விடுதலை இயக்கம் என்பது புலிகள் போன்று தனித்த அமைப்பு அல்ல. அது பல அமைப்புகள், இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் போன்றவற்றின் கூட்டமைப்பு. அதில் அல் பாத்தா என்ற அமைப்பின் தலைவராக உள்ள யசீர் அரபாத் பிரதான தலைவராக உள்ளார். பா.வி.இயக்கத்தின் மாநாடுகளில் ஒருவருக்கொருவர் மரண தண்டனை விதித்துக் கொண்ட தலைவர்கள் கூட கலந்து கொள்வதுண்டு. அந்தப் பண்பு புலிகளிடத்தில் இல்லை.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் தேர்தல் மூலமாக தன்னை பிரதிநிதியாக காட்டவில்லை என்று யாரும் அதை

நிராரிக்காமல் இருப்பதற்கான காரணம், இந்த கூட்டமைப்பு முறையினுல் தான். பேச்சுவார்த்தைகளும் பா.வி.இயக்கத்துடனுனதே அன்றி, வெறும் அல் பத்தாவுடன் ஆனதல்ல.

சமீபத்தில் எரித்திரியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது ஆளும் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. முப்பது வருடப் போராட்டத்தின் பின்னர், சர்வதேச, உள்ளூர் சூழ்நிலைகள் சாதகமானதைத் தொடர்ந்து எரித்திரியப் போராட்டம் முடிவு நிலைக்கு வந்தது. இவ்வாருக காலத்தைக் கடத்திச் சென்ருல் இறுதியில் வேறு வழியின்றி தங்களிடம் தான் தீர்வு தேடி வர வேண்டும் என்று புலிகள் நினைக்கக் கூடும். ஆனுல் இங்கள் நிலை இது போன்றதல்ல.. எங்கள் மக்களின் பெருமளவிலான வெளியேற்றம் காலம் செல்லச் செல்ல எமது போராட்டத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. குடாநாடு ஒன்று தான் புவியியல் காரணங்களினுல் இறுதி வரை தாக்குப்பிடிக்கக் கூடியது. ஆனுல் தமிழ் பிரதேசங்களில் குடாநாட்டிலிருந்தே வெளியேற்றம் அதிகளவில் நிகழ்கிறது. இந்த வெளியேற்றம் நிகழும் போது, போராட்டத்திற்கான ஆளணி குறைவதுடன் தார்மீக ஆதரவும் குறைந்து போகும். இறுதியில் புலிகள் இறுதித் துளி இரத்தம் இருக்கும்வரை போராடும் நிலை தான் உருவாகும்.

இன்றைய நிலையில் கோஷங்களும் இன உணர்வுகளும் எந்த வித பயனும் அளிக்காது என்பதை உலக நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற சோவியத்தை ஒன்றுபட வைப்பதே சிக்கலாக இருக்கிறது. அந்தளவுக்கு எல்லைப் பிரச்சனைகள்.... கறுப்பர்களின் ஆட்சிக்குட்பட்ட தென்னுபிரிக்காவில் வெள்ளையர்களும் தேவை என்பதை கறுப்பர்கள் உணர வேண்டும் என்கிருர் மண்டேலா.

உலகில் மோதல்கள் நடைபெற்று அழிவுகள் ஏற்படும் இடங்களில் எல்லாம் இந்த இனஉணர்வுகளும் கோஷங்களும் தான் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உண்மையான அடக்குமுறையின் தாற்பரியத்தையும் பாதிப்பையும் இந்த கோஷங்கள் திசை திருப்பி விடுகின்றன. இந்த அழிவுகளால் பட்ட துன்பத்தினுல் இறுதியில் உண்மை நிலை உணர்ந்தவர்கள் தான் அதிகளவில் உள்ளார்கள். இதில் அடக்குமுறைக்கான அரசுகளும் விடுதலைக்கான இயக்கங்களும் அடங்கும். மக்களுக்காக என்று கூறி தொடங்கப்படும் யுத்தங்கள் அதே மக்களுக்கு அழிவைத் தரும் போது ஒரு கட்டத்தில் சலிப்புத் தன்மை ஏற்பட்டு, எந்த தீர்வு என்ருலும் எம்மை நிம்மதியாக இருக்க விட்டால் போதும் என்றளவில் வருகிறது.

யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து விட்டுக் கொடுப்பதால் தான் தீர்வுகளை அடைய முடியும் என்று உணரப்படும் போது பிரச்சனைகள் சுலபமாகத் தீரலாம். உதாரணமாக சீன ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும் திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா தான் அரசியல் சுயாட்சிக்காக மட்டுமே போராடுவதாகவும் சீனுவிலிருந்து சுதந்திரம் பெறுவதற்காக போராடவில்லை என்றும் கூறியிருக்கிருர். வெளிநாட்டு விவகாரங்களும் பாதுகாப்பும் பீக்கிங்கின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தன்னுதிக்கமுள்ள திபெத் தான் யதார்த்த நடைமுறைக்கு உகந்த நோக்கமாக இருக்க முடியும் என்று கூறும் லாமா 'சுதந்திரம் பற்றிப் பேசுவது ஆடம்பரமானது, உடனடி நோக்கம் எனது நாட்டை மரணத்திலிருந்து காப்பாற்றுவதே' என்கிருர்.

சீனு கூட யதார்த்த நிலைமையை உணர்ந்து கொண்ட நிலையில் புது டெல்லிக்கு வந்த சீனப் பிரதமர் 'திபெத் சுதந்திரம் கோருவதை நிறுத்தினுல் தான் பேச முடியும்' என்றிருக்கிருர்.

நாங்களும் கூட எங்கள் இலட்சியத்தில் தெளிவாக இருந்தால் மட்டுமே இலக்கை அடைய முடியும். இன்னமும் எமக்கு எமது கோரிக்கை தனித்தமிழ் ஈழமா? அல்லது சமஷ்டியா? என்பது தெரியவில்லை. ஒன்றே ஒன்று மட்டும் தெளிவாக தெரிகிறது. தங்களுக்கு மட்டுமே அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதில் புலிகள் தெளிவாக இருக்கிருர்கள்.

அரசும் பிரச்சனையின் தாக்கத்தை உணர்ந்து கொள்ளாமல் இராணுவத் தீர்வில் அக்கறை காட்டுகிறது. இவ்வாறு தமிழர் பிரச்சனையை காலாகாலத்துக்கும் தீர்ப்பதன்(?) மூலம் சிங்கள இனவாதத்தின் காவலனுக தன்னைக் காட்டி அரசு கட்டிலில் தக்க வைத்துக் கொள்ள அரசு நினைக்கிறது. இரண்டுமே சாத்தியமானவை அல்ல.

இஸ்ரேலுக்கு எதிராக வெளிப்படையாகவே பயங்கரவாத யுத்தத்தை முன்னெடுத்த பாலஸ்தீன விடுதலை இயக்கமும், பலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு எதிராக 'இஸ்ரேலின் நீதிதேவதையின் நீண்ட கரங்களைக்' கொண்டு பயங்கரவாதம் மூலமே பதிலடி கொடுக்க முயன்ற இஸ்ரேலும் இன்று கைகுலுக்கிக் கொள்கின்றன. இரண்டுமே யதார்த்த உண்மைகளை விளங்கிக் கொண்டதும் இதற்கான காரணங்களில் ஒன்று.

இரு தலைவர்களும் கைகுலுக்கிக் கொண்டதும் எதிரிகள் நண்பர்களாகிக் கொண்டனர். கட்டித் தழுவி முத்தமிடுகின்றனர். ஆயுதங்களை ஒப்படைக்கிறோம் என்றதும் கரகோஷம் எழுப்பிய எமது மக்களின் கருத்துக்களை இன்று வரைக்கும் யாரும் கேட்டதில்லை.

எமது நாட்டில் சிங்களவர்களுடன் வாழ முடியாது என்று ஆரம்பித்த எமது போராட்டத்தில் தற்போதைய நிலைமையில் யாழ்ப்பாணத்தில் மடிவதை விட கொழும்பில் வாழ்வது மேல் என்ற நிலையில் தமிழர்களும் சிங்களவர்களும் கைகுலுக்காத குறையாக வாழ்கிருர்கள்.

ஆனுல் தலைவர்கள் மட்டும் இன்னமும் கைகுலுக்க மறுக்கிருர்கள். எங்களுக்கு உடனடியாகத் தேவை தமிழீழமோ, இலாணுவத் தீர்வோ அல்ல, யதார்த்த நிலை பற்றிய தலைவர்களுக்கான தெளிவே.

*புலிகளைப் பொறுத்தவரை பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இஸ்ரேல் பேசியது போல தங்களை மட்டுமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோஷத்தை மீண்டும் எழுப்பலாம். இதில் கருத்திற்கு எடுக்க வேண்டிய விடயம், பலஸ்தீன விடுதலை இயக்கம் என்பது புலிகள் போன்று தனித்த அமைப்பு அல்ல. அது பல அமைப்புகள், இயக்கங்கள், தொழிற்சங்கங்கள் போன்றவற்றின் கூட்டமைப்பு.*

# பயங்கரவாதப் பிரச்சனையைத் தீர்க்க முயலுகிறார் ஜனாதிபதி

## இனப்பிரச்சனையை ஏற்க மறுக்கிறார்

வடக்குக் கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சனை தான் உள்ளது. இனப பிரச்சனை அல்ல என்று ஜனாதிபதி அம்பாந்தோட்டையில் பேசியபோது குறிப்பிட்டுள்ளார். இனப பிரச்சனை என்று கூறுவது தவறு என்றும் நாற்பது வீதமான தமிழ் மக்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வதாகவும் தனது செயலாளர்களில் இருவர் தமிழர்கள் என்றும் ஜனாதிபதி கூறினார்.

பயங்கரவாதிகள் ஈழம் கேட்டாலும் தமிழ் மக்கள் எங்களுடன் தான் இருக்கின்றனர். பயங்கரவாதிகள் துப்பாக்கிகளின் பலத்தினால் நாட்டின் பகுதி ஒன்றை தமதாக்கிக் கொள்ள விரும்புகின்றனர். தமிழர்கள் பயங்கரவாதிகளின் பக்கம் இருப்பதாக யார் கூறியது. வடக்குடன் சேர்வதாக கிழக்கில் உள்ளவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்று புலிகள் மட்டுமே கூறுகின்றனர். எது எப்படியென்றாலும் புலிகள் கோருவது போல ஈழராட்சியம் ஒன்றை உருவாக்க நான் விடமாட்டேன், நாட்டை பிரிக்க விட மாட்டேன். நாட்டின் இறைமையைப் பாதுகாத்து ஒருமைப்பாட்டைப் பேணுவேன்.

என்றைக்கும் எங்களுடன் ஒத்துழைக்கும் முஸ்லிம்களை நான் மதிக்கிறேன். மலாய், பறங்கியர்களும் எம்முடன் கைகோர்த்து நிற்கின்றனர்.

இந்த நாட்டை தாயகமாக்கிக் கொண்ட தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் தவிர எதையும் பயங்கரவாதிகளுக்கு வழங்க மாட்டோம். அனைவரும் அனைத்தும் சமனாய் பகிர்ந்து கொடுக்கப்படும்.

வடக்கில் தீவிரவாதிகள் கேட்கும் ஈழக் கோரிக்கை வழங்கப்பட மாட்டாது. ஜனநாயகத்தை கௌரவிக்கும் அரசு எப்போதும் வாக்காளர்களின் கோரிக்கைகளை பூர்த்தி செய்யும்.

அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க ஊழியர்களுக்கு அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விளக்கிப் பேசிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியா பற்றிக் குறிப்பிட்ட போது "இந்தியா எமது சகோதரன். எமது பலம் வாய்ந்த சினேகிதன், அருகில் உள்ள தேசம், நீண்ட கால உறவினர். நாம் என்றைக்கும் ஆதரவாக சேர்ந்திருப்போம்.

வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். சட்டம் மூலம் எல்லை பிரிப்பதில் மாற்றம் வந்தால் சர்வசன வாக்கெடுப்பினால் அதற்கு தீர்வு காண்பதே நல்லது" என்றார்.

# அகதிகள் மீது சோதனை

இந்தியாவிலிருந்து வந்த அகதிகள் மீது படையினர் சோதனை மேற்கொண்டதற்கு ஐ.நா அகதிகள் அமைப்பு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து வந்த அகதிகள் தங்கியிருந்த ஹோட்டலை இராணுவத்தினர், பொலிசார் மற்றும் ஊர்காவல் படையினர் சுற்றி வளைத்து யாரையும் வெளியேற விடாமல் தடுத்த பின்னர் அவர்களின் பொருட்களை சோதனையிட்டனர்.

இதற்கு ஐ.நா அமைப்பு ஆட்சேபம் தெரிவித்த போதும் இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் தேடுவதாக பொலிஸ் அதிகாரி கூறினார்.

இதற்கு முன்னர் ஒரு மாதத்திற்கு முன் வந்த அகதிகள் வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட போதும் இராணுவத்தினர் சோதனையிட விரும்பிய போதும் ஐ.நா அமைப்பின் ஆட்சேபத்தின் பின்னர் அகதிகள் சோதனையிடப்படாமல் அனுப்பப்பட்டனர்.

சோதனையின் போது அகதிகளிடமிருந்து இந்தியப் பொருட்களை இராணுவத்தினர் பறித்துச் சென்றுள்ளனர். ஆயினும் யாரும் கைது செய்யப்படவில்லை.

ஏற்கனவே இந்திய அதிகாரிகள், ஐ.நா அதிகாரிகளால் சோதனையிடப்பட்ட பின்னர் இந்த அகதிகள் இலங்கை வந்தனர். அத்துடன் மூன்று வருட காலம் வெளிநாட்டில் இருந்த இவர்கள் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களை கொண்டு வரவும் முடியும்.

# அம்பாறையில் வீடுகள் எரிப்பு

அம்பாறையில் படையினரால் தாக்கப்பட்ட தமிழர் ஒருவர் இறந்துள்ளார். வெல்லாவெளியில் உள்ள றெட்பானை கிராமத்திற்கு அருகில் புலிகளின் தாக்குதல் ஒன்றினால் சில பொலிசார் கொல்லப்பட்டதை அடுத்து அங்குள்ள கிராமத்தில் வசிக்கும் கோபாலபிள்ளை என்பவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அவரது வீட்டைக் கொழுத்திய பின்னர் அவரை அந்த தீயை அணைக்குமாறு கூறிய பின்னர் இவரைக் கட்டி இழுத்துச் சென்று துப்பாக்கியால் தாக்கியுள்ளனர். இந்தக் காயங்களால் இவர் இறந்துள்ளார். இதன் பின்னர் இப்பகுதியில் உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

கோபாலபிள்ளை கொல்லப்பட்டதன் பின்னர் அங்குள்ளவர்கள் அச்சத்தில் கோயில்களில் தஞ்சம் புகுந்திருந்தனர். அப்போதே இந்த வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இது குறித்து அங்குள்ளவர்கள் மட்டக்களப்பில் பொலிஸ் அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

# கணவன்-தாம்பத்தியம்-மனைவி

அருண்

தாம்பத்தியம்" தாயகத்தில் இத்தலையங்கத்தை மிகமிகச் சிலர் பார்த்திருக்கக்கூடும். இரண்டு வருடங்களின் முன், அதில் மூப்படைந்து மரணிக்கும் வரை தாம்பத்தியம் சாத்தியம். அவசியம் எனவும் இது வயோதிப காலத்தில் வெட்கத்திற்குரியதும் அல்ல கேலிக்குரியதும் அல்ல எனவும் தம்பதியினரில் பெண் மிகக் குறைந்த வயதினளாக அமைகையில் எழும் மன உளைச்சல்கள் மன விரிசல்கள் என்பவற்றுடன் இன்ன பிற உதிரிகளையும் கொண்டிருந்தேன்.

அவ் வேளையில் அதன் பிரதிபலிப்பைப் பெறுத்து "இன்னொரு முகத்தை" தர ஆயத்தங்கள் செய்தேன். ஆனால் அச்சுக்கு அனுப்பத் தயங்கியருந்தேன். பிற காரணங்கள் இருப்பினும் "தாம்பத்தியம்" தாக்கம் எதையும் ஏற்படுத்தவில்லை என் உணர்ந்ததே பிரதான காரணம். ஆனால் இன்னொரு முகத்தை எப்போதாவது பார்வைக்கு விடவேண்டுமென்ற முனைப்பு மட்டும் காத்திருந்தது.

தருணம் தந்தது சிவப்பிரகாசம் அவர்களின் "கணவன் மனைவிக்கு இடையில்" என்ற தொடர். இதன் இன்னொரு பிரதிபலிப்பாய் சிவதாசனின் "கர்மசூத்திரம்" பிறிதொரு பிரதிபலிப்பாய் இங்கு நான் தருவது "தாம்பத்தியம் இன்னொரு முகம்" எனும் தாமதப் பிறப்பு, இங்கு நான் எழுதும் சில விசயங்கள் சிவப்பிரகாசம் அவர்களின் கருத்துக்கு முரண்படுவதுபோல் தெரியினும் இவைகள் கணவன் மனைவிக்கிடையில் என்ற தொடரின் பிரதிபலிப்புத்தான், இவரின் குடும்பநலக் கருத்துக்கள் தொடரட்டும். பாலியல் அறிவு போதனைக்குரியதல்ல என்பதாய் தமிழ் சமூகம் கருத்துக் கொண்டிருக்கலாம். ஆயினும் அது ஆரோக்கியமானதல்ல என்ற கருத்தே அவரின் கருத்தே எனதும்.

உணர்ச்சிகளால் சம்பந்தப்பட்டதை வெறும் பாடங்களால் வளம்படுத்த முடியாது எனப் பலரும் வாதாடலாம், ஆனால் இவர்கள் ஒன்றை கருத்தில் எடுக்க வேண்டும், உணர்ச்சிகளை மனதால் ஆட்டுவிக்கலாம் என்பதே அது. பாடங்களால் மனதை வளம்படுத்தலாம் என அறியும் இவர்கள் அதன் மூலம் உணர்வுகளுடன் தொடர்பு கொள்ளலாம் என்பரை மட்டும் ஏன் மறுதலிக்கிறார்கள்? பாலியல் பிரச்சனைகள் பாலியல் விபரீதங்களாக வெளியாவது எம் சமூக அமைப்பில் அரிதாய் இருக்கலாம். ஆனால் இவை பிற மனவிரிசல்களாக குமைவுகளாக இங்கு புரையோடி இருப்பது நிசம். இது பற்றி தாம்பத்யத்தில் குறிப்பிட்டிருந்தேன், தம்பதி என்னும் இருவரில் ஒருவர் தமக்குள் பாலியல் தொடர்பாய் பிரச்சனை எனச் சொல்லிக் கொள்ளலாம், ஆனால் அவர் அவரது துணையின் அபிப்பிராயத்தையும் பிரதிபலிக்கிறார் என அர்த்தம் கொள்ள முடியாது.

ஏனெனில் எம் சமூகத்தில் தம்பதியினர் தம் இடையிலான அந்தரங்க உறவுகள் பற்றி தமக்குள் கருத்தை பரிமாறிக் கொள்வதோ கலந்தாலோசிப்பதோ அரிதிலும் அரிது.

வயிற்றுப்பசி போலத்தான் உடலின் பசியும் எனச் சொல்லிக் கொள்ளும் நாம் இரண்டினதும் வேறுபாட்டை ஆலோசிக்காதது கவலைக்குரியது, வயிற்றுக்கென்றால் பசிக்குத் தேவையானபோது விரும்பியபடி தேவையான அளவில் உணவைத்தேடிக்கோள்ளலாம், ஆனால் பசி உடலில் என்றால் இன்னொரு துணையின் பசியே உணவு, இது எப்போது எவ்வளவு என்று ஆளுக்கு ஆள் வேறுபடும் போது சமமான போகம் என்பது அதிஷ்டகரமானதேதான், ஆனால் வயிற்றுப் பசிக்குத் தேவையானபோது தேவையான அளவில் விரும்பியதை கேட்டு வாங்கிக் கொள்வது போல் இதையும் பெற்றுவிடலாம். இதற்கு கேட்க வேண்டுமே, கேட்டாலே கொடுக்கவும் வழி பிறக்கும், வழிகள் ஏராளம், இதையே சிவப்பிரகாசம் அவர்களும் சொல்லியிருந்தார்கள், இதே கருத்தை இன்னோரு விதமாக... அது வாங்கித்தாருங்கள் இதை வாங்கித்தாருங்கள் என்றோ அதை சமைத்துத் தாங்கோ என்றோ உரிமையுடன் கேட்டு வாங்குவது போல் இதையும் கேட்டுப்பெறும் மனப்பான்மை வர வேண்டும், என்று தாம்பத்தியத்தில் எழுதியிருந்தேன், இவை அறிவுரைகளே தவிர ஆபாசம் அல்ல புரிந்து கொண்டால் சரி,

உடல் உறவு என்பது உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டதெனினும் அதன் விளைவுகள் சந்தோசமோ வெறுப்போ மனதில் தான் பிரதிபலிக்கப்படுகிறது, இது மனதிற்கும் உணர்ச்சிக்குமான தொடர்பை உறுதி செய்கிறது, ஆக மனதை நிர்மாணிப்பதன் மூலம் உணர்ச்சிகளை தீர்மானித்துக் கொள்ளலாம், மனது என்பது வரப்பிரசாதமல்ல, வளர்த்தெடுக்கப்படுவதே, இதனை அறிவியற்துணையுடன் மாற்றங்களுக்கு உட்படுத்தலாம் என்பது உண்மையே, இதுவே சிவப்பிரகாசம் அவர்களின் தொடருக்கு கால்கோள் இட்டதாய் இருக்கலாம், மாற்றலாம் என்பது உண்மை எனினும் மாற்றம் சாத்தியமா? அதுவும் எமது சமூகத்துக்கு... இது அலசப்பட்டிருக்க வேண்டியது அதை விட அவசியமானது, கணவன் மனைவிக்கு என்ற தொடரில் அத்திவாரமிடப்பட்டிருந்த தரவுகள் மேற்கு நாடுகளில் பெறப்பட்டவை, இதனை பிரதியிட்டதால் அக்கட்டுரை

முழுமை பெறாமல் பல கேள்விகளை அனாதரவாய் விட்டுச் சென்றுள்ளது, எமது சமூக அமைப்பில் குடும்ப உறவுக்கும் மேற்கத்திய சமூகத்தின் குடும்ப உறவுக்கும் வேறுபாடுகள் உண்டு, தாம்பத்தியத்தில் அடக்கமான பாலியல்,பாசப்பிணைப்பு குடும்பக் கடமை உறவினர் பிணைப்பு என்பவற்றில் இவ்விரு சமூகத்திலும் ஓவ்வோன்றினதும் பங்களிப்பு வேவ்வேறு விகிதாசாரத்தில் இருக்கிறது, இதை மேற்கு நாடுகளில் வாழும் நாம் நன்கு உணர்ந்திட முடியும், எம் சமூக தாம்பத்தியத்தில் பாலியல் பங்களிப்பு அவர்களிலும் கொஞ்சம் குறைவானதே, அத்துடன் வெளிநாடுகளில் வாழும் எம் சமூகம் எம் நாட்டில் அமைத்துக் கொண்டுள்ள அதே அமைப்புகள் பிணைப்புக்களுடன் அண்மையில் புலம் பெயர்ந்தவர்களே, எமது எழுத்துக்களும் இவர்களையே சென்றடைகின்றது, இங்கே முளைத்த எம் சந்ததியினரை அல்ல, ஆகவே இங்கு எம் நடை முறைகள் இன் நாட்டுத் தரவுகளுடன் முரண்பட்டுக்கொள்ளும் இடர்கள் சிவப்பிரகாசம் அவர்களால் உணரப்பட்டிருக்க வேண்டும், அதே நேரம் அந்தத் தரவுகளின்படி பெறப்பட்ட தீர்வுகள் எம் சமூக நடைமுறையில் செயல் முறையாக்கல் சாத்தியமானதா? இல்லை என்பதே பெரும் பாண்மையோர் பதிலாய் இருக்கும்,

பாலியலைப் பொறுத்தவரை இது இப்படியேதான்.. இவர் இவர்களுக்கு இதில் இன்ன இன்ன பங்களிப்பென சில முடிவுகளை அரவணைத்துக் கொண்டே எம் சமூகம் இருக்கிறது, விஞ்ஞான பூர்வமாக விளக்கங்கள் கொள்ள எம்மில் பெரும் பகுதி பழக்கப்பட்டிருக்கவில்லை, இதனால் சிவப்பிரகசம் அவர்களின் விஞ்ஞான பூர்வமான அலசல் உன்னதமாக இருப்பினும் எம் சமூகத்தால் சீரணிக்க முடிந்திருக்காது, விரசம் என்றே முத்திரை குத்தப்படும், கணவன் மனைவி உறவில் ஏற்படும் விரிசல்களுக்கு பாலியலும் காரணம், ஆனால் அது மட்டுமா? இன்னும் வேறு பிரச்சனைகளால் விரிசல் ஏற்படுகிறது, அப்பிரச்சனைகள் சிலவற்றிற்கு பாலியல் பரிகாரமாய் அமைவதும் உண்டு, சிவதாசனின் கர்மசூத்திரம் சொல்வதைப்போல இனனொருவரின் உதவி மூலமும் சில தீர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதுவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது,

1, தாம்பத்தியத்தில் எழும் பிரச்சனைகள் உடலுறவுத் திருப்தியின்மையால் வரலாம், இதை நிவர்த்திக்கலாம், இதற்குப் புரிந்துணர்வு அவசியம் என்பதை கடந்த வாரங்களாக வேளி வந்த கட்டுரைகள் மூலம் அறிந்திருப்பீர்கள்,

2, உறவினர் நண்பர்கள் சமூகம் போன்ற வெளிச்சக்திகள் தம்பதியிடையில் நுழைவதால் வரலாம்,

3, இருவர் மனங்களும் இணக்கம் கொள்ளாமல் வரலாம்,

பின் இரண்டும் எம் சமூகத்தைப் பொறுத்தவரை முதலாவதுடன் இணையான முக்கியத்துவம் உள்ளவை, இந்த முகத்தையே அடுத்த வாரம் எழுத இருக்கிறேன்,

(பின் குறிப்பு,"கணவன் மனைவிக்கு இடையில்" என்ற தொடரினதும் கர்மசூத்திரம் என்ற ஆக்கத்தினதும் எனது பார்வையானதாகவும் 'தாம்பத்யம்:இது இன்னோரு முகம்' எனும் எனது அடுத்தவார கட்டுரையின் முன்னுரையாகவும் இது அமைகிறது)

## லலித் மரணம் பற்றி விசாரணை

லலித் மரணம் குறித்து விசாரிக்க நடுநிலையான விசாரணைக்குழு வேண்டும் என்ற எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன. இந்த கொலை குறித்த சந்தேகங்களை நிவர்த்திக்க குழு அமைக்கப்பட வேண்டும் என்று சிறிமாவோ கேட்டிருக்கிறார். பாராளுமன்றத்தில் இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது.

இது குறித்து ஸ்கொட்லாண்ட் யார்ட் குழு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்த போதும் அது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துலத் முதலியின் சட்டத்தரணிகள் இது குறித்து அதிருப்தி தெரிவித்திருந்தனர்.

## ஒப்பந்தத்துக்கு வரவேற்பு

பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இஸ்ரேலும் ஒன்றையொன்று அங்கீகரித்து சமாதான ஒப்பந்தம் செய்ததை இலங்கை வரவேற்றுள்ளது. வெளிநாட்டமைச்சு விடுத்த செய்தியில் ஐ.நா பாதுகாப்புச் சபையின் 242,338ம் தீர்மானங்களின் அடிப்படையில் பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியை வரவேற்கிறது என்றும் பாலஸ்தீனியப் பிரச்சனையை மத்தியகிழக்கினதும் அரபு, இஸ்ரேலிய பிரச்சனையின் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## அகதிகளுக்கு ஐ.நா உணவு உதவி

ஐ.நா உலக உணவுத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இன்னொரு வருடத்திற்கு உணவு வழங்கப்படவுள்ளது. இலங்கையில் இடம் பெயர்ந்துள்ள ஐந்தரை லட்சம் அகதிகளுக்கும் உணவு வழங்குவதற்காக இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

ஐ.நா அமைப்பின் உணவு உதவி நிறுவனமான இது இரண்டரை மில்லியன் டொலர் பெறுமதியான அரிசி, சீனி போன்றவற்றை அகதிமுகாம்களில் வாழும் அகதிகளுக்காக அனுப்புகின்றது. கடந்த 92 பெப்ரவரி முதல் எட்டு லட்சம் அகதிகளுக்கு உணவு வழங்குகிறது.

## பாதுகாப்புக்குழு

தற்போது கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்ட பின்னர் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவில் முப்படைத் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் தேசிய உளவுப் பிரிவு இயக்குனரும் அதிரடிப்படைத் தளபதியும் உள்ளார்கள். இந்த குழுவே யுத்தம் பற்றிய சகல முடிவுகளையும் எடுக்கும். பாதுகாப்பு அமைச்சின் கீழ் இந்த குழு செயற்படும்.

# இந்தியாவிலிருந்து வந்தவர் கைது

இந்தியாவிலிருந்து வந்த அகதி இளைஞர் ஒருவரை திருமலையில் இயங்கும் தமிழ் இயக்கம் ஒன்று கைது செய்துள்ளது. இதை ஐ.நா அகதிகள் அமைப்பு அதிகாரிகள் கண்டித்துள்ளனர். இவ்வாலிபரை பொலிசார் தலையிட்டு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

கடந்த வாரம் இந்தியாவிலிருந்து வந்த ரமேஷ் என்ற பதினறு வயது இளைஞரை ஆயுதம் தாங்கிய இயக்கத்தினர் உப்புவெளி ஹோட்டலில் தங்கியிருந்த போது கடத்திச் சென்றனர்.

ஐ.நா அதிகாரிகள் இந்த இயக்க அலுவலகத்திற்கு சென்ற போது தாம் தடுத்து வைத்திருப்பதாக கூறிய போதும் காரணம் தெரிவிக்கவில்லை. தற்போது ஐ.நா அதிகாரிகள் அரசாங்க உயர்பீடங்களுடன் இது குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

# பிரபாகரனிடம் ஒத்துழைப்புக் கோருகிறார் அமைச்சர்

பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட ஜனசவியத் திட்டத்தை அமுல்படுத்த பிரபாகரன் அனுமதிக்க வேண்டும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கேட்டுள்ளார். வடக்கில் ஜனசவியத் திட்டத்தை அமுல்படுத்தி வறுமையை ஒழிக்க தாம் விரும்புவதாகவும் இதற்கு பிரபாகரன் வன்முறையைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

# மேலும் இருவர் தேடப்படுகிறார்கள்

பிரேமதாசவின் கொலை சம்பந்தமாக இரண்டு பேர் மேலும் தேடப் படுகிறார்கள். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கலீந்திரன் செல்லையா, கரவெட்டி வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு செல்வராஜா ஆகிய இருவரும் தேடப்படுகிறார்கள். இவர்கள் பிரேமதாசாவைக் கொன்ற வீரகுமாருடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்படுகிறார்கள். இவர்கள் தேடப்படுவது பற்றி வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# தப்ப முயன்றவர்கள் சுட்டுக்கொலை

மகர சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முயன்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்தனர். இவர்களில் நால்வர் சிறை அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு கடும் காவல் அளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஜே.வி.பியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் இளையவி இரத்தினம் (சின்னக்கிளி)



தோற்றம் 26.6.1954

மறைவு 16.9.1992

அமைதியின் ஒளிவிளக்கே
அழியாத செல்வம் நீ என்றல்லவா
கனவு கண்டிருந்தோம்...
கணப்பொழுதில் கனவுகள் கலைந்து
கண்ணீர் வடிக்க வைத்துவிட்டாயே!கூடி
மகிழ்ந்த நாட்கள் இனியும் வருமோ..

பாசத்திற்கு இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளி விளக்கமாய்
உலகுக்கு நல்லவனய் வாழ்ந்திருந்தாயே!

கொஞ்சி மகிழ்ந்த குழந்தைகளிடமிருந்து
பறித்து சென்றானே காலன்......
கதறியழுதோம்.....
சுழலும் பூமியில் எம் அழுகை
கேட்காமல் போனதோ!

ஆறுத்துயரில் நித்தமும்
நிம்மதியிழந்து துயரில்
துடிப்பது உங்களுக்கு கேட்காதோ!

ஓராண்டு ஓடி மறைந்தால் என்ன ஐயா!
எம் இதயங்களில் என்றும் தெய்வமாய் வாழ்கின்றீர்கள்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறை சன்னிதானத்தில் இறைஞ்சி நிற்கும் உங்கள் அன்பு மனைவி; ராட்ணு பிள்ளைகள்; ஜெயதீபா, பிரதீபா, அனுபா, ஜெயகஸ்ரன், நீனு

பாரிஸ் 39838195

பீற்றர் குடும்பத்தினர், கனடா(416) 796 2672



# முனியின் பதில்கள்

ஒரு முனிவரே! வெகுநாட்களாக உம்மை காணவில்லை. எங்கே ஓடி ஒளித்துக் கொண்டீர்? புலிக்கு பயந்தா அல்லது தாயகத்துடன் கொழுவலா?
அருள் ரொரண்டோ
எத்தனையோ பத்திரிகைகள் இங்கு வெளி வந்தன நின்றுவிட்டன. எத்தனையோ மாதசஞ்சிகைகள் காலாண்டிதழாகிவிட்டன காலாண்டிதழ்கள் அரை வருடத்துக்கொரு தடவை வருகின்றன.. இவையெல்லாவற்றையும் பார்த்து எனக்கும் ஒரு ஆசை ... அவ்வளவுதான். ஹி.....ஹி...ஹி... கொஞ்சம் லேட்டாயிற்றுது..!

இன்றைய ஈழத் தமிழர் மீது புலிகளாலும் சரி சிங்களவர்களாலும் சரி ஒரே விதமான அடக்குமுறைதான் பிரயோகிக்கப்படுகிறதென்ருல் சுதந்திரம் எதற்கு?
அருள் ரொரண்டோ
உன்னை நீ ஆண்டு கொள்ளாவிடில் உன்னைவிடத் தாழ்ந்தவன் ஒருவன் உன்னை ஆள்வான். அதுதான் உனக்கேற்படும் பெரிய தண்டனை. வீழ்வது வெட்கமல்ல வீழ்ந்தே கிடப்பதுதான் வெட்கமானது.

சுதந்திரம் என்ற கோட்பாட்டின் கீழ் போரிடும்போது சிறுவர்களும் போரிடக்கூடும். அதையேன் பெரிதுபடுத்தி புலிகளை சிலர் தாக்கவேண்டும்?
எஸ்.கே.எஸ், ஸ்காபரோ
போரிலும் சில நீதிகள், நியதிகள் உண்டல்லவா? கோவிலை, நூல்நிலையத்தை, வைத்தியசாலையை குண்டு வீசித் தகர்க்ககூடாது என்று ஏன் சொல்லுகிருேம்? சில அடிப்படை கோட்பாடுகள் காக்கப்படவேண்டும்! இதுபோலத்தான் மனேவளர்ச்சியடைந்துவரும் வயதில் பாலகர்களை போரிடத் தூண்டுவதும் தர்மப்படி குற்றம்.

கோவிலைப்பற்றி தாயகம் எழுதியிருக்கிறது இது தேவையற்ற தலையீடு பத்திரிகைகளுக்கும் ஒரு வரைமுறை தேவை!...
ஸ்ரீ சிவராஜன் ஸ்காபரோ.
நல்லூர்த் திருவிழாவின்போது கத்திக்குத்து என்று ஊரில் நீங்கள் செய்தி படித்ததில்லையா? தகவல்தான் முக்கியம் எந்தக்கோவில் என்பதல்ல.

புலிகளின் எதிரி யார்?
கண்ணன் ஸ்காபரோ
அன்டன் பாலசிங்கம்.

புலிகளால் புளொட்டால், டெலோவால் ஈரோஸால் தமிழ்மக்களை போராளிகளாக திரட்ட முடிந்ததென்ருல் ஏன் அதை கூட்டணி செய்திருக்க முடியாது? இதிலிருந்து கூட்டணியை தமிழ்மக்கள் நம்பவில்லை என்றுதானே அர்த்தம் தெரிகிறது.
கண்ணன் ஸ்காபரோ
அமிர்தலிங்கம் காய்கறி அவித்துப் பழக்கப்பட்டவர். செல்வநாயகத்தோடு சேர்ந்து முட்டை அவிக்க எண்ணினுர். முட்டையை கொதிநீரில் போட்டு 'அவி அவி' என அவித்தார். எவ்வளவு அவித்தும் கோது கடினமாக இருக்கவே முட்டை அவியவில்லை என எண்ணிவிட்டார். இயக்கங்கள் கோதை மட்டும்தான் உடைத்தன

பத்திரிகை உருவில் பார்ப்பதிலும் பார்க்க தாயகம் சஞ்சிகையாக வரும்போது கனதியாகத்

தென்படுகிறது. இங்குவரும் இலக்கிய இதழ்காரர்கள் தாயகத்தை பார்த்ததும் என்ன நினைப்பார்கள்?
ஜயசுதன் ரொறன்டோ
வெயிட்டாக இருக்கிறதே என நினைப்பார்கள்.('நிறை' யைக் சொன்னேன் கு(றை)றயைச் சொல்லவில்லை)

தேடகத்தினை தாக்கி பச்சை இலக்கியக்காரர் ஒரு நீளமான கட்டுரையை எழுதி செந்தாமரையில் பிரசுரித்திருக்கிறாரே இதைப் படித்தீரா?
ஜயசுதன் ரொறன்டோ
படித்தேன் படித்தேன்.... ஊரில் கிழவிகள் பிலாக்கணம் வைத்து அழுது முறையிடுவதுபோல இருந்தது. (அந்தக் கட்டுரைக்கு அவரே ஒரு விமர்சனம் எழுதினால் நன்றாக இருக்கும்)

குட்டிமனிக்கு பிரபாகரன் குழு அஞ்சலி செலுத்த ஆரம்பத்திருப்பது எதைக் காட்டுகிறது முனிவரே?
சபா நேசன் ரொரன்டோ
பிரபாகரன் தான் செய்த பாவங்களுக்கு பிராயசித்தம் தேட நினைத்திருப்பாரோ என்று தோன்றுகிறது.

தீர்க்கதரிசி முனியே! கனடா ஈழநாடு பத்திரிகை செந்தாமரையின் மஞ்சரிக்கு எதிராக இங்கு ஒரு சஞ்சிகை தொடங்க கூடும் என்று சொன்னாயே அதுபோல ஈழநாடு பத்திரிகை சுவடுகளை வெளியிட்டிருக்கிறது இதுபற்றி உனது அபிப்பிராயம்?
வசந்தன் ஸ்காபரோ
புலி சுவடு பிடித்துப் போகுது... மரையே கவனம்

முனிவரே! எனக்குத் தெரிந்த ஒருவர் ஊருக்குப் போய் சீதனமும் வாங்கி கல்யாணம் செய்துவந்தார். பிறகு கொழும்பிலிருக்கும் மனைவியுடன் போனில் பேசியே சீதனக்காசு முழுவதையும் பெல் கனடாவுக்கு கட்டிவிட்டதாக அழுது கொண்டிருக்கிறார் ஜெயந்தீசனிடம் சொல்லி இதைக் குட்டிக் கதையாக எழுதச் சொல்லுமேன்.....!
கலாப்பிரியன் ஸ்காபரோ
Phone ஆல் போகட்டும் போடா.....

ஜென்டில்மென் படப்பாட்டுக்கள் எப்படி?
கிறிஸ்டினா, ரொறன்ரோ
"ஜிகு...ஜிகு...ரயிலே...." "ஒட்டகத்தை கட்டிக்கோடி" இரண்டும் ஓரே மாதிரி துள்ள வைத்தாலும் அந்த "பாக்காதே பாக்காதே" என்ற சத்தம் அடிக்கடி என் காதில் ஒலிக்கிறது. எங்கேயோ கேட்ட மாதிரி இல்லை...?

முன்பு காதலைப்பற்றி அடிக்கடி எழுதுவீர் ஏன் இப்போது அதைக் குறைத்துக் கொண்டீர்?
கிறிஸ்டீனா
காதலைப்பற்றி தெரியவேண்டுமானால் ஸ்கூலுக்கு போங்கள் அல்லது தியேட்டருக்கு போங்கள். என்னிடம் மட்டும் அதை கேட்காதீர்கள்.... க்கும். ..க்கும்.... (சோகம்) நான் காதலுக்கு எதிரியல்ல... எனக்கு காதல் எதிரி... க்கும்...க்கும்..(சோகம்)

ஊரில் இருக்கும் புலிகளுக்கும் இங்கு இருக்கும் புலிகளுக்கும் என்ன வித்தியாசம்?
சிவா ரொரன்டோ
அவர்கள் முரசறைகிறார்கள் என்றால் இவர்கள் உடுக்கடிக்கிறார்கள்.

கனடா வரிமுறையை தமிழீழத்திலும் நடைமுறைப் படுத்தி ஆட்சியை அமைத்தால் எப்படி இருக்கும்?
காங்கேய சர்மா மொன்ரியால்
கனடா வரிமுறையா? தமிழனுக்கா? ஒரு பயலும் Tax கட்ட மாட்டான் ஆனால் எப்படியாவது Tax return ஐ மட்டும் வறகிக் கொண்டு மாறிவிடுவார்கள். கஜானா காலி. ஆட்சி அம்போ.

கனடாவில் வாசிப்புப் பழக்கம் அதிகரித்து வருகிறதா?
கே.எஸ், மொன்றியல்
வாசிப்புப் பழக்கம் அதேயளவில்தான் இருக்கிறது Gossip பழக்கம் தான் அதிகரித்து வருகிறது.

குட்டிக்கதை ஜெயந்தீசன் திடீரென காதல் கவிதைகளில் இறங்கிவிட்டாரே ஏன்?
சாந்தி ஸ்காபரோ
" எதையேனும் சார்ந்திரு
கவித்துவம்
தத்துவம் காதல், இங்கிதம்
சங்கீதம் இப்படி
எதன்மேலும் சாய்ந்திரு
இல்லையேல் உலகம்
காணாமல் போய் விடும்."

ஒரு புதிய சஞ்சிகை வெளியிடவுள்ளேன் ஒரு பெயர் சொல்லும்?
பிரசாத் ஸ்காபரோ
ஐயோ ....ஐயோ நீருமா... இன்னொன்றா...?
ஊரான ஊரிலை இந்த பத்திரிகை விடுறவங்க தொல்லை தாங்க முடியலேடா தம்பி ராமசாமி...

வீதிவிபத்துக்களில் மரணமாகும் தமிழர்கள் தொகை, அகப்படுபவர் தொகை என்பன இங்கு அதிகரித்து வருகிறதே முனிவரே!
குணா ஸ்காபரோ
ஆம்...அடிக்கடி இதைக் கேள்விப்படுகிறோம் விகிதாசாரம் வேண்டுமானால் குறைவாக இருக்கலாம் ஆனால் தொகை அதிகரித்து வருகிறது கடுகதி வீதிகளில் பயணம் செய்யும் தமிழ் சாரதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுதான் இதற்குக் காரணம் விபத்துக்களைத் தடுக்க அவதானம் தேவை என்று சொல்வதைத்தவிர இதற்கு என்னிடமிருந்து வேறுவிதமான பதில் கிடையாது. (ரோட்டில் போகும்போது தகப்பன் முன்னால் சிவப்பு விளக்கெரியவே வாகனத்தை நிறுத்துகிறார். பிள்ளை கேட்கிறது "அப்பா! ஏன் சிவப்பு லைட் எரியுது?" "மகனே! போகப்படாது என்று சொல்லத்தான் அந்த லைட் எரியுது" "அப்ப ஏன் இரண்டு சிவப்பு லைட் எரியுது??" "மகனே! போகப்படாதெண்டா போகப்படாது...!)

# ஜேர்மனியில் தமிழ்க் குழந்தை கடத்திக் கொலை

ஜேர்மனியில் கடந்த ஒரு மாத காலத்திற்குள் மூன்று வெளிநாட்டுப் பெண் குழந்தைகள் கடத்தப பட்டுள்ளனர். இவ்வாறு கடத்தப்ப ட்டவர்களில் தமிழ்ச்சிறுமி ஒருவரும் அடங்குவார்.

ஆகஸ்ட் 26ம் திகதி பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்ற சுஜிதா புவனேஸ்வரன் என்ற 13 வயதுச் சிறுமி வீடு திரும்பவில்லை. அவரின் எரிந்த உடலை ஜேர்மன் ஒல்லாந்து எல்லையில் உள்ள ஆகன் என்ற நகரை அண்மித்த காட்டில் கண்டெடுத்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை அவ்வழியாக உலாவச் சென்ற ஒருவர் சிறுமியின் எரிந்த உடல் பற்றிய தகவலைப் பொலிசாருக்கு அறிவித்த போதிலும் வியாழக்கிழமையே இவர் அடையாளம் காணப்பட்டார்.

இதே போல எசன் நகரைச் சேர்ந்த லெபனுனியக் குழந்தையான அபீர் என்ற 12 வயதுச் சிறுமியும் காணுமல் போயுள்ளார். மாலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து கடைக்குச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை. அவர் பற்றிய தகவல் இன்னும் இல்லை.

இச்சிறுமியின் வீட்டின் அருகில் வாழ்ந்த மரியானு என்ற பொஸ்னியாவைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமியும் காணுமல் போயுள்ளார். இவரது உயிரற்ற உடல் நீடர் சாகன் என்றும் மாநிலத்தில் 300 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் கண்டெடுக்கப்பட்டது.

ஸ்ருட்காட்டர் ஸைட்டுங் என்ற பத்திரிகையில் இச்செய்திகள் வெளிவந்திருந்தன. இக்கடத்தல்கள் நவநாசிகளால் நடத்தப்படுகின்றனவா அல்லது உடலுறுப்புகளை விற்பனை செய்பவர்களால் நடத்தப் படுகின்றனவா என்பது பற்றி தெரிய வில்லை. பாடசாலைகளுக்குச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோர்கள் தற்போது பெரும் பீதியுடன் வாழ்கிருர்கள். (தகவல்:பரா)

# பிரேமாவின் பயணத்திற்கு இரண்டு கோடி செலவு

ஜனுதிபதி பிரேமதாசா இறப்பதற்கு முன்ஞல் ஆறு நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தார். இதற்கான மொத்தச் செலவுகள் இரண்டு கோடி ருபாய்க்கு மேல் என்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேமதாசா, மனைவி, பாதுகாப்பு அதிகாரிகள், அரசாங்க அதிகாரிகள், பத்திரிகை யாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் ஆகியோர் இக்குழுவில் சென்றனர்.

சார்க் மாநாட்டுக்கு சென்ற போது மொத்தச் செலவு 77 லட்சத்துக்கும் அதிகமாகும். டாக்கா மாநாடு ரத்துச் செய்யப்பட்ட போதும் அவர் டாக்கா சென்றிருந்தார்.

மாலைதீவுக்கு சென்ற போது நாற்பது லட்சம் ருபா செலவு செய்யப்பட்டது. இந்தியா உட்பட மற்ற நாடுகளுக்கு சென்ற போது அறுபது லட்சத்துக்கு மேல் செலவானது.

---

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் ஒன்றுகூடல்**

26.9.93 மாலை 5.30 மணிக்கு
தமிழர் கூட்டுறவு இல்லம் 20, வேட் அவனியூ
3ம் மாடி மண்டபத்தில் நடைபெறும்.
தொடர்புகளுக்கு;
264 4779 264 4000
750 8761

---

**உதை பந்தாட்டம்**
**மலேசியா கிண்ணம் 93**

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 09-18-93 சனிக்கிழமை நடைபெறுகின்றது.

HIGHVIEW PARK
(KENNEDY/ HIGHVIEW)
நேரம் பி.ப. 3 மணி
பங்கு கொள்ளும் கழகங்கள்;- மலேசியன் .வி.க. VS ரொறண்டோ புளூஸ்

---

பாலிமென்ட் வீதி நூல்நிலையமும் ரொரன்டோ தொழிலாளர் தகவல் நிலையமும் ஒருங்கிணைந்து
"வேலையற்ருேர் காப்புறுதித்திட்டம் "
"வேலையிலுள்ளோரின் உரிமைகள்"
"வேலையற்ருேர் காப்புறுதித்திட்டம்"
ஆகிய கருத்தரங்குகளை தமிழில் வழங்குகின்றன
வியாழக்கிழமை- செப்டம்பர் 23 ம் திகதி
பி.ப 6.30 மணிமுதல் 8.00 மணிவரை
269 ஜெராட் கிழக்கு
தொலைபேசி; 393-7663

---


**Antony Brothers Fashion House**
1484 Queen St West
சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள், பரிசுப் பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் மலிவு விலையில்

சகல விதமான அச்சுவேலைகளுக்கும்.....

**920 7741**

**QUIK GRAFIX**



# GAMINI WANIGASEGARA

**(416) 449 4294**

**BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC**
**BARRISTER-AT-LAW (ENGLAND)**
**ATTORNEY-AT-LAW (SRI LANKA)**

**Suite 600, Don way West**
**Don Mills, Ontario**
**Fax:(416) 449 4369**

**30 YEARS EXPERIENCE IN ENGLAND, SRI LANKA & TORONTO, CANADA**

**REAL ESTATE**
**BUSINESS**
**CRIMINAL LAW**
**FAMILY LAW**
**ESTATES**

- BUYING, SELLING, MORTGAGING
- PURCHASE OF BUSINESSES & CORPORATIONS
- INCORPORATIONS
- ALCOHOL RELATED OFFENCES
- SEPARATION AGREEMENTS, DIVORCE
- LAST WILLS

காணி நிலம்: வாங்க, விற்க
வியாபாரம்: வாங்க, இணைத்தல்
குற்றச்சட்டம்: மது சம்பந்தமான குற்றம்
குடும்பச்சட்டம்: பிரிவு, விவாகரத்து
சொத்து: கடைசி உயில்

தமிழிலும் உரையாடலாம்

## ஞானம்ஸ் ஸ்டுடியோ

ஆறு வருட கனடா அனுபவம்
தலைசிறந்த படப்பிடிப்பாளர்கள்
நவீன தொழில் நுட்பம்
அனைத்தையும் ஒருங்கே கொண்டது
ஞானம்ஸ்

★ திருமணம்
★அரங்கேற்றம் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் எம்மை முதலில் அழையுங்கள்

# 750 8118

# GNANAMS STUDIOS

**2387 Eglinton Ave E #1**
**(At Kennedy, Top of Beckers)**

★ மனதை விட்டகலா படங்களை மீண்டும் படம் பிடித்து தரம் குறையாது பெரிதாக்கி மகிழ்ந்திட

★ வண்ண வண்ண வடிவங்களில் உங்கள் குடும்ப, குழந்தைகளின் படங்களை பார்த்து மகிழ்ந்திட

★ Film roll developing and printing நவீன கொம்பியூட்டர் தொழில் நுட்பத்துடன் color density, skintone correction செய்து நிறம் மாறாத படங்களாகப் பார்த்திட

**High Quality albums, frames**

பாஸ்போட் படங்கள் பத்து டொலர்கள் மட்டுமே

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550**
**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification 29.99**

Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric
திருத்துவதில் பல வருடம் அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# சுழுக்கு

("தாயகம் " என்ற தலைப்பில் இந்த வாரம் ஒரு குட்டிக்கதை எழுதப்படும் என போன வாரம் அறிவித்திருந்தேன் அல்லவா! கதையை எழுதி முடித்ததும் மர்மக்கதை பாணியில் எனது ஹாஸ்டல் றூம் கதவு தட்டப்பட்டது. திறந்தேன். உதட்டைக் கோணலாக்கி கோபத்துடன் கடித்தபடி திருமதி O திறில்மதியாகி அங்கே நின்றார். "கதையைக் காட்டும்" என அவதிப்பட்டா. Wish உம் Kiss உம் ஒன்றாகக் கிடைக்குமென்ற கனவில் கதையைக் காட்டினேன். வாசித்து விட்டு தூள்தூளாகக் கிழித்து ஜன்னலால் எறிந்துவிட்டு, "உம்மிட்டை 18 இல்லையெண்டா என்னிட்டைக் கேட்டிருக்கலாம் தானே........" என்றபடி 18 ஐத் தந்தா. உடனே நான் "32 ஐக் காட்டுங்கோ" என்றேன். உடனடியாகவே நான் சொன்னதை மாறி விளங்கி, தனது முத்துப் பற்கள் 32 ஐயும் காட்டினா... பிறகு என்ன நடந்தது என்பதெல்லாம் குட்டிக்கதை சமாச்சாரம் அல்ல, உங்களுக்குத் தேவையானதும் அல்ல.. சரி....... மாலதிக்குக் கழுத்தில் சுழுக்காம்.....முதலில் போய் அதை எடுத்து விடுவோம்.....)

---

கற்புக்கரசி மாலதிக்கு கழுத்திலே சுழுக்குப் பிடித்துவிட்டது. வலியால் துடி துடியென்று துடித்தாள். "ஒருபக்கமாக் கழுத்தை வைச்சுக் கொண்டு படுத்திட்டால் விடியுறதுக்குள்ளை மாறிடும்" என்று கற்புக்கரசன் பொன்னீலன் இரண்டு வாரங்கள் சொல்லிப் பார்த்தும் சுழுக்கு நிற்கவில்லை. அந்த வீட்டிலிருந்த கன்னி கழியாக் கட்டிளம் காளையான ரகுபதி, அண்ணன் இல்லாத நேரம் பார்த்து அக்காவிடம் சென்று "அக்கா, ஒரு மசாஜ் செய்து விட்டா சுழுக்கு டக்கென ஒடிப் போயிடும்" என்றபடி, அவவின் பெர்மிஸன் இல்லாமலேயே கழுத்தில் கையைப் போடப் போனான். தமிழ் சினிமா பாணியில் பின் வாங்கிய மாலதி, "படுவா மசாஜ் செய்யப் போறாராம் மசாஜ். உனக்குப் பாத்தது பாங்கொக்கிலை வந்து நிற்குது. இங்கை வந்தோண்ணை அதுக்கு மசாஜ் செய்யடா... உன்ரை சேட்டை என்னிலை பலிக்காது" என்றதும், சதுரம் நடுங்க, சூட்கேசையும் தூக்கிக் கொண்டு ரகுபதி இறங்கி ஓடிவிட்டான். ஆனால், மாலதிக்கோ சுழுக்கு நிற்கவில்லை. ஐரோப்பிய வைத்தியர்களும் தங்கள் கையை விரித்து சர்வதேச மருத்துவ ஆய்வு நிறுவனங்களுடன் ஆலோசித்துப் பார்ப்பதாகச் சொல்லி விட்டனர். இரண்டு மாதமாகியும் சுழுக்கு நிற்காதது பாரிஸில் கிசுகிசுவாகவே மாறிவிட்டது. பெண்ணிலைவாதிகள் சிலர் பொன்னீலன் அடித்ததால்தான் மாலதிக்கு தீர்க்க முடியாத சுழுக்கு வந்துவிட்டது என்றும், பொன்னீலனை தட்டி விட்டால், ஏனைய பெண்களுக்கு இதுபோன்ற சுழுக்கு வருவதைத் தவிர்க்கலாம் எனப் புரட்சிகரமான முடிவு எடுத்தனராம் எனக் காதில் விழுந்தது.

இந்தப் பிரச்சனையால் எனக்கும் காலும் ஓடவில்லை கையும் ஓடவில்லை. எமது வாலிபர் சங்கம் கட்டாயம் இதற்குள் தலையிட்டுத் தீர்வு காணவேண்டும என உறுதி எடுத்தபின்னர் சங்கத் தலைவர் அப்புவிற்கு (இவருக்கு 22 வயது. தலையெல்லாம் பஞ்சுபோல நரைத்துவிட்டதால் இவரை நாங்கள் அப்பு எனச் செல்லமாக அழைப்பதுண்டு) போன் பண்ணியவுடன், என்னைப் போலவே தானும் நினைத்ததாகச் சொல்லிக் கொண்டார். எமது செயற்குழு GARD DU NORD இல் உள்ள BAR ஒன்றில் கூடியது. அதிசயம், ஆனால் உண்மை. என்னைத் தவிர எல்லோரிடமும் ஒரேயொரு தீர்வுதான் இருந்தது. அதாவது மாலதிக்கு மசாஜ் செய்தல். பொன்னீலன் இயக்கமொன்றிலே "முக்கியமான" பொறுப்பில் இருந்தவன் என்ற செய்தி யைக் காதில் போட்டதும் அவர்கள் ஒடித் தப்பி விட்டனர். அறுவாங்கள் குடிச்சதுக்கெல்லாம் நானே காசைக் கட்டிவிட்டு கவலையோடு வீடு வந்து சேர்ந்தால், போன் அடித்து, எடுத்தேன். அது பொன்னீலன்.

"ஜெயந்தீஸன், உங்களைப் பிடிச்சா சுழுக்கை எடுக்கலாம் எண்டு உப்பத்தான் ஒரு பிள்ளை அடிச்சுச் சொன்னது. அவளைக் கூட்டிக்கொண்டு உப்பவே வரட்டே?"

"ஐயோ அண்ணை, எனக்குப் பார்வை பார்க்கத்தான் தெரியும். சுழுக்கு எடுக்கத் தெரியாது" என்று சொல்லிக் கொண்டிருந்த போதுதான் ஆபிரிக்க தேசமான மாலியில் வாழுபவரும் பில்லி சூனிய வித்தைகளில் விண்ணனுமான எனது தம்பி புதுமைப்புத்தனின் நினைவு வந்தது. அவரிடம் அவளைப் பற்றிச் சொல்லி, வாற போற ரிக்கெட் செலவையும், கையிலை 10000 பிராங்கும் கொடுத்தால் அவன் வந்து சுழுக்கை எடுத்திட்டுப் போவான் என்றதும் அவர் "10 இல்லை, 20 உம் குடுப்பன். உடனே ஆளை வரச் சொல்லும்" என்றார்.

★ ★ ★


ஆபிரிக்காவிலிருந்து புதுமை எனது இரண்டாவது அண்ணியுடன் வந்து இறங்கியது. மூத்த அண்ணியில்தான் எனக்கு நல்ல வாரப்பாடு. ஏன் அவவையும் கூட்டிக்கொண்டு வரவில்லை என நான் சீறினேன். பெறுமாதமாம் என ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு, "பெட்டையை இஞ்சை கூப்பிடு, உடனை சுழுக்கை எடுத்துவிடுறன்" என்றுவிட்டு ஐரோப்பிய வைத்திய முறையைக் கொஞ்சம் திட்டித் தீர்த்தான்.

* * *

"ஐயோ! ஐயோ!" என்று கத்திய நிலையில் மாலதி எனது றூமிற்கு அழைத்து வரப்பட்டாள். "என்ரை மனிசியின்ரை உயிரைக் காப்பாத்திற பொறுப்பை உங்கடை கையிலை தந்திட்டன்." என்றபடி பொன்னீலன் பயபக்தியுடன் கையைக் கட்டிக் கொண்டு நின்றான். புதுமையின்


16ம் பக்கம் பார்க்க.

# WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL










## DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




## NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.

## VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY : FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




## CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

# Antony Brothers Peoples Market

**1472 Queen St West**
**Tel:516 3903**

**இவ்வார விசேட விலைகள்...**

பல்கன் பஸ்மதி அரிசி 6.99
4 றாத் மைசூர் பருப்பு 2.49
2 லீற்றர் கொக்கோ கோலா 1.59
சன்யோ T 20 வீடியோ கசட்டுக்கள் 2.99
உள்ளி .99

பால் 2 % 2.99
தயிர் 1.59
மரக்கறி எண்ணெய் 2.99
பத்து றாத் வெங்காயம் 1.99
கோழிக்கால் றாத் 79 சதங்கள்
10 கிலோ பார்பொயில் அரிசி 5.99

**எம்மிடம் சகலவிதமான மரக்கறிகளும் மலிவு விலையில்**

## இருத்தலியல் விசாரணைகள்

எஸ். கௌந்தி

# உலக தத்துவ வறுமை; ஓர் குருவிப் பார்வை

தத்துவஞானத்தினது முகங்கள் பல. உண்மை மீதான தேடலிலே தமது சிந்தனையைக் குவித்தோர் ஒவ்வொரு கோணத்திலே நின்று ஒளியைக் காட்ட எத்தனித்துள்ளனர். இது எவ்வாறு தனிமனிதர்களினுல் கிரகிக்கப்பபட்டது, உண்மையிலேயே தத்துவபோதனைகளும் கண்டுபிடிப்புகளும் மனிதவாழ்வியலில் திரும்புமுனையை ஏற்படுத்தினவா என்ற கேள்விகளுக்கூடாகவே உலக தத்துவ வறுமை மீதான விசாரணையைத் தொடங்க வேண்டியுள்ளது. உலக தத்துவ வரலாறு பற்றிய பொதுவிளக்கமொன்று இத்தொடருக்கு அவசியம் எனக் கருதியபோதும், பிறிதொரு தனித்த அத்தியாயத்தில் அது சேர்க்கப்பட்டுள்ளதால், இந்த அத்தியாயம் தத்துவ வறுமை மீதான அபிப்பிராயங்களை மட்டுமே உங்கள் முன் வைக்கும்.

மனித இருத்தலை நாம் எப்படி விளங்கிக்கொள்வது. இருத்தல் நித்தியமானதல்ல. அநித்தியமானது. இதனை "இருத்தலற்ற இருத்தல்" எனும் பதத்திற்கூடாகவே விளங்கிக் கொள்ளுதல் பொருத்தமானதென்பது என் கணிப்பீடு. ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் இருத்தல் பற்றிய விசாரணை எழுதல் தவிர்க்க முடியாதது. இருத்தலின் இருத்தலின்மைக்கெதிரான போரிலே எவருமே வெற்றி பெறமுடியாது. இந்த வாதம் ஆன்மீக போதனையாகச் சிலருக்குப் படலாம். விஞ்ஞான மயப்படுத்தப்பட்ட தத்துவ வாசிப்புகளிலே தேர்ச்சி பெற்றோர் விளங்கிக் கொள்ளும் உண்மைகளுக்கும், தனிமனித சுய விசாரணைகளுக்குமிடையே நிறைய முரண்பாடுகள் உள்ளன. மரணம் பற்றிய கேள்விகளுக்கூடாக இருத்தல் பற்றிய உண்மைகளை விளங்க ஒவ்வொரு தனிமனிதனும் எத்தனிக்கின்றான். விளக்கத்தைப் பெறுகின்றானோ இல்லையோ மரணம் இவனுக்குச் சம்பவிப்பது மட்டும் திண்ணம். ஆனால், அளவுக்கு மீறிய தத்துவபோதனைகளும், பல்வேறுபட்ட தத்துவ அலகுகளும் மறைமுகமாக இருத்தலெதிர்ப்பு இயக்கமாகவே தம்மை ஆக்கிக்கொண்டுள்ளன. தத்துவஞானிகளின் பெருக்கத்துக்கு மத்தியிலே காணாமல் போன உண்மை நிச்சயமாக உலக அரசியல் இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது.

* * *

மார்க்ஸினது இளமைக்கால வாசிப்புகளிலே தனித்த இடத்தைப் பெற்ற ஸ்பினோஸா, தனது "அரசியல் அதிகாரத்தின் கோட்பாடுகள்" என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயத்திலே பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாக இருக்கவேண்டும்" என்ற அர்த்தம் தொனிக்க எழுதியுள்ளார். மார்க்ஸினது ஆதர்ஷபுருஷராக இருந்த இந்த தத்துவஞானியினது இந்த அபிப்பிராயத்தை ஒளித்து வைத்துவிட்டே இவர் மீதான ஆராய்ச்சிகள் பேராசிரியர்களால் நடத்தப்படுகின்றன. ஸ்பினோஸாவை ஓர் ஆணாதிக்கவாதியாகக் காட்டிவிடுவதோ, அல்லது இவரது இலக்கியங்களின் சமூகப் பெறுமானத்தை மறுதலிப்பதோ என் நோக்கமல்ல. ஆனால்... தத்துவ போதனாசிரியர்களாகத் தங்களை வரித்துக்கொண்டோர் குழம்பிய மனதையும் கொண்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டவே.

* * * *

உலகப் புகழ்பெற்ற ஜேர்மனிய தத்துவஞானியான மார்ட்டின் ஹைடேக்கர் தனது இளமைப் பிராயத்தில் யூத எதிர்ப்பு வாதத்திற்கு எதிராகப் போராடி நாஸிகளால் பிடிபட்டவர். சிறையை விட்டு வெளியே வந்த இவர் பல ஆண்டுகளைத் தத்துவ உற்பத்திக்கே காணிக்கையாக்கிவிட்டு தனது கடைசிக்காலங்களில் ஹிட்லரினை ஆதரித்து மேடையொன்றில் ஏறிப் பேசியுள்ளார். "இருத்தலும் காலமும்" என்ற புத்தகத்தை எழுதிய இவர் பெற்ற கடைசி ஞானம் யூதர்கள் அனைவரையும் அழித்து விடுவதே எனக் கொள்வதா? ஹிட்லரை ஆதரித்து ஹைடேக்கர் பேசியது உண்மையே எனினும், இவர் யூத எதிர்ப்பு வாதியல்லர் எனப் பேராசிரியர் ஒருவர் புத்தகம் எழுதியுள்ளார். ஹைடேக்கர் சொன்னால் குற்றமில்லை என்ற விதத்தில் தத்துவ ஞானத்தைப் பார்த்தல் அபத்தம்.

* * *

உபரிப்போதனை உண்மைக்கும் குந்தகம் விளைவிப்பது. இதனை விளங்கியதால்தானோ என்னவோ "எனக்குத் தெரிந்தது எதுவெனில் எனக்கு எதுவுமே தெரியாதென்பதுதான்" என கிரேக்க தத்துவஞானியான அரிஸ்டோட்டில் சொல்லிக்கொண்டார் போலும். கார்ஸ் மார்க்ஸோ, "எனக்குத் தெரிந்தது எதுவெனில், நான் மார்க்ஸிஸ்ட் இல்லை என்பதுதான்" என்கிறார். இந்திய தத்துவஞானியான ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியோ தன்னை யாரும் குருவாகக் கொள்ளாதிருக்குமாறு கேட்டுக்கொண்டார். இதனது அர்த்தம் தனக்குச் சீடர்கள் தேவையில்லை என்பதுதான். ஆனால் உலகம் முழுவதிலும் கிருஷ்ணமூர்த்தி நிலையங்கள் தொடக்கப்பட்டு சீடர்கள் சேகரிக்கப்படுகின்றனர். பிரெஞ்சுத் தத்துவ ஞானியான பாஸ்கலோ, தனது "சிந்தனைகள்" என்ற படைப்பில் "எவன் தத்துவஞானத்தைத் தாக்குகின்றானோ அவனே தத்துவஞானி" என எழுதியுள்ளார். இத்தகைய அடக்கமான வாக்குமூலங்களை சமகால தத்துவ இயக்கத்தினூடு காணுதல் அரிது. எல்லாம் தனக்குத்தெரியும் என்ற ஓர் விகாரமான போக்கினை இது சுவீகரித்துக் கொண்டுள்ளது.

* * *

உண்மை பற்றிய தேடல் என வரும்போது அங்கே மனித

ம.ப.பார்க்க..

## இருத்தலியல்..

இருத்தலிற்கு மட்டும்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்றில்லை எமக்கு விசித்திரமாகப்படும் உலகினதும் வான மண்டலங்களினதும் தோற்றம், இயக்கம் பற்றிய தேடல்களும் இதனூடு தவிர்க்க முடியாததாக அமைகின்றது. ஆனல் நாம் ஏன் தேடுகின்றோம், எங்கிருந்து தேடுகின்றோம் என்பவைகள் பற்றிய தெளிவான பார்வைகள் அவசியம். உலகினதும், உடலினதும் இயக்கத்திலே அணுவின் தாக்கம் பற்றி கி.மு. 6 ஆம் நூற்றுண்டில் DEMOCRITE கண்டு பிடித்துச் சொன்ன உண்மைகளை ஒருபக்கம் வைத்துவிட்டு, இந்த நூற்றுண்டின் மிகப்பெரும் பௌதிக விஞ்ஞானியான ஆல்பேர்ட் ஐன்ஸ்ரீன் கண்டுபிடித்த அணுக்கோட்பாட்டிற்கு (இந்தக் கண்டுபிடிப்பு இந்திய விஞ்ஞானியான போஸ் உடனும் சம்பந்தம் கொண்டது. ...) என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம் இதனது முதலாவது அறுவடையை நாம் நாஹா சாக்கியிலும், ஹிரோஷி மாவிலும் கண்டோமல்லவா! ஐன்ஸ்ரீன் பிற்காலத்திலே தனது கண்டுபிடிப்பு மனித உயிர்களை அழிக்கப் பயன்படுத்தப்பட்டுவிட்டதே என்பதற்காகவும், தான் மனித சமாதானத்தினை நோக்கமாகக் கொண்டே அதனைக் கண்டுபிடித்தாகவும் சொல்லி வருந்தியவர். தத்துவத்தின் ஓர் பிரதான கூறுக பௌதிகவியல் அமைந்துவிட்டதாலேயே பௌதிகக் கண்டுபிடிப்புகளை வைத்து இருத்தலை மிரட்டுதல் என்பதைச் சுட்டிக்காட்ட ஐன்ஸ்டீன் உதாரணத்துக்கு எடுக்கப்பட்டார்.

தொடரும்

* * *

## சுழுக்கு..

கண்கள் மாலதியை துருவிப் பார்க்க வெளிக்கிட்டது. பின்னர் மாலி தேசத்து பம்பாரா பாஷையில் சின்னண்ணியுடன் ஏதோ பேசிவிட்டு பொன்னீலனைப் பார்த்து வாயைத் திறந்தது.

"ஓய்! இரும்பிலேயே தங்கத்திலேயே செய்து போட்டனீர்?"

பொன்னீலனுக்கு எதுவும் விளங்க வில்லை. மலங்க மலங்க விழித்தான்.

"உவளின்ரை கழுத்திலே கிடக்கிற தாலியைத்தான் கேட்கிறன்" என்றதும்

"தங்கம், அசல் தங்கம்..." என்ருர்.

"எத்தனை பவுண்?"

"61. என்ரை தம்பி தன்ரை மனிசிக்கு 51 இலை செய்து போட நான் போட்டியிலை என்ரை மனிசிக்கு 61 இலை செய்து போட்டனுன்"

"போட்டிக்குப் போடுறதிலை பிழையில்லை. ஆனு, அதை நெடுகையும் கழுத்திலை கிடக்க விடக்கூடாது. கலியாணவீடு, பிறந்தநாள் எண்டு வரேக்கை மட்டும் போட்டிட்டு உடனை கழட்டி வைச்சிடவேணும். உப்ப விளங்குதுதானே!" என்றபடி, மாலதியை அண்மி, அவளது கழுத்தில் கிடந்த தாலியைக் கழட்டி, பொன்னீலன் கையிலே கொடுத்தான். சுழுக்கு நின்றது. மாலதியின் முகம் மலர்ந்தது. சொன்னபடி, 20 ஐக் கொடுத்துவிட்டு பொன்னீலன் அவளுடன் இறங்கிவிட்டார். மாலியில் தனக்குப் பல சோலிகள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு புதுமையும் இறங்கி கொண்டது.

## முத்துமாரி அம்மனுக்கூடாக B.N.P.வங்கி முகாமையாளருக்கு

1.03.93 இலிருந்து 31.05.93 வரை
மேலதிகமாக உங்களிடமிருந்து பெற்ற பணத்திற்கு
91.12 பிராங்குகள் வட்டியாக அறவிட்டதற்கு
நன்றி ஐயா!

எனக்கு பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சனைகளும்
கனவுகளுக்கு மேல் கனவுகளும் அதிகம்

செத்தைப் பல்லி கத்தி என்ன?
இந்த வெக்கைக்கு
வெள்ளரிப்பழத்திற்குப்பதில் மெலோன் பழம்தான்
உனக்குக் கிடைக்குமென
அதுமுன்னர் சொல்லிற்று?

ஒரு பேய் வெள்ளரியைக்கூட
இனி உன்னல் காண இயலாதென்று
அது சொல்லிற்ரு?

அம்மன் கோயில் குளிர்த்திக் கஞ்சி
இனி உனக்கு எப்போதும் கிடைக்காதென்றும்
அடிபட்டு நெருக்குப்பட்டு
ஒரு கிழிந்த பிளாவைத்தன்னும்
பெற உன்னல் இனி இயலாதென்றும்
அது சொல்லிற்ரு?

கட்டுறுதியோடு எனை வளர்த்துப்
பறி கொடுத்த என் நாடே!

என் யௌவனம் அழிகின்றது
என் கண்களில் ஒளி இழந்தேன்
உடல் கூனி சருமம் வறண்டு
கோவணத்திற்குக்கூட அழகில்லாதவனுய் அழிகின்றேன்.

எதை நான் பெற்றேன்?
எதை நான் வழங்கினேன்?

எனை வளர்த்துப் பறிகொடுத்த எந் நாடே!
நான் விரும்பியபடிக்கெல்லாம் வாழ
கண்குளிரக் கனக் கண்ட என் நாடே
என் முத்துமாரி தாயே!
வேதனைக்கு மாற்று தெரியவில்லை
பூனை மயிரும் நீண்ட முடி மண்டையும்
பாவைகளுடனே மந்திரத்தகடும்
என் வீட்டுக்குள்ளே புதைத்தவர் யார்?

சுகன்(பிரான்ஸ்)

# விறைப்புகள்

சொல்லி மாழாது உனக்கு
எந்தச் சொல்லும் போதாது எனக்கு
என்ன எதுவென்று சொல்வேன்
என் சித்தம் கொதித்தது மட்டும்
ஏன்.......என் நெஞ்சம் அவிந்து
புண்ணுகித் துடித்துப் போனதும் கூட
சில சமயங்களில் ...கணங்களில்
விறைத்துப் போய் தவித்து —
அந்த விறைப்பே தவிப்பே
என் வாழ்க்கையாய் இன்று!

சொல்கிறேன். உனக்கு மாத்திரமே!
சிந்திக்கத் தெரிந்தவன்(ள்) என்பதனுல்
எச்சரிக்கை செய்கிறேன்!
இந்த வெப்பத்தில் உன் இதயம்
எரிந்தும் கூட போகலாம்!
அதனுல் கொஞ்சம் கொஞ்சமாய்...
சிறிதாய் உன் செவிப்பறைகளை
திறந்து வைத்துக் கொள்!

சொல்லப் போவது நிஜமான நிஜம்
இதுவொன்றும் சொல்லாத சேதிகளல்ல
யாருமே கண்டுக்க விரும்பாத சேதிகள்!
சேவல் கூவுவதெல்லாம் இங்கு
தெரியாமல்தான் போய்விட்டது!
ஆனுலும் கொக்கரிக்கத்தான் யாரோ
சொல்லிக் கொடுத்து விட்டார் போலும்!

கடைசித் தம்பிக்கு
கலகலப்பாய் கலியாணம்
பத்தை பதினைந்தாய் வாங்கிக் கொடுத்து
தானும் கொஞ்சம் எடுத்துக் கொண்டதில்
மூத்தக்காளிற்கு மூக்கு முட்டிய
சந்தோசம்!

நாலுவருஷம் கழிந்து போக
அக்காளின் மூன்று பிள்ளைகளும்
அடுக்கடுக்காய் வயுதிற்கு வந்துவிட
அக்கா மூக்கில் ஜலமாய் சிந்தியபடி!
"இந்த கேடுகெட்ட சமுதாயம்
இந்த நாட்டிலேயும் வந்து
சீதனமெல்லாம் கேட்குதுகள்!"

நெஞ்சு அந்த கணத்தில்
எனக்கு விறைத்துத்தான் போனது!

மற்றவனை சாதியால் பெயர் சொல்லி
மாளாமல் திட்டிக் கொண்டேயிருப்பதில்
அவரிற்கு அலாதிச் சந்தோசம்!

கோப்பை கழுவிவிட்டு
வீதியோரமாய் நடந்து வர
வெள்ளையொருவன் அவரைப் பார்த்து
"பாக்கி" என்று சொல்லிப் போட்டானும்!
பரிதாபமே முகமாய் வந்து
உளைச்சலையெல்லாம் கொட்டிக்
கொள்பவர்!
"இவங்களெல்லாம் மகா RACIST

அப்போதும் எனக்கு
நெஞ்சு விறைத்துத்தான் போனது!

எட்டுமணி நேரமாய் என்
இரத்தமெல்லாம் வியர்வையாக்கிவிட்டு
வரிகொடுத்து மிச்சமான
கால்மணி நேரக் காசில்
செய்தி கலை இலக்கியம் படிப்பதற்காய்
பத்திரிகை வாங்கிப் போனேன்!

சின்னச் சின்னச் செய்திகள்
மூலை மூலைகளில்
பஞ்சம் கொட்டி நிற்க
அவனையும் இவனையும்
கூடவே சக பத்திரிகைகளையும்
கடிகடியாய் கடித்து
ஆறேழு முழுப்பக்கங்கள்!
மற்றவரைக் கடித்தெழுதல்தானும்
இங்கு கலையும் இலக்கியமுமாம்!

அப்போதும் நெஞ்சு துடித்து
விறைத்துத்தான் போனது எனக்கு!

கும்பல் கும்பலாய் இன்று
சிறுசிறு குள்ளநரிக்
கூட்டங்கள் இங்கு
மட்டைகள் தூக்கி இரண்டு
மந்தையும் பின்னுல் வந்து விட்டால்
பெரிய சேனைக்கே ராசா
என்ற நினைப்புத்தான் சிலரிற்கு!

ஏன்தானிந்த விகாரங்கள்
நாகரீகம் மறந்துபோய் ஏன்தான்
நாகாசுரர்கள் ஆகிப் போனீர்?

கரையது தேடியே
களைத்தது போதும்!
பாதை தெரியாத
தேடல்கள் வேண்டாமே?!

வேலிகள் போட்டு எங்கள்
வேதனை பெருக்க வேண்டாம்
ஜாதிகள் பெருக்கி உங்கள்
ஜாதகம் பிரிக்க வேண்டாம்!

சில்லறை விடயங்களில்
சந்திகள் சிரிக்க வேண்டாம்!
மட்டைகள் தூக்கிக்கொண்டு
மர மண்டைகள் ஆக வேண்டாம்!

துப்பாக்கிகள் தூக்கிய
துர்பாக்கியங்கள் வேண்டாம்!
துன்மத்தம் கொண்டு நீங்கள்
துன்பங்கள் தேட வேண்டாமே!

**அனந்தன்**

## ஒரு சனிக்கிழமை நினைத்தது

கிழமை தவருமல்
சனிக்கு சனி
கோவிலுக்கு
ஏன் கொண்டு போகிருள் தேவானை
ஏனென்று கேட்டேன்.
புருஷனுக்கு ஏழரையாம்
சாத்திரியார் சொன்னுராம்
சனி பிடித்து ஆட்டுதென்று.
யார் பிடித்து ஆட்டினும்
சனீஸ்வரரின்
பாடு பிழையில்லை
ஏழரை அட்டமம் என்று
எவரேனும் வருவார்கள்
ஒன்பதுபேர் நடுவே
ஒளிருகிற சூரியனில்
சந்திரனில் காட்டிச்
சனீஸ்வரருக்கு மட்டும்
சரியான மரியாதை.

சண்டியரைத் தேடிச்
சன்மானம் போகிறது
நல்லபடி இருந்தால்
நாலுபேர் மதியார்கள்
உமைப் பார்த்துத்
தம்தலையிற்
குட்டுகிற பேரும்
குருக்களுமாய் சேர்ந்து
உம் தலையில் இரண்டு
சாத்துவார் என்ருே
முன்னுலே குந்தி
முழித்திருக்கும் கருங்கல்லுப்
பிள்ளையார் நீரும்
இடையிடையே சேட்டைகளில்
இறங்குகிறீர்,
சொல்லும்.

**புவனம்**

**புதுக்க விதை**

# இஸ்ரேல் பாலஸ்தீன ஒப்பந்தம்

## வரலாற்றுச் சாதனையா....? எதிர்கால வேதனையா....?

பேர்லின் சுவர் உடைப்பின் பின்னர் இந்த உலகில் நடந்த அதிசயம் என இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் (பி.எல்.ஓ) இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் சர்வதேசப் பத்திரிகையாளர்களால் வர்ணிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் செப்ரெம்பர் 13 ம் திகதி வாஷிங்டனில் கைச்சாத்திடப்படும்வரை ஒரு திகிலான சூழ்நிலையே சர்வதேச அரங்கில் நிலவியது.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளில் பாலஸ்தீனியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடனான ஆட்சியை வழங்க வழிகோலும் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவாக இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனியர்களும் ஒன்றுகூடல்களையும், ஊர்வலங்களையும் ஒழுங்கு செய்திருந்தனர். அதேசமயம் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் இரு தரப்பு தீவிரவாத சக்திகளும் எதிர்ப்புக் கூட்டங்களையும் ஆர்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தின. தீவிரவாத அமைப்பான ஹமாஸ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அன்று காஸா மற்றும் மேற்குக் கரைப் பகுதிகளில் ஒரு கடையடைப்பை நடத்தியது.

எதிர்ப்புக்கள் வன்முறையாகவும் வெளிப்பட்டன. ஜிகாத் எனப்படும் இன்னுமொரு தீவிரவாத பலஸ்தீன அமைப்பு இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்தி மூன்று பேரைக் கொன்றனர். இச்சம்பவம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது இது குறித்து ஜிகாத் உறுப்பினர் ஒருவர் கூறியதாவது "யசீர் அரபாத்துக்கு சமாதான ஒப்பந்தத்துக்கும், மற்றும் அனைத்து துரோகிகளுக்கும் நாம் வழங்கியிருக்கும் பரிசே இது" என்கிறார். இன்னுமொரு வன்செயலில் இஸ்ரேலிய பஸ் ஒட்டுநரை கத்தியால் குத்திய அராபியர் ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். தொடர்ந்த வன்செயல்களில் மேலும் இரு பாலஸ்தீனிய இளைஞர்களும் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் வார முடிவுநாட்களில் வன்செயல்கள் எட்டு உயிர்களைப் பலிகொண்டன.

இத்தகைய எதிர்ப்புக்களிடையேயும் செப்ரெம்பர் 13ம் திகதி வாஷிங்டனில் வெள்ளை மாளிகையில் 2500 பேர் கலந்து கொண்ட வைபவம் ஒன்றில் காம்ப் டேவிட் ஒப்பந்தம் கையெழுத்தான அதே மேசையில் வைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. கடந்த காலங்களில் மாறி மாறி எதிரிகள் என்று வர்ணித்துக் கொண்டவர்கள் நண்பர்களாகக் கைகுலுக்கிக் கொண்டனர்.

ஆனால் இந்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் இருதரப்புத்தீவிர வாத சக்திகளால் மட்டுமல்ல ஒப்பந்தத்தின் குழப்பமான அம்சங்களாலும் ஆபத்தை எதிர்நோக்குகிறது. இரு தரப்புத்தலைமைகளும் எதிர்காலம் குறித்து முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுகின்றன உதாரணமாக என்.பி.சி தொலைக்காட்சிக்கு இஸ்ரேலியப் பிரதமர் ரபின் அளித்த பேட்டியொன்றில் "பாலஸ்தீனியக் கொடி எந்தக்காலத்திலும் ஜெருசேலத்தில் பறக்காது" என்று கூறியிருக்கிறார். ஆனால் பி.எல்.ஓவின் அரசியல் ஆலோசகர் நபில் ஷா சி.என். என்னுக்கு அளித்த பேட்டியில் "நாங்கள் தொடர்ந்து ரபினுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஜெருசெலத்தை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீன தனியரசை அமைப்போம். இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளும் அருகருகில் நட்புநாடுகளாக அமையும்" என்கிறார்.

அதிசயம் ஆச்சரியம் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்ற போதும் ஒப்பந்தம் குழப்பங்கள் நிறைந்தது, அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது என்ற கருத்து பரவலாகவே இருக்கிறது. யசீர் அரபாத் பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை விற்றுவிட்டார் என்ற கருத்தை அலட்சியப்படுத்தி விட்டு எத்தகைய நிர்ப்பந்தங்கள் இந்த ஒப்பந்தத்தை செய்ய வேண்டிய நெருக்குவாரத்தை அரபாத்துக்கு ஏற்படுத்தின என்பதை அவதானிக்க வேண்டும் உண்மையிலே ஒஸ்லோவிலே இருதரப்புக்கும் இடையில் நடந்தது இரகசியப் பேச்சுவார்த்தை அல்ல இத்தகைய பேச்சுவார்த்தை நடப்பது பலருக்குத் தெரியும்.

ஆனால் பேச்சுவார்த்தையின் முடிவுகளை இருதரப்பும் ஏற்றுக் கொண்டது அதுவும் குறிப்பாக அரபாத் ஏற்றுக்கொண்டது

**சுழலும் உலகம்**



**தி. உமாகரந்தன்**

ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஏனெனில் இந்த ஒப்பந்தம் 68% இஸ்ரேலின் கருத்துக்களையும் 26% அமெரிக்காவின் கருத்துக்களையும் 6% மாத்திரமே பாலஸ்தீனியர்களது கருத்துக்களையும் உள்ளடக்கியது.

ஆனால் அரபாத்துக்கு வேறுவழி எதுவுமே கிடையாது. பி. எல்.ஓ மிக மோசமான நிதி நெருக்குவாரத்தை எதிர்நோக்குகிறது. ஈராக் குவைத் யுத்தத்தில் அரபாத் ஈராக்கிற்கு ஆதரவளித்ததால் வளைகுடாநாடுகள் பி.எல்.ஓவிற்கு அளித்த நிதி உதவியை நிறுத்திவிட்டன. அரபாத்தின் பொருளாதார ஆலோசகர்கள் உடனடியாக 2 பில்லியன் டொலர்கள் கிடைத்தால் மட்டுமே மேற்கு கரை, காசா பகுதிகளை நிர்வகிக்கவும் பி.எல்.ஓ ஒரு சர்வதேச அமைப்பாக இயங்கவும் முடியும் எனக் கூறியுள்ளனர். பாலஸ்தீன பொருளாதார நிபுணரான யூசுஃப்சயே, காஸா மற்றும் மேற்குக்கரையில் எதிர்வரும் வருடங்களில் அபிவிருத்தி வேலைகளுக்கு 13 பில்லியன் டொலர்கள் தேவை, ஆனால் இப்போது உடனடியாக 2 பில்லியன் டொலர்கள் தேவை என்கிறார். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதார நிலைமை குறித்து உலகவங்கி சிவப்பு விளக்குக் காட்டுகிறது. பாரிய அளவு வெளிநாட்டு உதவிகள் கிடைக்காவிடில் இப்பகுதிகள் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்படும் என் உலகவங்கி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மிகக் குறைந்த தலா வருமானம், தடைப்படும் மின்சார, நீர் விநியோகங்கள், அதிகரித்துவரும் வேலையில்லாப் பிரச்சனை, தொடரும் வன்முறைகள் ஆகியன இப்பிரதேசங்களின் பொருளாதாரச் சீர்கேட்டின் அம்சங்கள் என உலக வங்கி அறிக்கை கூறுகிறது. அடுத்த பத்துவருடங்களுக்கு இப்பகுதிகளில் கல்விநிலையங்களை நடத்துவதற்கு 3 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது என உலகவங்கி கூறுகிறது.

தொடர்ச்சியாக இஸ்ரேலியர்கள்மீது நடந்த தாக்குதல்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருக்கும் பாலஸ்தீன தொழிலாளர்களுக்கு இஸ்ரேலில் வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டது பொருளாதார நிலமையை மேலும் மோசமாக்கியது. அதிகரிக்கும் குடிசனத்தொகை இன்னுமொரு எதிர்க்காரணியாகியது. மேற்குக்கரையில் ஒவ்வொரு 46 பேருக்கும் 1 தொலைபேசியே இருக்கிறது. இப்பகுதியில் உள்ள 400 கிராமங்களில் 80 இல் தொலைபேசிச் சேவையே கிடையாது. 140 பாலஸ்தீனியக் கிராமங்களில் எந்தவிதமான மின்சார விநியோகமுமே கிடையாது. பல இடங்களில் கழிவுநீர் வெளியேறுவதற்கான மார்க்கங்களும் கிடையாது. பி.எல்.ஓவிற்கு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அலுவலகங்களையும், சர்வதேச மட்டத்தில் தூதரகங்களையும் நடத்துவதற்கே மாதம் தோறும் 30 தொடக்கம் 40 மில்லியன் டொலர்கள் வரை தேவையாக இருக்கிறது. அதுதவிர பி.எல்.ஓவிற்காக உயிர்களை இழந்தவர்களின் குடும்பங்களை பராமரிக்க வேண்டியிருக்கிறது இவை மாத்திரமல்ல ஹமாஸ் போன்ற அமைப்புகளின் போட்டியும் அரபாத்திற்கு சிக்கலைக் கொடுத்தன.

யூன் மாத இறுதியில் பி.எல் ஓவின் நிதிக் கையிருப்பு 150முதல் 180 மில்லியன் டொலர்களாகவே இருந்தது. இதை வைத்துக் கொண்டு இவ்வருட இறுதி மட்டுமே பி.எல்.ஓ சமாளிக்க முடியும். இந்தநிலையில் அராபிய மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிதிஉதவி சம்பந்தமான உறுதிமொழிகளை அரபாத்தினால் ஏற்க முடியவில்லை. அமெரிக்காவை நோக்கி அரபாத் தள்ளப்பட்டார்.

இதுபோலவே இஸ்ரேலும் இன்னுமொரு வகையான நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டது. கடந்த யூலை மாதம் இஸ்ரேலின் பிரதமராக ரபின் தெரிவு செய்யப்பட்டபோது சுயாட்சி சம்பந்தமான ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு வருடத்துக்குள் தான் வந்து விடுவேன் என கூறியிருந்தார். அமெரிக்கா தான் அளித்து வரும் மிகக் கூடியபட்ச நிதி உதவியைக் குறைக்கப்போவதாக இஸ்ரேலை மிரட்டியது. இஸ்ரேல் நினைத்தது போல் நெருந்தொகையான யூதர்கள் உடைந்த சோவியத் யூனியனிலிருந்து குடி பெயர்ந்து வரவில்லை.

அதுமட்டுமல்ல அராபியர்கள் எந்தக்காலத்திலும் பலவீனப்பட மாட்டார்கள் என இஸ்ரேல் நினைக்கத் தொடங்கிவிட்டது. அதுமட்டுமல்ல சுற்றுப்புறச் சம்பவங்கள், இஸ்லாமியத் தீவிரவாதத்தின் திடீர் வளர்ச்சி அனைத்துமே பிரச்சனைகளை ஒரு இஸ்லாமியத் தீர்வை நோக்கித் தள்ளும் என இஸ்ரேல் பயந்தது. இவை அனைத்தும் சேர்ந்து இஸ்ரேலை ஒப்பந்தத்தை நோக்கித் தள்ளின.

பலகாலங்களாக இஸ்ரேலை தாம் அங்கீகரிக்கத் தயாராக இருப்பதாக பி.எல்.ஓ சொல்லி வந்தது. ஆனால் பலகாலங்களாக இஸ்ரேல் தாம் இதை நம்பத் தயாராக இல்லை என்று சொல்லி வந்தது. இன்று ஒரு ஒப்பந்ததுக்கு இஸ்ரேல் சம்மதித்திருக்கிறது. ஆனால் என்ன நிலையில்......? இதனை பாலஸ்தீனப் பிரஜை ஒருவர் இப்படிக் கூறுகிறார் "வானத்தில் பறந்து கொண்டிருந்த பறவை ஒன்றை சுட்டிக்காட்டிய பாலஸ்தீனியர்கள் அதோ ஒரு புறு என்றனர். ஆனால் இஸ்ரேலியர்களோ இல்லை அது ஒரு கழுகு என்றனர் பாலஸ்தீனியர்களோ அது புறு என வற்புறுத்தினர் .ஆனால் இஸ்ரேலியர்களோ அது ஒரு கழுகுதான் என பிடிவாதம் பிடித்ததுடன் அப்பறவையை சுட்டனர் பறவை படுகாயமடைந்து நிலத்தில் வீழ்ந்தது. அதன் பின்னரே இஸ்ரேலியர்கள் சொன்னார்கள் ஆம் அது ஒரு புறுதான் என்று" பல்வேறுபட்ட நிர்ப்பந்தங்களிடையே மேற்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வொப்பந்தம் வரலாற்றுச் சாதனையாகுமா என்பதை எதிர்வரும் நாட்களே நிச்சயிக்கும்.

செப்டம்பர் 17,18ம் திகதிகளில்......

மலேசியாவிலிருந்து வருகை தரும்
பலகுரல் மன்னன்
**மலேசியா ஸ்ரீசண்முகநாதன்**

லண்டனில் இருந்து வருகை தரும்
ஈழத்திலும் லண்டனிலும் புகழ் பெற்ற
**யாழ் ரி.சீலன்**

இவர்களுடன்....

**எஸ்.வி.வர்மன்**
தயாரித்து வழங்கும்
**மிடி மெலோடீஸ் இசைக்குழுவின்**

# இசை அருவி 93

செப்டம்பர் 17ம் திகதி
வெள்ளிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு
Trillium Banquet Hall
35 Brunel Road, Mississauga
(Hwy 10/Brunel)

செப்டம்பர் 18ம் திகதி
சனிக்கிழமை
மாலை 6.30 மணிக்கு
Midland Collegiate
720 Midland Ave
Scarborough

# "மொன்றியாலில் இசை அருவி"

## ஆந்தையார்

கண்ணை மூடிக் கொள்ளுங்கள் ... மேடையில் பாடும் குரல் தியாகராஜ பாகதவர் போலிருக்கிறது. திறந்து பார்த்தால் பாகதவர் இல்லை. கண்ணை மூடுங்கள்...... பாடும் குரல் சுந்தராம்பாள் போல இருக்கிறது. மேடையில் சுந்தராம்பாளைக் காணோம். கண்ணை மூடுங்கள்.... கமலஹாசனும் ஜானகியும் பாடுகிறார்கள். கண்ணைத் திறந்தால் மேடையில் ஒருவர் தான் பாடுகிறார் மலேசியா சண்முகநாதன்! ஆணாக..... பெண்ணாக ... பழைய புதிய குரல்களில் .. . பாகவாதர் , ஜெயராமன் சுந்தராம்பாள், கே,ஆர்.ராமசாமி, ஜிக்கி, பெரியநாயகி சுசீலா, ஜானகி சந்திரபாபு, சித்ரா .... நம்ப முடியவில்லை....!

ஆம், மொன்றியாலின் மிடிமெலோடீஸ் இசைக்குழு தங்கள் 'இசை அருவி 93' இல் விசேடமாக பாட மலேஷியாவிலிருந்து அழைத்த சண்முகநாதனுக்கு பலகுரல் மன்னன் என்ற பட்டம் சாலப் பொருத்தமே. கடந்த செப்டெம்பர் 11 ந் திகதி நடந்த இந்த இசை நிகழ்ச்சி மொன்றியாலை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. அமைப்பு சார்பற்ற உள்ளூர் நிகழ்ச்சிக்கு இவ்வளவு தொகையாக மக்கள் வந்திருந்தது இதுதான் இங்கு முதல் முறை!

புத்தம் புதிய பாடல்களில் கவனம் செலுத்தாமல் ஒரளவு பழைய பாடல்களையே தெரிந்தெடுத்திருந்தது இந்தக்குழு. இசையமைப்பதற்கும் பாடுவதற்கும் கடினமான பாடல்கள் எனக் கேள்விப்பட்டிருந்த பாடல்களையும் இவர்களது மேடையில் கேட்டபோது இக்குழுவுக்கு வளமான எதிர்காலம் உண்டு என்பது மனதில் பட்டது. எம்.எஸ். விஸ்வநாதன், எஸ்.பி.பாலசுப்பிரமணியம் இருவருமே தாங்கள் ரசித்து உருவாக்கிய 'சலேஞ்சிங் சோங்' என சொன்ன "சொந்தங்களை வாழ்த்தி...." என்ற பாடலை அச்சாக மேடையில் தந்தது ரசிக்கத்தக்கதாயிருந்தது அதேபோலவே "எங்கேயும் எப்போதும் சங்கீதம்..." என்ற பாடலும் அமைந்தது. மொணறியால் பாடகர் C.T, உத்தமன் தென்னிந்திய சினிமாப் பாடகர்களுக்கு சளைத்தவர் இல்லை.

சௌந்தர்ராஜன் குரலில் பொன். சிவா பாடினார். மொன்றியாலில் பல மேடைகளில் பாடிய பாக்யராஜ் இந்த மேடையில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுத் தந்திருந்தார். அவர் பாடிய "ரம்பம்பம்...ஆரம்பம்" அரங்கையே குதிக்க வைத்தது. பெண் குரலில் பாடிய இருவருள் ஒருவர் மலேசியா சண்முகநாதன் மற்றவர் சாந்தினி வர்மன் இவர்களுடன் மூன்றாவதாக ஒரு குட்டிப்பாடகி தோன்றினார். நான்கு வயதான பிருந்தா உதயகுமார் என்ற 'சிறிசு' "ஆசை அதிகம் வெச்சு..." என்ற அந்த சர்ச்சைக்குரியதாக்கப்பட்ட பாடலை பாடிய போது மண்டபத்தில் 'சிறிசு' 'பெரிசு' என்ற வேற்றுமையின்றி அனைவருமே ரசித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு பாடகி 'உதய' மாகிறாள்....

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில பாடப்பட்ட கடவுள் வாழ்த்து ஒரு முஸ்லிம் பாடல் போல இருந்தது. கனடா ஈழநாட்டின் பாடல்களில் ஒன்றாக ரொறண்டோ 'இமேஜ்' குழுவின் சரா லோகநாதன் இசையமைத்த "மல்லிகை மொட்டே..." என்ற பாடலை மிடி மெலோடீஸ் பாடியது வரவேற்கத்தக்கது. மிடி மெலோடீஸ் இசையமைத்த பாடல் என்று ஒரு பாடலைப் பாடினார்கள் ... சோபிக்கவில்லை.

பின்னணிக் கருவிகளை இசைத்த கலைஞர்களில் குறிப்பாக 'சக்ஸபோனை' இசைத்த பரமசிவம் கலக்கி விட்டார். "அவள் பறந்து போனாளே..." என்ற பாடலை அவர் தனியாக இசைத்த போது மண்டபமே மயங்கி ரசித்தது.. "வாங்....... எவ்வளவு நளினமாக இசைக்கிறார்..." தாளவாத்தியங்களை இசைத்த ரகு சர்மா, பாலா இவர்களுடன் குறிப்பிடத்தக்கதாகத் தெரிந்தவர் பொங்கோ வாசித்த லயனல் பல பாடல்களில் லயனலின் கை வேகம் தெரிந்தாலும் குறிப்பாக அந்த வாத்யார் பாடலான" ஒரு பெண்ணைப் பார்த்து .... என்ற பாடல் இவரைப் பிரித்துக் காட்டியது. ஒரே ஒரு பெண்ணாக மேடையில் அமர்ந்திருந்தது கீபோர்ட் வாத்தியம் வாசித்த டின்ஸா ஜேசுரத்தினம் அறிமுகப்படுத்தப்பட்டபோது கைதட்டல்கள் ஆரவாரித்தன. ரொரண்டோவிலிருந்து வானொலி அறிவிப்பாளர் நடா ராஜ்குமார் வந்திருந்து நிகழ்ச்சிகளை தொகுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். நல்ல குரல் வளமும் உச்சரிப்புத்தெளிவும் ஆர்ப்பாட்டக் குறைவும் நடாவுக்கு கைகொடுத்தன.

குறைகளும் இல்லாமலில்லை. ஒலியமைப்பில் கீபோர்ட்களின் சப்தமே உயர்ந்து தென்பட்டது. வண்ண விளக்கு ஒளியமைப்பு தரவேண்டிய வர்ண ஜாலங்கள் சரிவராதபடி வீடியோ லைட்டுக்கள் பளிச்சிட்டுக்கொண்டிருந்தன. பல குரல்களின் பாடி அனைவரையும் ஆக்கிரமித்த சண்முகநாதனுக்கு இன்னும் அதிக பாடல்களை கொடுத்திருந்தால் பல ரசிகர்களையுத் திருப்திப்படுத்தியிருக்கலாம். நிகழ்ச்சியின் இடையே இரண்டு கோஷ்டிகள் கைகலப்பில் ஈடுபட்டதும் அதை மிடி மெலோடீஸ் உதவியாளர் ஒருவர் (சிவப்புச் சட்டைப்படை?) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. கனடா இளம் சமுகம் தோடு குத்தட்டும்! 'கறுப்பர்'களைப் போல ஆடை அணியட்டும். ஆனால் போக்கிரித்தனமாக நடக்க ஆரம்பிப்பதுதான் வேதனை. இத்தகைய வழிதவறும் 'ஆடுகள்' தயவு செய்து தமிழ் மக்கள் கூடும் விழாக்களுக்கு வராதீர்கள்! நீங்கள் வந்து தரும் உபத்திரவங்களை விட வராது விடுவதால் ஏற்படும் நஷ்டம் பெரிதல்ல□ 'எண்ஜோய்' பண்ண என வரும் நீங்களே உங்களை கட்டுப்படுத்தாவிட்டால் உங்களை வேறு வழியில் அடக்குவது பெரியவர்களுக்கு பெரிய விடயமுமல்ல. மற்றவர்களின் பெருந்தன்மையை பேடித்தனமாக நினைக்க வேண்டாம். இந்த அலங்கோலங்களை எதிர்த்து பொறுப்புள்ள பத்திரிகைகள், அமைப்புக்கள், பெற்றோர்கள் பொதுமக்கள், ரசிகர்கள் உடனடியாக மாற்றுமருந்து காண ஆரம்பிக்கவேண்டும் இல்லையேல் அமைதியாக தமிழ்ச்சமூகம் வாழுமிடம் என்ற பெருமையையும் நல்ல நிகழ்ச்சிகளை நடாத்தக்கூடிய வாய்ப்புக்களையும் மொன்றியால் இழந்து விடும்.

கனடாவின் தரமான மேடைநிகழ்ச்சிகள் அத்திபூத்தாற் போலத்தான் வருவதுண்டு. அத்தகைய ஒரு நல்ல நிகழ்ச்சியை தந்த மிடி மெலோடீஸ் இசைக்குழுவின் இயக்குனர் எஸ்.வி. வர்மனுக்கு பாராட்டுக்கள். தவற விட்டிருக்கக்கூடாத சிறு நிகழ்ச்சி என பலருமே வெளியே போகும் போது பேசியது கேட்கக் கூடியதாக இருந்தது. ரொறண்டோவுக்கும் இவ்வாரம் இக்குழு வருகிறதாம். இதே தரத்தில் அங்கும் நிகழ்ச்சியை நடாத்துவார்களேயானால் மொன்றியாலுக்கும் பெருமை. ரொரண்டோவிலுள்ள தமிழ் இசைக்குழுக்களே உஷார் .. ஒரு சலேஞ்ஜிங் க்ருப் வருகிறது
(ஹா......... சரியான போட்டி)

# மு.த.வின் ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி பற்றிச் சில கருத்துக்கள்...'

## வ.ந. கிரிதரன்

'பாரதியின் கருத்துலகத்தை விடவும் தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது.'
சுந்தர ராமசாமி

'தமிழ் இலக்கிய உலகில் மு.த. எழுதிய ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி ஓர் மைல் கல்லாகவே நிற்கிறதென்றால் அது மிகைப்பட்ட கூற்றாகாது.'
மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம் நூலின் முன்னுரையில்.

அண்மையில் காலம் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் தமிழகத்தின் தரமான எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தர ராமசாமியைச் சந்தித்தபோது என் நெஞ்சில் குடைந்து கொண்டிருந்த கேள்வியொன்றைக் கேட்டேன். மு.த.வின் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி நூலை வாசித்ததிலிருந்து என் நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்த கேள்வி தான் அது. தனது போர்ப்பறையில் மார்க்சின் கொள்கைகளை தனது கோட்பாடான சர்வோதயத்தின் முதற்படியாகக் கூறும் மு.தளையசிங்கம் மார்க்சியக் கோட்பாடுகள் கூறுந் தத்தவங்கள் ஒரு இடைக் காலத்தீர்வேயென்றும், பூரணமான தீர்வு மார்க்சியத்தையும் வெல்லக் கூடியதொரு தத்துவத்திலேயே, சர்வோதயத்திலேயே உள்ளதாகவும் வற்புறுத்துகின்றார். அடிக்கடி மார்க்ஸியத்தை எதிர்ப்பவர்களைக் கண்டிக்கும் மு.த. நவீன வைத்திய முறைகளைப் பாவிப்பதைப் போல். மார்க்ஸியத்தின் நல்ல அம்சங்களையும் ஏற்றும் பயன்பெறவும் தவறக் கூடாது என்றும் அடிக்கடி கூறிக் கொள்கின்றார். (உண்மையில் இந்தப் போர்ப்பறை முரண்பாடுகளின் மொத்தமான படைப்பு. இது பற்றி பின்னர் சந்தர்ப்பம் வரும் போது ஆராய்வோம். இக் கட்டுரையின் நோக்கம் அதுவல்ல)

அண்மையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பல்வேறு காலகட்டங்களை அறியும் ஆவலுடன் நூல்களைத் தேடிக்கொண்டிருந்த என் கண்களில்பட்ட நூல்தான் மு.த.வின் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி (1956–1963). 1956–1963 வரையிலான இலங்கை எழுத்தாளர்கள் பற்றியும், அவர்கள் படைப்புக்கள் பற்றியும் அறியும் ஆவலுடன் புத்தகத்தைப் புரட்டினால் பல அதிர்ச்சிகள்.

முதலில் இந்நூல் 56–63 வரையிலான எழுத்தாளர்களில் பெரும்பாலானவர்களைப் பற்றியும் அவர்களது படைப்புக்களைப் பற்றியும் குறிப்பிடவில்லை. ஆராயவுமில்லை ஆராய்ந்த விடயங்களெல்லாம் எஸ். பொ. டொமினிக்ஜீவா போன்ற ஒரு சில எழுத்தாளர்கள் பற்றியும், ஒரு சில படைப்புக்கள் பற்றியும் பேராசிரியர் கைலாசபதி போன்ற ஒரு சில விமர்சகர்கள் பற்றியும், அவர்களது படைப்புக்களினூடாக விமர்சனங்கள் வைக்கப்பட்டாத நிலையில், தனிப்பட்ட ரீதியில் மு.த. வினால் எண்ணப்பட்ட எண்ணங்களே. தான் நினைத்தபடி தான்தோன்றித்தனமான வகையில் முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றியும், டானியல், ஜீவா, போன்றவர்களின் குடும்பப் பின்னணிகள் பற்றியெல்லாம் நாகரீக உலகமே நாணும்படியாக எழுதித் தள்ளிய மு.த.வின் இந்த நூலைத்தான் மு. பொன்னம்பலமும், சு. வில்வரத்தினமும் தமிழ் இலக்கிய உலகில் மைல் கல்லென வர்ணிக்கின்றார்கள். விமர்சனமென்றால் எழுத்தாளர்களின் படைப்புக்கள் குறிப்பிடப்பட்டு, அப்படைப்புக்கள் ஆராயப்படவேண்டும் அதைவிட்டு விட்டு அவரது சாதி, அது அவரது சாதிப் புத்தி தான் அவரது நடத்தைக்குக் காரணம்.... இப்படிப்பட்ட விமர்சனங்கள் மார்க்ஸியக் கோட்பாடுகளை தனது கொள்கையாக வரித்துக் கொண்ட பேராசிரியர் கைலாசபதி தன் கோட்பாடுகளிற்குரிய வகையில் எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தர்க்க ரீதியாக ஆராய்வது வழக்கம். கைலாசபதியைத் தனிப்பட்ட ரீதியில் எள்ளி நகையாடும் மு.தளையசிங்கம் குறைந்தது தனது கோட்பாடுகளை மையமாக வைத்தாவது எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆராய்ந்திருக்கலாம். அதைவிட்டு விட்டு முற்போக்கு எழுத்தாளர்களை மட்டம் தட்ட வேண்டும் என்ற ஒரேயொரு எண்ணத்துடனேயே எழுதியிருப்பதுபோல் இந்த ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி எனக்குப் படுகின்றது. இந்த நூலில் கூறப்பட்ட சில விடயங்களைப் பார்ப்போம்.

எஸ்.பொவின் 'அதிகார பிரபல்ய ஆசையைக்' கூற வரும் மு.த, தாழ்த்தப்பட்ட சமூகம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

'தாழ்த்தப்பட்ட சமூகநிலை ஆத்திரத்தையும் வெறுப்பையும் தூண்டி அதிகாரத்தை நாடச் செய்வது இயற்கை. அந்த அதிகாரத்தேடல் இல்லாவிட்டால் அதற்குப் பதிலாக நசிந்த குணமும், நக்கல் கலந்த பேச்சும், தருணத்திற்கு ஏற்ற மாதிரிச் சமாளித்துக் கொள்ளும் தந்திரமும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் ஆயுதங்களாக இருக்கும்.' (பக்கம் 95)

பாரதியின் கருத்துலகத்தை விடவும் தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது என சுந்தர ராமசாமியால் புகழப்பட்ட மு.த.வின் தாழ்த்தப்பட்ட சமூகம் பற்றியே கண்ணோட்டம் இது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல், தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் நியாயமான ஆவேசத்தை, ஆத்திரத்தைக் கொச்சைப்படுத்தி மு.த.வின் மொழியில் கூறப்போனால் நக்கலாகக் கூறப்பட்ட வார்த்தைகள் இவை. இதே மு.த தான், சிங்கள இனவெறி அரசால் தாழ்த்தப்பட்ட சமூகமாக வைக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் உரிமைக்காக இன்னுமொரு இடத்தில் குரல் கொடுக்கின்றார். குரல் கொடுப்பதற்கு இவரிற்கு என்ன தார்மீக உரிமை இருக்கிறது? இவர்தான் 'சர்வோதயம்' போதிக்கிறார்?

மு.த.வின் கருத்துப்படி டொமினிக் ஜீவா, டானியல் போன்றவர்கள் எழுதுவதன் காரணம் என்ன தெரியுமா?

'சமூகத்தில் அவர்கள் அனுபவிக்காத அதிகாரத்தையும் பலத்தையும் அடைவதற்கும் தாழ்த்தப்பட்ட நிலையின்

காரணமாய் தாங்களுக்கு ள்ளேயே அடக்கி வைத்திருக்கும் ஆத்திரங்களையும் வெறுப்பையும் வெளிக்காட்டுவதற்கும் தான் இலக்கியத்தின் மூலம் முக்கியமாய் முயல்கிறார்கள். (பக்கம் 96)

இன்னுமோரிடத்தில் மு.த. பெரியதொரு உண்மையைக் கண்டு பிடித்துக் கூறுகின்றார். அது என்ன? பாதிக்கப்பட்ட மக்கள் தங்களிற்காக நீதி கேட்டு எழுவது முறையல்ல. உதாரணமாக சாதிப்பிரிவுகளால் பாதிக்கப்பட்ட ஒருவரிற்காக, சாதிப்பிரிவுகளால் பாதிக்கப்படாத ஒருவர்தான் நீதி கேட்க உரிமை உடையவர்.

சின்ன வயதிலிருந்தே சாதிப்பிரிவினை களின் விளைவுகளால் அநியாயமாகப் பாதிக்கப்பட்டு வளர்ந்த ஒருவரி டமிருந்து நீதியையும் நடுநிலையையும் கேட்பது முன்னுக்குப் பின் முரண் மட்டுமல்ல, முறையும் அல்ல தான். ஆமாம், அவரிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்கக் கூடாது. முற்போக்கு க்கும் நற்போக்குக்கும் அப்பாற்பட்ட வர்களால் தான் அதைச் செய்ய முடியும். (பக்கம் 103)

இந்த அர்த்தத்தில் பார்க்கப் போனால், தமிழர்க்காகப் போராட வேண்டியது தமிழர்களல்ல, சிங்களவர்கள் தான் என்றல்லவா இருக்கிறது. (சு. வில்வரத்தினம் கவனிக்க. ஏன் மு.பொவும் தான்)

மேலும் இந்நூலில் மு.த. கண்டு பிடித்த சில உண்மைகளைப் பார்ப்போம். தாழ்த்தப்பட்டோர் மேல் சாதிக்காரன் ஒருவனைத் தங்கள் தலைவனாக வைத்திருக்க விரும்பினாலும் தங்களுடைய வர்க்கத்திலிருந்து வரும் ஒருவனைத் தலைவனாக வைத்திருக்க விரும்பமாட்டார்கள்.

மேல் சாதிக்காரர்கள் கீழே இறங்கிவரத் தயாராக இருந்தால் கூட தாழ்த்தப்பட்ட பிரிவினர் தங்களுக்குள்ளேயே ஒற்றுமையைக் காணவோ கலந்து கொள்ளவோ விரும்பார். (பக்கம் 104)

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல், மேல் கூறப்பட்டவை மு.த.வின் 'ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி' என்ற நூலைப்பற்றிக் கூறப் போதுமானவை. எஸ்.பொ பற்றியும், டானியல், டொமினிக் ஜீவா பற்றியும் தனிப்பட்ட ரீதியிலும், பெயரிற்கு ஒரிரு படைப்புக்களைக் குறிப்பிட்டும், மொத்தத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள் மேல் தனக்கிருந்த ஆத்திரத்தைத் தீர்க்க எழுதிய நூலாகவே மேற்படி நூல் தெரிகிறது. இவ்விதம் கீழ்த்தரமாக மற்றவர்களைத் தாக்கிய மு. தளையசிங்கம், தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளவும் தவறவில்லை.

ஒரு இலக்கிய விமர்சனம் எப்படி இருக்கக் கூடாதென்பதற்கு இலக்கணமாக நிற்கும் இந்த நூலைத்தான் சு.வில்வரத்தினமும் மு. பொன்னம்பலமும் தலைக்குமேல் வைத்துப் புகழ்ந்து தள்ளுகின்றார்கள். இத்தகைய எழுத்தாளர்களின் சிந்தனையைத்தான் மகாகவி பாரதியின் சிந்தனையுடன் ஒப்பிடுகின்றார் சுந்தரராமசாமி.

இதனைத்தான், கருத்த ரங்கில் சுந்தர ராமசாமியிடம் கேட்டேன். பதில் திருப்திகரமா கயில்லை. டானியலின் ஒரு படைப்பை மட்டும் வாசித்து விட்டு, டானியலின் கலைப் படைப்புக்கள் பற்றி அறுதியான தீர்விற்கு வந்து விடுவது சுந்தர ராமசாமியிடமுள்ள மிகப் பெரிய குறைபாடு. எல்லாப் புத்தகங்களையும் வாசிப்பது நடைமுறைச் சிக்கலாக யிருந்தால் சுந்தர ராமசாமி போன்ற மாபெரும் எழுத்தாளர்கள் விமர்சனத் துறைக்கு வராமலிருப்பதே நல்லது போல படுகின்றது. ஒரளவு குறிப்பிடத்தக்க நூல்களைப் படிக்காமல் ஒருவரைப்பற்றி, ஒரு விடயத்தைப் பற்றி எழுதுவது பிழையான திசையை வாசகர்களுக்குக் காட்டிவிடுவதாக அமைந்து விடுமல்லவா. தமிழ் இலக்கிய உலகில் சுந்தரராமசாமி ஒரு மைல் கல் அதனை நான் மறுக்கவில்லை. என் மதிப்பிற்குரிய சுந்தர ராமசாமி தவறு செய்யக் கூடாதென்பது தான் என் விருப்பம். மு.பொன்னம்பலத்தின் கொள்கைகள் வேறானதாகவிருந்த போதும் அவரது எழுத்துக்களை நான் மதிப்பவன். அண்ணன் என்பதற்காக மு. தவின் குப்பைகளையெல்லாம் உன்னதமான விமர்சனமாக எண்ணி வெளியிடுவது, மு.தளையசிங்கத்தின் பெயரிற்குத் தான் ஊறு விளைவித்து விடுமென்பதை மு.பொ உணர வேண்டும். மு.த.வின் ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சி மு.த.வின் சுயரூபத்தைத் தான் தோலுரித்துக் காட்டுகின்றது.

எழுத்தாளர்களென்றால் பலவேறு பிரிவுகள், கோட்பாடுகள் இருப்பது இயற்கையே. கோட்பாட்டை கோட்பாடு ரீதியில் தான் கைலாசபதியைப் போல், அணுக வேண்டுமே தவிர தனிப்பட்ட ரீதியிலல்ல. ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு திறமை இருக்கும் ரசிக்க உணரப் பழகவேண்டும்.

டால்ஸ்டாயின் நூல்களில் அடிக்கருத்தாக மதத்தின் தேவை வலியுறுத்தப்பட்டிருக்கும் அதற்காக அவரது படைப்புக்களின் கலைத்தன்மை குறைந்து போய் விடுவதில்லை. அதுபோல்தான் ததாவ்ஸ்கியின் படைப்புக்களும். கட்சியில் இருந்தார் என்பதற்காக மைக்கல் சொலகாவ்வின் படைப்புக்கள் கலைத்தன்மையை இழந்து விடவில்லை. நோபல் பரிசு பெறவும் தவறவில்லை. இதனை நாங்கள் உணர வேண்டும்

புதுமைப்பித்தனின் இலக்கியப் போக்கு ஒரு வகையானது, கி. ராஜநாரயணனின் இலக்கியம் போக்கு ஒரு வகையானது. சுந்தர ராமசாமியின் போக்கு ஒரு வகையானது, பூமணியின் போக்கு ஒரு வகையானது, ஜெயகாந்தனின் போக்கு ஒரு வகையானது, அதற்காக அவர்களின் படைப்புக்களின் மேன்மையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இது போல் தான் எமது எழுத்தாளர்களும். அவர்களது கூடாரங்கள் வேறானவை என்ற காரணத்திற்காக அவர்களது படைப்புத் திறனை குறைத்து மதிப்பிட முடியாது. இவர்களது படைப்புகள் இவர்களது படைப்புகளினூடாக ஆராயப்பட வேண்டுமே தவிர மு.தவின் பாணியில் அல்ல.

அவை கூறும் விடயங்கள் விபரிக்கப்பட வேண்டும். நடை, கருத்து, உருவம் போன்ற ரீதியில் அவற்றின் கலைத்தன்மை, சமூதாயப் பயன்பாடு என்பவை ஆராயப்பட வேண்டும். குறை, நிறைகள் சுட்டிக் காட்டப்பட வேண்டும். இவை எதுவுமே மு. தளையசிங்கத்தின் 'ஏழாண்டு கால இலக்கிய வளர்ச்சியில்' ஆராயப்படவில்லை. இதை வெளியிட்டிருப்பது தரமான பதிப்பகமான க்ரியா. இவ்வாறான நூல்கள் பதிப்பகத்தின் பெயருக்கு மாசு விளைவிக்கக் கூடியன.

# பாரதியும் பாரதிதாசனும் தேசிய உணர்வும்



சி.சிவசேகரம்

இந்தியாவின் தேசிய எழுச்சிக் கவிதைகளிடையே பாரதியின் படைப்புக்கட்கு முக்கிய இடமுண்டு. அவரது தேசிய உணர்வு இந்திய சுதந்திர இயக்கத்துடன் நெருங்கிய உறவுடையது. அவரால் இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களை அவற்றின் சிறப்பம்சங்களின் அடிப்படையில் அடையாளம் காணவும் அங்கீகரிக்கவும் முடிந்தது. ஒரு இந்தியத் தேசியவாதியாகவும் தமிழ், தமிழனென்ற உணர்வுடையவராகவும் சர்வ தேசிய நோக்குடையவராகவும் அவராற் செயற்பட முடிந்தது. இந்து மதத்தின் ஆழமான கருத்துக்களைக் கிரகித்துச் சகல மதங்களையும் மதித்து மதப் பூசல்களையும் நிராகரித்த ஒரு ஆன்மீகப் பார்வையை அவராற் பேண முடிந்தது. அனைத்திலும் முக்கியமாக, அவரது சிந்தனை சமுதாய நீதியையும் மனித சமத்துவத்தையும் வலியுறுத்தியது.

பார்ப்பனிய விரோதிகளும் பார்ப்பனியப் பிரசாரகர்களும் ஏககாலத்திற் பாரதிக்கு உரிமை கொண்டாட முடிகிறதென்றால் முரண்பாடு பாரதிக்குள் இல்லை, ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப பாரதியை வியாக்கியானஞ் செய்கின்றனர். பாரதியை மாக்ஸியவாதியென்று சில இடதுசாரி ஆய்வுகள் காட்ட முனையும் போது அவர் வெறுமனே ஒரு தேசியவாதிதான் என்று வேறு சில அவரை நிராகரிப்பதையும் நாம் காணலாம். இவை, பொதுவாகப், பாரதி என்ற தனி மனிதரை அவரது வரலாற்றுச் சூழலிலும் அதனூடான அவரது விருத்தியின் அடிப்படையிலும் வைத்துக் காணத் தவறியதால் ஏற்பட்ட பிரச்சனைகளே .

பாரதி பற்றிய ஆய்வுகளில் அகச்சார்பின் விளைவாக நேர்ந்த குழப்பங்களைப் பாரதியின் குழப்பங்களாகக் கண்ட ஒரு சூழலினின்று நாம் இன்று விடுபட இயலுமாகியுள்ளது. அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரதி ஆய்வுகள் மூலம் பாரதி பற்றி நிலவிய உணர்ச்சிகரமான பார்வைகளின் ஆதிக்கம் அடங்கியுள்ளது. ஆயினும், அவரது கவிதையும் பிரசார நோக்குடைய எழுத்தும் மேலெழுந்தவாரியாக வியாக்கியானஞ் செய்யப்படும் போது, அவர் விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழு இடமுண்டு.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்"

"ஆதி சிவன் பெற்றுவிட்டான் என்னை
ஆரியமைந்தன் அகத்தியன்
...
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்"

என்றவாறான கவிதை வரிகள் இவ்வாறான விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளன. பாரதியின் பிற எழுத்துக்களைக் கவனிக்கும் போது இக் குற்றச்சாட்டுக்கள் நியாயமானவை அல்ல என்று உணரலாம்.

பாரதியை வன்முறை ஆதரவாளராகக் காட்டும் முனைப்புடன் அண்மையில் ஒரிருவர் அவரது "ஓடி விளையாடு பாப்பா" பாடலை மேற்கோள் காட்டியிருந்தனர்.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் நீ
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

ஏனோ, இவர்கட்குப் பாரதியின்

"தனியொரு மனிதனுக்
குணவில்லையெனில்
சகத்தினை அழித்துவிடுவோம்"

என்ற பிரகடனம் நினைவுக்கு வரவில்லை. பாரதி சாத்வீகசாதி என்று சொல்ல முடியாதுதான் காந்தியை அவர் மிகவும் மதித்த காலத்திலும் அவர் காந்தியவாதியாக இருக்கவில்லை. கொடுமைகட்கெதிரான கிளர்ச்சிகளை அவர் போற்றத் தவறவுமில்லை. ஆயினும் பாரதி பயன்படுத்திய மரபின் படிமங்களையும் சூளுரைகளையும் வைத்து அவரையும் இன்னொரு ஆயுதக் கலாசாரக் கவிஞனாகவோ ஆண்ட பரம்பரைக்குப் பரணி பாடும் கவியராயர்களின் ஆசானாகவோ காட்டும் முயற்சி உண்மைக்குப் பகையானது.

பாரதி மீதான அன்பின் நிமித்தம் கனக சுப்புரத்தினம் என்ற தன் பேரைப் பாரதிதாசன் என்று மாற்றிக் கொண்டவரைக் கவிஞராக அறிமுகஞ் செய்த கவிதை

"எங்கெங்குக் காணினுஞ் சக்தியடா தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா"

என்று தொடங்கியது. அதிற், பின்னைக் காலத்துப் பாரதிதாசனின் நாத்திகத்தின் சாயலே இல்லை. ஆயினுந் தன்னம்பிக்கையை வலியுறுத்தும் பண்பு அக்கவிதையிலும் தெளிவாகவே இருந்தது. ஈ.வே. ராமசாமி நாயக்கரின் அரசியலின் ஈர்ப்பு பின்னுளின் அதிகமானமையால், பாரதிதாசனின் எழுத்திற் பகுத்தறிவாதம், தமிழ் (திராவிட) தேசியவாதம், யப்பானிய விரோதம் போன்றவை செறிவாகவே இருந்தது. ஈ.வே.ராவின் சிந்தனைகளிற் சமுதாய நீதியுஞ் சீர்திருத்தவாதமும் முக்கியமான பங்கு வகித்தபோதும் அவரது குறுகிய தேசியவாத அரசியலின் விளைவாக அவரது பார்ப்பனிய விரோதம் அளவுக்கும் அதிகமான கவனத்தை ஈர்த்தது. பெண்ணுரிமை தொடர்பாக ஈ.வே.ரா கூறிய கருத்துக்கள் இன்றும் கூட ஆணித்தரமானவை. பாரதிதாசனின் எழுத்திலும் ஈ.வே.ராவின் முற்போக்கான சிந்தனையின் தாக்கம் வலுவாகத் தென்பட்டது.

பெண் கல்வி, விதவைகள் மறுமணம், சுதந்திரமான காதல் என்பனவும் அவரது கவிதைப் பொருட்களாக இருந்தன. சுரண்டற்

சமுதாய அமைப்பிற்கு எதிராகவும் அவர் குரல் எழுப்பியுள்ளார். இவ்விடத்தில், முன்னொரு கால் மு. கருணாநிதி திராவிடர் முன்னேற்றக் கழகத்தினர் "பூணூல் அணியாத கம்யூனிஸ்ட்டுகள்" என்று குறிப்பிட்டதை நினைவு கூறலாம். எவ்வளவு, தான் சமுதாய சீர்திருத்தத்தையும் சமதர்மத்தையும் வலியுறுத்திய போதும் தேசிய வாதத்தைச் சமுதாயத்தின் பிரதான முரண்பாடாகக் காணும் அரசியல் இயக்கங்களாற் சுரண்டப்படும் வர்க்க நிலைப்பாட்டிலிருந்து போராட முடியாது. இதற்கு உதாரணங்கள் பல சமூகத்தின் பலதரப்பட்ட முரண்பாடுகளிடையிலும் அவற்றுக்கும் சமுதாய அமைப்புத் தொடர்பான அடிப்படை முரண்பாட்டுக்குமிடையிலும் உள்ள உறவை உணராமையின் பிரச்சனைகளில் இது ஒன்று. பாரதிதாசனிடம் இருந்த சமூக சீர்திருத்த உணர்வும் மனித சமத்துவம் பற்றிய நம்பிக்கையும் வலியவை. ஆயினும் அவரது எழுத்தின் உச்சக்கட்டம் தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிப் போக்கோடு உடன் நிகழ்ந்ததால் அவரது எழுத்திற் தமிழ் தேசியவாதத்தின் தாக்கம் அதிகமாகவே தென்பட்டது. அவரது பன்முகப்பட்ட ஆற்றல்கள் பற்றியுஞ் சிந்தனையின் விரிவைப் பற்றியும் தமிழக விமர்சகர் "ஞானி" எழுதியவை கவனத்துக்குரியன. ("மார்க்சியமும் தமிழ் இலக்கியமும்," ஞானி, பரிமாணம் வெளியீடு, 123 காளீஸ்வரர் நகர், கோவை, 641009, தமிழ் நாடு, இந்தியா)

பாரதிதாசனின் தமிழ்த் தேசியவாதப் பரிமாணத்தை மட்டுமே வலியுறுத்துவோர் அந்த உணர்வு மிக்கோர் மட்டுமல்லர். பாரதிதாசனை நிராகரிக்கவும் அது சிலருக்கு ஆயுதமாகியுள்ளது. மாக்ஸியவாதிகள் சிலரும் அத் தவற்றைச் செய்துள்ளனர். பாரதியைச் சில அதி மாக்ஸியவாதிகள் ஒரு பூர்ஷுவா தேசியவாதி என்று ஒரங்கட்ட முயன்றதை அறிந்தவர்கட்கும் பாரதிதாசன் பற்றிய இப் பார்வை வியப்பூட்டாது. ஈவே. ராவின் அரசியலின் முற்போக்கான அம்சங்களைப் பாரதிதாசனின் எழுத்திற் காணுவது போல ஈ.வே.ரா வின் குறைபாடான அம்சங்களும் பாரதிதாசனது எழுத்திற் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். எவ்வாருயினும் பாரதிதாசனின் சிந்தனைகளை ஈ.வே.ராவின் சிந்தனைகட்குட் சிறைப்படுத்தி விடமுடியாது.

பாரதியின் முக்கியத்துவத்தை அவரது தேசியவாதப்பரிமாணத்திற்கு வெளியே அடையாளம் காட்டியது போல, பாரதிதாசனின் முக்கியத்துவத்தையும் அடையாளம் காட்டும் தேவை முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு உண்டு. அக்கடமை செய்யப்படாத வரை, பாரதிதாசனின் ஆக்கங்களில் குறுகிய தேசியவாதத்தை மட்டுமே காட்டி அவரை நமது ஆண்ட பரம்பரைக் கவிராயர்களில் ஒருவராக முடக்கி விடுவது தவிர்க்க முடியாதது. பாரதி தமிழ்க் கவிதைக்குச் செய்த பணியை வளர்த்தெடுத்து விரிவுபடுத்திய இப்பெருங் கவிஞருக்கு இத்தகைய அவமரியாதையை நாம் அனுமதிக்கலாகாது.


**சிவாஸ் ரேடிங் கோ**

**மாபெரும் மலிவு விற்பனை**

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| மரக்கறி எண்ணெய் 3l | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ | 4.99 |

**இவ்வார ஸ்பெஷல்**

**பஸ்மதி அரிசி 20 கி**

**27.99**

**டின்னில் அடைத்த பழவகைகள்**
**(மங்கு, கொய்யாப்பழம் போன்றன)**
**50 சதம் மட்டுமே**

| | |
|---|---|
| கோழிக்கால் ருத் | .69 |
| (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) | |
| உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ருத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | .48 சதம் |
| முட்டை (Tray of 30) | .99 சதம் |
| (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | |

**Fresh frozen King Fish 2.99Lb**

மேலதிக விபரங்களுக்கு

பின் அட்டையைப்பார்க்க..

குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

இந்தப் புயலினால் ஏற்பட்ட முக்கியமான மாற்றம் சிலாபம் நீர்கொழும்பு பகுதிகளிலிருந்தெல்லாம் தமிழர்கள் பெருந்தொகையாக வந்து குடியேறத் தொடங்கிவிட்டார்கள். காட்டை அழிக்கும் வேலையைப் புயல் ஏற்கனவே செய்து விட்டிருந்தது குடியேறுவதற்குப் பெரிதும் துணையாகவிருந்தது. எங்கள் வீடுகளைச் சுற்றி ஆங்காங்கே குடிசைகள் முளைக்கத் தொடங்கி வட்டன. அதுவரைகாலமும் மனித நடமாட்டம் குன்றித் தனிமையிலிருந்த குருமண்காட்டுப் பிரதேசத்தின் நிலைமை மாறிவிட்டது. புதிய மனிதர்களின் வரவு அப்பகுதிக்குக் கலகலப்பை ஏற்பத்தி விட்டது. அப்படி வந்தவர்களில் சிலரும் உண்மையில் கலகலப்பானவர்களாகத் தானிருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் ஆறுமுகம். ஆறுமுகம் குடும்பம் நீர்கொழும்புப் பகுதியிலிருந்து வந்திருந்தது. ஆறுமுகத்திற்கு ஐந்து பிள்ளைகள் இரண்டு பெண்கள், மூன்று ஆண்கள். மூத்த பெண்ணைத் தவிர மற்றெல்லோரும் ஏறத்தாழ எங்கள் வயதை ஒத்தவர்கள். இந்தப் புயலால் வந்த இன்னுமொரு இலாபம் எமக்குப் புதிய நண்பர்கள் கிடைத்தார்கள்.

இதே சமயம் இன்னுமொன்றையும் புயல் ஏற்படுத்தியிருந்தது. சுமணதாஸ பாசின் குடும்பத்துடனான எங்களது நட்பு மேலும் இறுக இந்தப் புயல் வழிவகுத்திருந்தது. பொங்கல், தீபாவளியென்று பண்டிகைகள் வந்து விட்டால்... சுமண தாஸ் பாஸ் குடும்பத்தவரும் எங்களுடன் சேர்ந்து கொண்டாடினார்கள். அவர்களது விஷேச தினங்களில் நாங்களும் பங்கெடுத்துக் கொண்டோம். எங்களது சர்க்கரைப் பொங்கலை அவர்களும், அவர்களது 'கிரிபத்' தை நாங்களும் பகிர்ந்து கொண்டோம்.

இதற்கிடையில் எனது புதிய நண்பர்கள், நீர்கொழும்பு ஆறுமுகத்தின் பிள்ளைகளின் சகவாசம் என் வாழ்வின் கலகலப்பை அதிகப்படுத்தியது. குமார், பாபு, ஆறுமுகத்தின் பிள்ளைகளில் எங்கள் வயதை ஒத்தவர்கள். இவர்களது கடைக்குட்டி ரவியும் எங்களுடன் வளைய வருவான். கூட இவர்களின் இளைய சகோதரி குந்தவியும் எங்களுடன் அடிக்கடி வருவாள். சுமணதாஸ் பாஸ் ஒய்வாகயிருக்கும் சமயங்களில், சுமணதாஸ் பாசுடன் நாங்களெல்லோரும் காடு மேடெல்லாம் உடும்பு பிடிக்க, மர அணில் பிடிக்க அலைவோம். கூடவே ரஞ்சிற்றும் வருவான். சுமணதாஸ் பாசின்ற நாய் ஜிம்மி உடும்பு பிடிப்பதில் கைதேர்ந்தது. உடும்பு பிடித்ததும் அதனைவெட்டி அதன் ஈரலை ஜிம்மியின் மூக்கில் சுமணதாஸ பாஸ் தேய்த்து விடுவார். உடும்பை மோப்பம் பிடிப்பதற்கு உதவியாகயிருக்குமாம்.

மர அணிலை சுமணதாஸ் பாஸ் பிடிக்கும் போது பார்க்க வேண்டும். ஏதாவது மர அணில் மரமொன்றில் கண்டு விட்டால், முதலில் ரஞ்சிற் அம்மரத்தில் ஏறி மர அணிலை ஏதாவது ஒரு கொப்புப் பக்கமாகக் கலைப்பான். இறுதியில் ரஞ்சிற் அருகில் நெருங்கியதும் பீதியுடன் நிற்கும் மர அணில் தப்புவதற்காக வெளியே பாயும் அவ்வளவு தான் அதன் வாழ்வு. பாயும் அணில் சுமணதாஸ பாசிடமிருந்து அல்லது ஜிம்மியிடமிருந்து தப்புதென்பது அரிதான நிகழ்வு. மர அணில் பாய்ந்த மறுகணமே வைத்திருக்கும் தடியால் சுமணதாஸ் பாஸ் ஒரு போடு போட்டு விடுவார். அவ்வளவுதான் அணில் மண்டையைப் போட்டுவிடும். உடனே அணிலை எடுத்து உடுப்பு பிழிவது போல் சுமணதாஸ பாஸ் பிழிவார் அவ்விதம் பிழியாது விட்டால் அணிலின் இறைச்சி இறுக்கமாகிச் சுவையற்றுப் போய்விடுமாம்.

ஆனால் நான் அணில் இறைச்சி சாப்பிடுவதேயில்லை. சிறு வயதிலிருந்தே அணிலென்றால் எனக்கு ஒரு வித அனுதாபம். சிவபெருமானால் மூன்று குறிகள் வைக்கப்பட்ட யாழ்ப்பாணத்து அணில்களுடனான தொடர்பால் உண்டான விளைவாகயிருக்கலாம். அதற்காக அணில் வேட்டையை வேடிக்கை பார்க்காமலும் இருக்க முடிவதில்லை. ஒரு வித ஆர்வத்துடன் அநுதாபத்துடன் மர அணில் வேட்டையைப் பார்ப்பது வழக்கம். ஆனால் இந்த மர அணில்களிற்கு முதுகில் மூன்று குறிகளில்லை. கனடியன் கறுப்பு அணில்களைப் போல பருமனாக புஸ்புஸ்சென்று பார்க்கத் தெரியும். ஆனால் கனடியன் அணில்களைப் போல் நிறம் கறுப்பு அல்ல, மண்ணிறம். இப்ப தான் ஞாபகம் வருகிறது. கனடியன் அணில்களிற்கு ஏன் முதுகில் மூன்று கோடுகளில்லை என்பதற்கு நண்பரொருவர் விளக்கம் கூறினார். கனடியன் அணில்கள் கிறிஸ்த்தவ அணில்கள். அதனால் சிவபெருமான் இரங்கிக் குறி வைக்கவில்லை. ஆனால் ஆனால் குடிப்பதற்கு இளநீர் கொடுத்த யாழ்ப்பாண அணில்கள் சைவ அணில்களாம் அதனால்தான் சிவபெருமான் இரங்கி மூன்று குறிவைத்தாராம். அப்படியானால், அந்த மர அணில்களிற்கு ஏன் முதுகில் குறிகளில்லை..... ஆக, நண்பர் வேடிக்கைக்காகத்தான் கூறினாலும், என்னால் அதனை ஏற்க முடியவில்லை?

சுமணதாஸ் பாஸ் சிலசமயம் நீர்க்காகங்களைப் பிடிப்பதும் வழக்கம். பொதுவாக நீர்க்காகத்தைச் சுட்டுத்தான்

25ம் பக்கம் பார்க்க..

# இப்படியும் சேதிகள்

## ஜனமித்திரன்

பொதுமக்களின் பிரதான உணவான வெள்ளைப்பூடு திடீரென விலை குறைக்கப்பட்டதால் நாடு முழுவதும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியுள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்ததைக் கேட்டவுடன் நான் பெருமையோடு அது பற்றிய மக்களின் கருத்தை அறிவதற்காக தெருவுக்கு இறங்கினேன்.

எல்லோரும் வெள்ளைப் பூடு சாப்பிட்டுத்தான் வயிற்றை நிரப்புகிறார்கள் என நான் எண்ணினேன், ஆனால் தெருவிலோ எவரும் வெள்ளைப் பூடு பற்றி பேசுவது எனது காதுக்கு எட்டவில்லை.

தலையில் கூடையொன்றை சுமந்த வண்ணம் வயதான பாட்டி ஒருவர் கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தைத் தாண்டி வருவதைக் கண்டேன். அந்த பாட்டி கூடையில் சுமந்து கொண்டுவருவது வெள்ளைப் பூடுதான் என எண்ணி என் மனம் ஆறுதல் அடைந்தது.

"முடிஞ்ச வரை வெள்ளைப் பூடு சாப்பிட வேணும். வாதம், நாரிப் பிடிப்பு, கை கால் உளைவுகளுக்கு சொல்லப்பட்ட மருந்து?" நான் கூறினேன்.

"இது ஈரப்பிலாக்காய் மகனே, என்ன விலைக்காவது வித்துப் போட்டு அரிசி வாங்க வேணும், சோறு சாப்பிடுகிறது கூட அவ்வளவு லேசான வேலை இல்லை" எனக் கூறிக் கொண்டே அந்தப் பாட்டி என்னைக் கடந்து சென்றாள்.

சொப்பிங் பை ஒன்றில் இரண்டு மூன்று காய்கறிகளோடு நடந்து வந்து கொண்டிருக்கும் பழைய சினேகிதன் ஒருவனைக் கண்டேன்.

"காய்கறி சரியான விலை மச்சான், இவங்கள் எங்களைத் தின்னத் தான் பார்க்கிறாங்கள்." அவன் அரசாங்கத்தை தாறுமாறாக கிழித்தான்.

"ஏன் மச்சான் அப்படிச் சொல்லுகிறாய், வெள்ளைப் பூடு விலை குறைக்கப்பட்டிருக்குத் தானே, முடிஞ்ச வரையில் சாப்பிடு, பிரச்சனைகள் எல்லாம் மறந்து போயிடும்." நான் கூறினேன்.

"என்னுடைய வாயைக் கிளப்பாமல் போயிடு" எனக்கூறிய அவன் என்னுடைய வயிற்றிலே குத்திப்போட்டு முணு முணுத்துக் கொண்டு சென்றான்.

பார்மஸி ஒன்றுக்கு அருகில் எனது பழைய காதலியைச் சந்தித்தேன் "பால்மா என்ன விலை என்று பாருங்க! பிள்ளைகளை வளர்த்த மாதிரித்தான்!" அவள் சலிப்புடன் கூறினாள்.

"வெள்ளைப் பூடு விலை குறைக்கப்பட்டது உனக்குத் தெரியாதா? நல்லா வெள்ளைப்பூடு சாப்பிடு, உடம்பும் நல்லா வடிவாக இருக்கும்" நான் கூறினேன்.

"உன்னோடு நான் வந்திருந்தால் வெள்ளைப் பூடுதான் எனக்கு சாப்பிட நேர்ந்திருக்கும். நல்ல காலம் வேறொருவனைக் கட்டினது" எனக் கூறிய அவள் பிரைவேட் பஸ் ஒன்றில் ஏறி எனக்கு 'டட்டா' காட்டினாள்.

"பாண் ஏதாவது மரக்கறியோடு சாப்பிடலாம் என்று வந்தால் அட கடவுளே! பாணும் முடிஞ்சு போயிற்று!" ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் பத்து பன்னிரண்டு பேர் பெருமூச்சு விட்டனர்.

"வெள்ளைப்பூடு நல்ல மலிவு தானே! சாப்பிட்டு தண்ணியைக் குடித்தால் பாண் சாப்பிட்ட மாதிரித்தான்." கூறினேன்.

அவர்கள் என்னைப் பார்த்து பல்லைக் கடித்தனர். நான் வேசமாக அடியெடுத்து வைத்தேன்.

அரசாங்க அலுவலகங்களிலுள்ள கறுப்பு தோல் பை உடன் கருவாட்டுக் கடைக்கு முன்னால் அரசாங்க கிளார்க் ஒருவர் "மீன் விலையைக் கேட்டால் பைத்தியம் பிடிக்குது. கருவாட்டு கடைக்கு வந்தால் கருவாட்டு துண்டும் சாப்பிட்ட மாதிரித்தான் விலையாக இருக்குது." என கருவாடு போல் காய்ந்து போன முகத்துடன் கூறினார்.

"வெள்ளைப் பூடின்ர விலையைக் குறைச்சாச்சு, வெட்டி உப்போடு பிரட்டிப்போட்டு காயப் போட்டால் கருவாடு மாதிரித் தான்" நான் கூறினேன்.

"உனக்கென்ன பயித்தியமா? காயப்போடுறது என்னத்தை யெண்டு சொல்லுவன்...." எனக் கூறிக் கொண்டே அவர் என்னை நோக்கி திரும்பும் போது நான் இடத்தை விட்டு மாறினேன்.

எல்லாச் சாமான்களின் விலையும் அதிகமாக இருந்தால் 500 கிறாம் வெள்ளைப் பூட்டை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றேன்.

"என்ன இது?" மனைவி நெற்றியை சுருக்கிக் கொண்டு கேட்டாள்.

"அரைவாசியை குழம்பு வை, மிகுதி அரைவாசியில வறையும், பொரியலும் செய்" நான் கட்டளையிட்டேன்.

எனது பணிவுள்ள மனைவி எனது கட்டளை நிறைவேற்ற சென்றாள்.

ஆனால் என்ன ஆச்சரியம், நொடிப் பொழுதில் சாப்பாடு தட்டை கொண்டு வந்து என்னிடம் நீட்டினாள்.,

"என்ன இது? இவ்வளவு பூடு சாப்பிட்டால நான் செத்திடுவன்." நான் சத்தம் போட்டேன்.

"உன்னால் முடிஞ்ச வரையில சாப்பிடு, மிச்சத்தைக் கொண்டு போய் மந்திரியிடம் கொடு சாப்பிடச் சொல்லி" அவள் மேலும் உயர்ந்த தொனியில் பதில் கட்டளையிட்டாள்.

(ராவய ஆகஸ்ட் 29,1993 இதழில் "செய்தி மனிதனின் உலகம்" என்னும் பகுதியில் வெளிவந்ததை தழுவி எழுதப்பட்டது. நன்றி ராவய.)

---

### வன்னிமண்...

பிடிப்பது வழக்கம். ஆனால் சுமணதாஸ் பாஸ் சுட்டுப் பிடிப்பதில்லை. அடித்துத்தான் பிடிப்பது வழக்கம். இதற்காக அவர் பாவிப்பது 'கெட்டர்போல்' சுமணதாஸ பாஸ் வைத்த குறிதப்பாது அடிபட்டு விழுந்து விடும். நீர்க்காகத்தை நீந்திச் சென்று பிடித்து விடுவார். சில சமயங்களில், சுமணதாஸ பாஸ் பிஸியாகயிருக்கும் சமயங்களில் நானும் தம்பியும், குமார், பாபு கடைக்குட்டி ரவி, குந்தவி எல்லோரும் வேட்டைக்குக் கிளம்புவோம்.

தொடரும்

கம்பியூட்டர் வாங்க வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றும். நண்பரிடம் ஆலோசனை கேட்பீர்கள். நண்பர் ஏற்கனவே கேள்விச்செவியன் ஊரைக் கெடுத்த மாதிரி வேறு யாரின் பேச்சைக் கேட்டு ஐ.பி.எம் கம்பியூட்டரை வாங்கி ஒன்றுமே செய்யத் தெரியாமல் ஊரில் ரேடியோவுக்கு துணியால் தைத்து ஆடை உடுத்துவது மாதிரி தூசி படாமல் துணியால் மூடி வைத்துக் கொண்டு ஐ.பி.எம் தான் நல்லது என்பார்.

மற்ற நண்பரைக் கேட்டால் அப்பிள் தான் நல்லது என்பார். அவருக்கு பத்திரிகை தொடங்க வேண்டும் என்ற ஆசையாயிருக்கக் கூடும். எதுவுமே புரியாமல் மண்டையை உடைப்பீர்கள்.

இதற்குள் கொஞ்சம் கம்பியூட்டர் தெரிந்த 'அரைப் பரியாரிகள்' இன்னும் குழப்புவார்கள். 286, 386 என்று எலலாம் சொல்வார்கள். இதென்ன பலாய்டா என்று யோசிப்பதற்குள்....


கம்பியூட்டர் பற்றி சில விடயங்கள்.. தற்போதைய சாதாரண மக்களின் பாவனைக்கு பயன்படும் கம்பியூட்டர்கள் Personal Computers எனப்படுகின்றன. அப்பிள், ஐ.பி.எம், அற்ரூறி, அமிகா என்று பலவேறு ரகங்கள்.. ஆயினும் PC என்று சுருக்கமாக குறிப்பிடப்படுவன ஐ.பி.எம் நிறுவனத்தின் தயாரிப்புகளே...

கம்பியூட்டர்களுக்கு எல்லாம் மூலஸ்தானமாக ஒரு chip ஒன்றுண்டு. இது Central Processing Unit (CPU) எனப்படும். இது பெரும்பாலும் இரண்டு வகையினது. ஒன்று Intel நிறுவனம் வடிவமைத்த 80086 தொடர் chip. மற்றது Motorola நிறுவனம் வடிவமைத்த 68000 தொடர் chip.

முதலில் சாதாரண மக்களும் பயன்படுத்தக் கூடிய கம்பியூட்டர்களை அப்பிள் நிறுவனம் தயாரித்ததும், ஏற்கனவே பெரிய ராட்சத கம்பியூட்டர்களை வடிவமைத்த ஐ.பி.எம் நிறுவனம் தானும் இன்டெல் நிறுவனத்தின் சி.பி.யுக்களை மையமாகக் கொண்டு சிறிய கம்பியூட்டர்களை தயாரித்தது. இன்டெல் நிறுவனம் ஒவ்வொரு தடவையும் புதிய விடயங்களைப் புகுத்தி சி.பி.யுக்களை வெளியிடும் போது அதற்கு இலக்கங்கள்

# கணனி! கணனி!

# ஜகதாரிணி நீ! பரிபூரணி நீ!



## விஞ்ஞானப்பிரகாசன்

இட்டது. இவை தான் 80286, 80386, 80486 என தொடராக வந்தன. சுலபமாக இவை 286, 386 என அழைக்கப்பட்டன. இந்த சி.பி. யுக்களின் வேகம் மெகா ஹேட்ஸில் அளவிடப்படும் போது 16, 25, 40 என அழைக்கப்பட்டன. எனவே ஐ.பி. எம் கம்பியூட்டர்களின் சி.பி.யுக்கள் அவற்றின் மொடல் இலக்கத்துடன் அவற்றின் வேகத்தையும் குறிப்பிட்டு அழைக்கப்படும். புதிய சி.பி.யுக்கள் வேகம் அதிகமானவையாகவும் திறன் அதிகமானவையாய,ம' உருவாக்கப்பட்டன.

ஐ.பி.எம் நிறுவனம் தனது கம்பியூட்டர்களை அவசரமாகத் தயாரிக்க வேண்டி இருந்ததால் பல நிறுவனங்களைக் கொண்டு அதன் பாகங்களை தயாரித்திருந்தது. இதனால் இந்த கம்பியூட்டர்களை பலரும் 'மறுபிரசுரம்' செய்ய சந்தர்ப்பம் உருவாகியது. இதனால் கொம்பாக், டெல் என ஆயிரக்கணக்கில் நிறுவனங்கள் ஐ.பி.எம் கம்பியூட்டர்கள் போன்று செயற்படக் கூடிய IBM Compatible எனப்படும் கம்பியூட்டர்களை உருவாக்கின. இவற்றில் பெரும்பாலானவை இன்டெல் நிறுவனத்தின் சி.பி.யுவை மையமாகக் கொண்டன.

இன்டெல் நிறுவனத்தின் சி.பி. யுவை வேறு சில நிறுவனங்கள் 'மறுபிரசுரம்' செய்ததால் இன்டெல் தனது 586 தொடர் சி.பி.யுவை "நவேரைஅ என்று அழைத்தது. இலக்கங்களை பதிவு செய்த வியாபாரக் குறியாக்க முடியாது என்பது தான் இதற்கு காரணம். Cyrix, Texas Instruments, IBM, AMD போன்ற நிறுவனங்கள் இந்த சி.பி.யுக்களை தயாரித்து வருகின்றன. இவை தங்கள் தயாரிப்புகளுக்கும் 386, 486 என இலக்கமிட்டதால் அதை தடுக்க இன்டெல் எடுத்த முயற்சியால் தான் பென்ரியம் பிறந்தது.

மறுபுறத்தில் மோட்டோரோலா நிறுவனத்தின் 68000 தொடர் சி.பி. யுக்களை மையமாகக் கொண்டே மக்கின்ரோஷ், அமிகா, அற்ரூரி கம்பியூட்டர்கள் உருவாக்கப்பட்டன. இதில் அற்ரூரி ஐரோப்பாவில் புகழ் பெற்றது. வட அமெரிக்காவில் இசை தொடர்பானவர்களுக்குரிய கம்பியூட்டராக இது பயன்படுகிறது. அமிகா தொலைக்காட்சி, வீடியோ சம்பந்தப்பட்டவர்களுக்கு அதில் பயன்படுத்தக் கூடிய Video Toaster காரணமாக பயன்படுகிறது.

அப்பிள் மக்கின்ரோஷ் வரைதல், பத்திரிகை விடுதல் போன்ற ஜில்மால்களுக்கு பயன்படுகிறது. இதில் 68020, 68030, 68040, 68050 வரையான உானி கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் எண்கள் அதிகரிக்க அவற்றின் திறனும் வேகமும் அதிகரிக்கின்றன.

கம்பியூட்டர்கள் செயற்படுவதற்கு அவற்றுக்கு Operating System எனப்படும் ஒரு பிரதான கட்டளைத் தொகுப்பு தேவைப்படுகிறது. இந்த கட்டளைத் தொகுப்பே கம்பியூட்டரின் செயற்பாடுகளை வழிநடத்துகிறது.

மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களின் கட்டளைத் தொகுப்பு System என்ற பெயரில் உள்ளன. சிஸ்டம் 6, அதன் திறன் கூடிய சிஸ்டம் 7 என மக்கின்ரோஷ் வகைக் கம்பியூட்டர்களுக்கு உண்டு. Graphical User Interface (GUI) எனப்படும் பாவனையாளருக்கு புரியக் கூடிய விதத்தில் படங்களாக கட்டளைகள் இருப்பதால் கட்டளைகளை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லை.

ஐ.பி.எம் நிறுவனம் தான் கம்பியூட்டரைத் தயாரித்த போது அதற்கான பிரதான கட்டளைத் தொகுப்பு ஒன்றை அமைக்க மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் உதவியை நாடியது. அது PC-DOS (Personal Computer-Disk Operation System) என்ற பிரதான கட்டளைத் தொகுப்பை எழுதியது. இதுவே பின்னர் MS-DOS (Microsoft-DOS) என மாறியது. இந்த DOS இன் பிந்திய வடிவம் MS-DOS 6 ஆகும்.

அப்பிள் நிறுவனத்தின் சிஸ்டம் பாவனையாளர்களால் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் இருப்பதைக் கண்ட மைக்ரோசொஃப்ட் நிறுவனம் அதை 'கொப்பி' பண்ணி Windows எனப்படும் GUI ரக புதிய கட்டளைத் தொகுதியை உருவாக்கியது. இது தனியாகச் செயற்பட முடியாதது. இது செயற்படுவதற்கு MS-DOS தேவை.

இதற்குள் தானும் ஒரு Operating System ஒன்றை வடிவமைக்க வேண்டும் என்று நினைத்த ஐ.பி.எம் நிறுவனம் மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் உதவியுடன் OS/2 எனப்படும் புதிய கட்டளைத் தொகுதியை வடிவமைத்தது. ஆனால் மைக்ரோசொஃப்ட் நிறுவனம் தனது வின்டோஸ் கட்டளைத் தொகுதியால் தனக்கு அதிக பயன் என்று கருதி விலகிக் கொண்டது.

ஐ.பி.எம்மின் OS/2 ஆனது Windows போலன்றி தனியாக செயற்படக் கூடியது.

ஒப்பீட்டளவில் ஆரம்பத்தில் மக்கின்ரோஷ் கம்பியூட்டர்கள் விலை அதிகமானவையாகவும் ஐ.பி.எம் கம்பியூட்டர்கள் மலிவானவையாகவும் இருந்தன. தற்போது நிலைமை மாறி வருகிறது.

இரண்டு ரகக் கம்பியூட்டர்களும் தங்களுக்கு என தனித்துவமான சிறப்புகளைக் கொண்டிருந்தன. இதனால் பாவனையாளர்கள் இரண்டில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

Networking எனப்படும் கம்பியூட்டர் வலையமைப்பு மூலம் தரவுகளையும் படங்களையும் documents எனப்படும் பத்திரங்களையும் வெவ்வேறு ரக கம்பியூட்டர்களுக்கு மாற்றீடு செய்ய முடியும் எனினும் software எனப்படும் புரோகிராம்களை செயற்படுத்த முடியாது.

இருப்பினும் சில நிறுவனங்கள் இந்த குறைபாட்டை நீக்க, சில 'சுழிப்பு' வேலைகளைச் செய்தன. ஓரேஞ் மைக்ரோ எனப்படும் நிறுவனம் மக்கின்ரோஷ் கம்பியூட்டரில் பொருத்தக் கூடிய Board ஒன்றில் ஐ.பி.எம் கம்பியூட்டருக்கான சி.பி.யுவைப் பொருத்தி ஒரே கம்பியூட்டர் இரண்டு கம்பியூட்டர்கள் போலவே செயற்பட வழிவகுத்தது. ஆனால் இந்த Board இன் விலை மிகவும் அதிகம்.

Insignia Solution என்ற நிறுவனம் மக்கின்ரோஷ் கம்பியூட்டரில் ஐ.பி.எம் புரோக்கிராம்களை செயற்படச் செய்ய SoftPC என்ற புரோகிராமை வெளியிட்டது. இதன் மூலம் மக்கின்ரோஷ் கம்பியூட்டரில் ஐ.பி.எம் கம்பியூட்டரில் மட்டும் பாவிக்கக் கூடிய புரோக்கிராம்களையும் பாவிக்க முடியும். ஆனால் இதன் வேகம் மிகவும் மெதுவானது.

ஆனால் இதே போன்று மக்கின்ரோஷ் கம்பியூட்டருக்கான புரோகிராம்களை ஐ.பி.எம் கம்பியூட்டர்களில் பாவிப்பதற்கான வசதிகள் குறைவு. இருப்பினும் அப்பிள் நிறுவனமும் நொவல் நிறுவனமும் இணைந்து ஐ.பி.எம் கம்பியூட்டர்களுக்கான Operating System ஒன்றை உருவாக்குகிறார்கள் என்று கூறப்படுகிறது.

தற்போது Windows மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுவதால் மக்கின்ரோஷ் கம்பியூட்டரின் தனித்துவம் குறைந்து செல்கிறது. மிகவும் அதிக விலை கொடுத்து மக்கின்ரோஷை வாங்கி செய்ய முடிகின்ற விடயங்களை மலிவான விலையில் ஐ.பி.எம் கம்பியூட்டரை வாங்கி வின்டோஸ் உதவியுடன் செய்ய முடிகிறது.

ஒன்றில் ஐ.பி.எம் கம்பியூட்டருடன் MS-DOS/Windows அல்லது OS/2 கட்டளைத் தொகுதிகளை அல்லது மக்கின்ரோஷ், கம்பியூட்டருடன் System 6/7 ஐ மட்டுமே பயன்படுத்த வேண்டிய கட்டாயம். இந்த தொழில்நுட்பப் பிரச்சனையைத் தீர்க்கவும் மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் கொட்டத்தை அடக்கவும் இழந்து செல்லும் செல்வாக்கை நிலை நிறுத்தவும் ஐ.பி.எம்/ அப்பிள்/ மோட்டோரோலா ஆகிய நிறுவனங்கள் மூன்றும் இணைந்து புதிய திட்டத்தில் இறங்கின.

தற்போது பாவனையில் இருக்கும் அனைத்து விதமான operating system களையும் பயன்படுத்தக் கூடிய CPU Chip ஒன்றை உருவாக்கும் முயற்சியில் அவை ஈடுபட்டன. PowerPC எனப்படும் இந்த chip ஐக் கொண்ட கம்பியூட்டர்களில் மக்கின்ரோஷ் System 6/7 ஐயோ, MS-DOS/ Windows ஐயோ, ஐ.பி.எம் மின் OS/2 வையோ பயன்படுத்த முடியும். அத்தோடு இன்டெல் நிறுவனத்தின் பென்ரியம் சி.பி.யுக்களை விட இவை மலிவானவை. வேகமானவை. குறைவான மின்சக்தியைப் பயன்படுத்தக் கூடியன. இவை 600 தொடர் இலக்கம் கொண்டனவாக இருக்கும். இந்த சி.பி.யுக்களைக் கொண்ட கம்பியூட்டர்கள் அடுத்த வருடம் பாவனைக்கு வரும்.

எனவே தற்போதைய கம்பியூட்டரைத் தெரிவு செய்யும் தலையிடிகள் இனிமேல் குறைவாகவே இருக்கும் எந்தக் கம்பியூட்டரிலும் எந்த operating system உம் பயன்படுத்தப்படலாம். மலிந்த விலையில் நிறைந்த பயன்.

இதனால் தமிழ் மக்களுக்கு தலையிடிகள் அதிகரிக்கலாம். வீட்டுக்கு வீடு பத்திரிகைகள் தோன்றி.. பெயர் வைக்க பெயர் இல்லாமல் ஏற்கனவே வேறு பத்திரிகைகளின் பெயர்களை வைக்கிறார்கள். இனிமேல் வீரநாடு 123, ஈழநாதம் 386, அரிச்சுவடி 601, ஸ்காபரோ நேசன், மிசிசாகா மைந்தன், நோர்த் யோக் நோஞ்சான் என்றெல்லாம் வருமோ என்னவோ? படிக்கத் தயாராகுங்கள்.

***1982 ஜனாதிபதி தேர்தல்***
(தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் பின் ஜேவிபி யினரால் அடைய முடிந்த ஒரே ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம் "பிரதான இடதுசாரிக்" கட்சியாக தாம் மாறிவிட்டோம் என்னும் கூற்று உறுதிப்படுத்தப்பட்டது என்பதேயாகும். ஆயினும் ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி அடைந்த படுதோல்வியால் தோற்றுவிக்கப்பட்ட விளைவுகளைத் தடுப்பதற்கு இம் மகிழ்ச்சி மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நாட்டின் அனேக பிரதேசங்களைச் சார்ந்த ஜேவிபி அங்கத்தவர்கள் ஜேவிபியை விட்டு விலகத் தொடங்கினர். ஒரு சில இடங்களில் ஜேவிபி யின் செயற்பாடுகள் முற்றாக தடைபட்டன.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவை விட தேர்தல் வேலைகள் மூலமாக ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகளே கட்சிக்கு கூடிய தீங்கை விளைவித்தன. இக் காலகட்டத்தில் கட்சியை கட்டி எழுப்புதல் தேர்தல் ஸ்தாபனத்தை உருவாக்குதல் என்னும் நிலமைக்கு கீழிறங்கியது. தேர்தல் காலங்களில் விண்ணப்பப்பத்திரம் நிரப்பி ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்வதும் அவ்வாறு சேர்ந்தவர்களின் தொகையை தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அறிவித்தும் தாலாட்டப்பட்ட தலைவர்கள் தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்களின் அங்கத்தவர்களுக்கும் கட்சி அங்கத்தவர்களுக்கும் இடையேயான வேறுபாட்டைக் கூட முற்றாக மறந்தனர். இவ்வாறு ஜேவிபி கட்சி என்னும் ரீதியில் ஒட்டுமொத்தமாக சீரழிவை நோக்கிச் செல்லும் போது தனி நபர் சீரழிவுகளும் ஏற்படத் தொடங்கின. (லயனல் போபகேயின் இராஜினாமாக் கடிதம் பக்கம் 10) தலைவர்களின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்திலும் வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டன. இத் தனி நபர் சீரழிவுகள் முதலாளித்துவ கட்சிகளின் சீரழிவு நிலமையை நோக்கி பயணம் செய்ததை அனேக தலைவர்களின் நடவடிக்கைகள் மூலமாக காண முடிந்தது. நிலைமை எவ்வளவு தூரம் சகிக்க முடியாத அளவுக்கு சீரழிந்தது எனக் கூறுவதாயின் கட்சியின் கண்ணியத்தை பாதுகாப்பத ற்காக, தொடர்ந்தும் மூடி மறைக்க முடியாத அளவுக்கு சீரழிந்து போன வாஸ் திலகரத்ன, மகிந்த பத்திரன ஆகிய இருவரையும் கட்சியிலிருந்து விலக்கியே

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

## வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ சரத் த சில்வா, ரஞ்சித் குமார

### தமிழாக்கம்; செ. லோகநாதன்

ஜேவிபி தலைமை தமது புனிதத்தைக் காண்பித்தது. ஆயினும் இந் நடவடிக்கை மூலமாக கட்சியின் சீரழிவை தடுக்க முடியவில்லை.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜே.ஆர் ஜெயவர்தன பாராளுமன்ற பொதுத் தேர்தலை ஆறுவருடகாலம் ஒத்திவைக்கும் தீர்மானத்தோடு பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கு பதிலாக சர்வசன வாக்கெடுப்பை நடாத்த முன் வந்தார். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் இவ் நடவடிக்கையை பூரணமாக பாராளுமன்ற கட்சியாக மாறியிருந்த ஜேவிபியுடன் தொடர்புபடுத்தி பார்க்கும் போது பாராளுமன்றத்தில் சில ஆசனங்களையாவது வெற்றி பெறுவதற்கு பாவிக்கப்படவிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டதாக அமைந்தது. 1982 டிசம்பர் மாதம் 22 ம் திகதி நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பு முடிவின்படி இன்னும் ஆறுவருட காலம் 5/6 பாராளுமன்ற பெரும்பான்மையுடன் பதவியிலிருக்க யூ.என்.பி யினருக்கு அவகாசம் கிடைத்தது. தமது பிரதிநிதிகள் சிலரையாவது பாராளுமன்றத்துக்கு அனுப்பவிருந்த சந்தர்ப்பம் ஜேவிபியினருக்கு இல்லாது போனதால் ஜேவிபியின் நிலமை மேலும் சீர் கேடானது.

தமது நிலமை சீர்கெடும்போது தமது செயல் முறைகளையும் ஸ்தாபன அமைப்பு முறையையும் பற்றி மீண்டும் சிந்தித்துப் பார்க்க ஜேவிபி க்கு நேர்ந்தது. இதற்கமைய 1983 பெப்ரவரி மாதத்தில் கட்சியை புனரமைப்புச் செய்ய வேண்டும் என தீர்மானித்ததோடு இடதுசாரிகளின் ஐக்கியம் பற்றியும் ஜேவிபி யினர் குரல் எழுப்பத் தொடங்கினர்.

ஜனாதிபதி தேர்தல் சர்வசன வாக்கெடுப்பு ஆகியவற்றின்போது இடதுசாரிகளின் மத்தியிலே ஐக்கியமும் பொது கொள்கை அங்கீகாரமும் இருந்திருந்தால் இடதுசாரிக் கட்சிகளால் சோஷலிச அரசாங்கத்தை உருவாக்கியிருக்கலாம் என 1983 ஏப்பிரல் மாதம் களுத்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஏப்பிரல் கிளர்ச்சி நினைவு தினக் கூட்டத்தில் லயனல் போபகே கூறினர். 1983 மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போது விஜேவீர, எதிர்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு போராடவேண்டியதன் அவசியம் பற்றியும் கூறினர். ஆனல் இவை எவ்வளவு தூரம் நேர்மையானது என்பது கேள்விக்குறியே யாகும்.

**1983 ன் புனரைமப்பு**

1983 பெப்ரவரி மாதம் எடுத்த தீர்மானத்தின்படி ஜேவிபி யின் ஊழியர்களால் பிரதானமான ஊழியர்கள் சுமார் 150 பேர் மொனராகலை மாவட்டத்திலுள்ள புத்தல என்னும் இடத்திற்கு 1983 ம் ஆண்டு மே மாதம் உரையாடலுக்காக அழைக்கப்பட்டனர். இவ் உரையாடலின் போது பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கட்சியின் நிலைப்பாடுகள் பற்றி லயனல் போபகே காரசாரமாக கேள்விகள் எழுப்பினர். கட்சியின் ஸ்தாபன முறை, கட்சியின் வேலை முறைகள், உட்கட்சி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள், கட்சியின் மூல தந்திர உபாயங்கள், தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக கட்சியின் நிலைப்பாடு என்பன பற்றி அவர் கேள்விகளை எழுப்பினர். அவருடைய கருத்தின்படி நிலவிய ஸ்தாபன முறை, வேலைத் திட்டம், செயல் முறைகள் எவ்விதத்திலும் புரட்சிகர கட்சிக்கு உரியவை அல்ல எனவும், ஜேவிபியின் மூல தந்திர உபாயங்கள் பிரதான எதிரியை பலமடையச் செய்வதும் நட்புச் சக்திகளிடமிருந்து தம்மை தனிமைப் படுத்திக் கொள்வதுமான உபாயங்களே கடைப் பிடிக்கப்படுகின்றன எனவும் அவர் கூறினர்.

லயனல் போபகேயின் காரசாரமான விமர்சனம் தேசிய இனப் பிரச்சனை, ஜேவிபி யின் நிலைப்பாட்டை நோக்கியே இலக்குப்படுத்தப்பட்டது.

தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக இரட்டை வேடம் போடுதலே ஜேவிபியின் நிலைப்பாடு என்பதே லயனல் போபகே யின் கருத்தாக இருந்தது. தேசிய இனப் பிரச்சனையின் போது பாராளுமன்ற கட்சி கடைப்பிடிக்கும் வழிமுறைகளே ஜேவிபியின் வழிமுறைகள் எனவும் அவர் கூறினர். தேசிய இனப்பிரச்சனையை இலங்கைப் புரட்சியின் ஒரு பகுதியாக மாற்றி அமைக்க வேண்டும் எனக் கூறிய அவர் எந்த வொரு இனவாதத்துக்கும் சாய்ந்து போவதால் அதனைச் செய்ய முடியாது எனவும் தமிழ் மக்களது உரிமைக்காக போராடும் முற்போக்கு இயக்கங்களுடன் (அவை ஆரம்பத்தில் பயங்கரவாத இயக்கங்களாக இருந்தாலும் கூட) தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவ்வாறு செயல்படாமல் தமிழ் மக்களை புரட்சிகர கொள்கைகளுடன் இணைத்துக் கொள்ள முடியாதெனவும் கூறினர். அவ்வாறு தொடர்புகளை ஏற்படுத்தினுல் அடக்கு முறைக்கு உள்ளாக நேரிடும் என்னும் அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்தாமல் இருப்பது இலங்கைப் புரட்சிக்கு நன்மை பயக்காது எனவும் அவர் கூறினர்.

ஆனல் லயனல் போபகே யினல் முன்வைக்கப்பட்ட இக்கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவருடைய கருத்துக்களை கவனத்தில் எடுப்பதற்குப் பதிலாக ஜேவிபியின் ஆரம்ப காலம் தொடக்கமே ஜேவிபிக்குள் கேள்வி கேட்பவர்களின்
தலைவிதி எவ்வாறு அமைந்ததோ அதுவே லயனல் போபகே அவர்களது தலைவிதியாகவும் அமைய ஆரம்பித்தது. லயனல் போபகே வகித்த பொதுச் செயலாளர் பதவிக்குரிய பொறுப்புகள் கட்சியின் தீர்மானம் இல்லாமலேயே லயனல் போபகே அவர்களுக்கும் தெரியாமல் நந்தசிங்க என்பவரது (இவரே பிற்காலத்தில் சுமித் அத்துகோறல என்னும் பெயரில் இயங்கினர்) கைகளுக்கு மாறின. லயனல் போபகே பொதுச் செயலாளர் பதவியுடன் கூடவே யாழ்ப்பாண பிரதேசத்துக்கும் பொறுப்பாக செயல்பட்டதால் போபகேவுக்கு வேலைப் பழு அதிகமாக இருந்தது. இதனல் உட்கட்சியாக செயலாளருக்குரிய கடமைகளை ஆற்றியது நந்தசிங்க அவர்களேயாகும். இதன் காரணமாக போபகேயிடமிருந்த அதிகாரங்களை இலகுவாக நந்தசிங்கவின் கைகளுக்கு மாற்ற முடிந்தது. இவ் அதிகார மாற்றங்கள் பற்றி போபகேவுக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனலும் நிகழ்வது என்னவென்பதை போபகே நன்ருக அறிந்திருந்தார். படிப்படியாக மௌனத்தை நோக்கி பயணம் செய்வதை தவிர செய்வதற்கு வேறு எதுவுமே போபகேயிடம் இருக்கவில்லை.

இக் காலகட்டத்தில் ஜேவிபி யை அடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாகவும் தகவல்கள் கிடைத்தன. விசேடமாக 1983 மே தின ஊர்வலம் ஜேவிபி யை நோக்கி அரசாங்கத்தின் விசேஷமான கவனம் திரும்புவதற்கு காரணமாக அமைந்தது. ஒரு விதத்தில் யுத்த அணிவகுப்பு சுபாவத்தைக் கொண்டிருந்த இம் மேதின ஊர்வலத்தின் போது அவ்வருடம் பூர்த்தியாகும் போது ஜேவிபி அதிகாரத்தைக் கைப்பற்றும் என்னும் குரலும் எழுப்பப்பட்டது. இது வெறும் கோஷமாக இருந்த போதிலும் அரசாங்கம் இது குறித்து பாரதூரமாக சிந்திக்க தொடங்கியது. ஜேவிபியை அடக்குவதற்கு அரசாங்கம் தயாராகின்றது என்பது தொடர்பாக கிடைக்கும் தகவல்களைப் பற்றி நீண்ட உரையாடல்கள் நடாத்தப்பட்டதோடு அதற்கு முகங்கொடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவற்றைப் பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. அனைத்து ஊழியர்களுக்கும் அவரவர் பாதுகாப்பாக இருப்பதற்கு உகந்த இடங்களை தேடிக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கவேண்டும் எனவும் கொழும்பு பிரதான அலுவலகத்திலுள்ள ஆவணங்களை அங்கிருந்து அகற்றி பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்வதெனவும் கட்சியின் சகல நடவடிக்கைகளையும் ஒரு மாத காலத்துக்கு நிறுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. விஜேவீர நாடு பூராவும் பயணம் செய்து ஜேவிபி ஊழியர்களைச் சந்தித்து அவர்களுக்கு தோன்றியுள்ள நெருக்கடிகளைப் பற்றி விளங்கப்படுத்தி புனர் அமைப்பு வேலைகளை வழி நடத்தவேண்டும் எனவும் இவ் உரையாடலில் இறுதியாக தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானங்களுக்கமைய சகல ஊழியர்களுக்கும் தாம் பாதுகாப்பாக இருப்பதற்கு உகந்த இடத்தை, தேடிக்கொள்ளுமாறும் கட்சி வேலைகளை ஒரு மாதகாலத்துக்கு நிறுத்துமாறும் அறிவிக்கப்பட்டது. கொழும்பு ஜேவிபி பிரதான அலுவலகத்திலிருந்த கோவைகள் அகற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கட்சி வேலைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டன. ஆனல் கட்சி வேலைகளை ஒரு மாதகாலத்திற்கு நிறுத்துவதாக தீர்மானிக்கப் பட்டபோதிலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களால் மூன்று மாதத்துக்கும் மேற்பட்ட காலத்துக்கும் கட்சி வேலைகள் தடைபட்டன.

## 1983 ஜூலையில் ஜேவிபி யை தடை செய்தலும் தடைக்குப் பின்னர் செயல் முறைகளும்

1983 ஜூலை மாதம் 23 ம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கண்ணி வெடி மூலமாக ஒரு இராணுவ உத்தியோகத்தர் உட்பட பதின்மூன்று இராணுவத்தினர் உயிர் இழந்த சம்பவம் இலங்கை அரசியல் வரலாறு மிகவும் இருண்டதும் அழிவை ஏற்படுத்தியதுமான காலகட்டத்தில் பிரவேசிக்க வழிசமைத்த சம்பவங்களில் முக்கியமான தொன்ருகும். இச் சம்பவம் சிங்கள இனவாதம் பாய்ச்சலில் வளரவும் அவ்வளர்ச்சி மீண்டும் தமிழ் இனவாதத்தை வளர்க்கவும் என்னும் வகையில் ஒன்றையொன்று தொடர்புடன் வளர்ந்ததும் பெரும் அழிவைத் தேடித் தந்ததுமான செயல்களுக்கு தூண்டுகோலாக அமைந்தது. வடக்கிலும் தெற்கிலும் இனவாதச் சக்திகள் தாம் விரும்பியவாறு வளர்வதற்கு அவசியமான நிலைமைகள் உருவாகுவதற்கும் பெரும் காரணியாக அமைந்தது.

ஜூலை 23 ம் திகதி கண்ணிவெடி தாக்குதல் மூலமாக யாழ்ப்பாணத்தில் உயிர் இழந்த ஆயுதப் படையினரின் சடலங்கள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட நாள் வடக்கின் கொலைகளுக்கு பதிலாக பயங்கரமான இனவாதத்தின் கரும்புகை மண்டலம் கொழும்பு நகரத்தை முற்ருக மூடிக்கொண்டது. இவ் மதிகெட்ட தமிழ் விரோத வன்செயல்கள் கொழும்பில் ஆரம்பமாகி நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவின. பத்தாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது வதிவிடங்களை இழந்தனர். நூற்றுக் கணக்கான தமிழர்கள் குழந்தை குட்டிகளுடன் எவ்வித ஈவு இரக்கமுமின்றி படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இவ் வன் செயல்கள் அனைத்தும் இடம்பெறும்போது ஜனதிபதியும் பிரதமரும் சில நாட்கள் மௌன விரம் அனுஷ்டித்தனர்.

தொடரும்.

# காணிக்கையும் கட்டணமும்: எல்லாமே பணத்துக்குத் தாண்டா?

## அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

சமீபத்தில் இந்தியா ருடேயில் தமிழகத்தில் கோயில்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பது பற்றி எழுதியிருந்தார்கள். அதற்கு வந்த வாசகர் கடிதம் ஒன்றில் எப்போது காணிக்கை என்பது கட்டணம் என்று எப்போதுஆயிற்றோ அன்றே கோயில்களில் வியாபார தலங்கள் ஆகி விட்டன என்று வந்திருந்தது. நம்ம நிலைமை கிறடிட் காட் வரை போய் விட்டது. பிறகென்ன?

தியேட்டரில் ரஜனியைக் காணவும் டிக்கட். திருப்பதி வெங்கடாசலபதியைக் காணவும் டிக்கட் என்றால் வித்தியாசம் என்ன? இதெல்லாம் சிதம்பர ரகசியம்..

★ ★ ★

சிதம்பர ரகசியம் என்றால்.. ஒரு இருட்டறையை ஜன்னலால் அடைத்து இது தான் சிதம்பர ரகசியம் என்பார்களாம். உள்ளே என்னப்பா இருக்கிறது என்றால் இதுதான் சிதம்பர ரகசியம் என்பார்களாம். இது எனக்கு ஆங்கிலம் கற்பித்த ஒரு ஐயர் சொன்னது. (நீங்கள் நினைக்கும் ஐயர் அல்ல). அந்த நேரமே இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டிருந்த ஐயர் அவர்.

★ ★ ★

கோயில்கள் ஒரு புறம்.. இப்போது உலக சமாதானம் வேண்டி யாகம் வேறு நடக்கிறது. பாரதிய ஜனதாவின் ஆதரவு கூடுகிறது என்பதால் காங்கிரஸ் சந்திராசாமியைப் பிடித்து யாகம் ஒன்று நடத்தியது. மாநில அரசின் சகல வளங்களும் இந்த யாகத்துக்கு துணையாயிருந்தன. ஆயினும் தோல்வி என்று கூறப்படுகிறது.

இங்கே யோர்க் பல்கலைக்கழகத்திலும் சமீபத்தில் யாகம் ஒன்று நடந்தது. அதற்கு கனடிய பிரஜாவுரிமைகள் அமைச்சின் நிதியுதவியும் கிடைத்தது.

★ ★ ★

இப்போது உலக சமாதானம் வேண்டி மொன்றியலில் ஒதுக்குப்புறமாக உள்ள இடத்தில் யாகம் நடைபெறுகிறது. இதில் சம்பந்தப்பட்ட ஒருவர் முன்பு முருகன் ஆலயத்தில் இருந்தவராம்.

அங்கு கோயில் சங்கத்துச் சண்டையையே தீர்க்க முடியவில்லை. உலகத்துச் சண்டையை எப்படித் தீர்ப்பார்களோ?

★ ★ ★

கோயில்கள் அதிகரிக்கும் நிலையில் மொன்றியலிலும் நிலை மோசமாம். ஒரு கோவில் சங்கு பதித்து அத்திவாரம் போட இன்னொன்று புல் வெட்டாததால் அபராதம் செலுத்தும் நிலையில் உள்ளது. பதவிகளை அலங்கரிப்பவர்களுக்கு கனடிய சட்ட திட்டங்கள் தெரிய வேண்டாமா? கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றால் இப்போது கோயில் உள்ள ஊரில் குடியிருந்தால் பிரச்சனை வரும் போலிருக்கே.

இங்கே ஒரு கோயிலில் திருமணம் நடத்த உத்தேசித்து மண்டபத்திற்கு முற்பணம் கொடுத்திருந்தார்களாம் ஒரு மணவீட்டார். திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட கோயில்காரர் தாம் அதே தினத்தில் வேறு யாருக்கோ மண்டபத்தை கொடுத்து விட்டதாக கூறியதும் வீட்டார்க்கு அதிர்ச்சி. எல்லா ஆயத்தங்களும் செய்தாயிற்று. திடீரென்று சொன்னால் எங்கே போவது? பேசிப்பார்த்தும் பயனில்லை. முடிவாக நிர்வாகம் சொல்லி விட்டது. சரி, என்ன செய்ய? முற்பணத்தைக் கொண்டு வந்து தாருங்கள் என்று கூறி விட்டார்களாம் மணமகன் பகுதி. உரியவர் பணத்துடன் வந்ததும் பூட்டி வைத்து நையப்புடைத்துச் சொன்னார்களாம் 'தேவையென்றால் பொலிஸிற்கு சொல்லு, நாங்கள் சொல்வோம் நீர் வீடு தேடி வந்து எம்மைத் தாக்கியதாக' என்று. இப்படி காற்று வாக்கில் ஒரு சேதி. காணிக்கை கட்டணமாகி, கட்டணத்தைக் கொடுத்த பின்பும்

அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி.



பெருமையுடன் அறுக்கும்

அறு(சு)வை

இப்படியென்ருல்?

★ ★ ★

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் இந்தக் கோயில்கள் பற்றி பல அனுமதேய துண்டுப்பிரசுரங்கள். ஊழல், மோசடி என்று பல குற்றச்சாட்டுக்கள் வந்திருந்தன. நோட்டீஸ், பதில் நோட்டீஸ் என்று ஒரே அமர்க்களம். பத்திரிகைகள் மாதிரித் தான்.

★ ★ ★

பத்திரிகை வெளியிட்ட சஞ்சிகையில் ஒரு கட்டுரை.. இலங்கை சென்று வந்த பெண்மணி புலிகள் தன்னிடம் பணம் கேட்கவில்லை என்று சொன்னது பற்றி கடந்த வாரம் சொல்லியிருந்தேன்.

★ ★ ★

எனக்குத் தெரிந்த ஒருவரும் சென்றிருந்தார். அவரிடம் பணம் கேட்கவில்லை. காரணம் அவரது தாயார் ஏற்கனவே வெளிநாட்டிலிருக்கும் இவர் சார்பில் பணம் தங்கமாக கொடுத்திருந்தார். ஆனுல் இவரது பெயர் புலிகளின் குடும்ப அட்டையில் இல்லாத காரணத்தால் மாதக்கணக்கில் இவரது வெளியேற்ற விசா கொடுக்காமல் இழுத்தடித்திருந்தார்கள். இவரது உறவினரான ஒரு மாஜிக் கம்யூனிஸ்டு ஒருவருக்கு புலிகள் நன்ருகவே அலுப்புக் கொடுக்கிருர்களாம். அவரது வாகனங்களை வந்து 'கேட்டு' வாங்கி செல்கிருர்களாம்.

★ ★ ★

சரி அந்தப் பெண்ணிடம் பணம் வாங்காதற்கு என்ன காரணமோ? உறவினர் யாரும் சிற்றூரவையில் இருக்கிருர்களோ தெரியாது. இந்தப் பெண் எழுதிய கட்டுரை தங்களது சஞ்சிகைக்கு விசேடமாக எழுதப்பட்டது என்ற பிரமையை ஏற்படுத்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஆனுல் போட்டிப் பத்திரிகையான 'மரை' விசயத்தைப் புட்டு வைத்தது. லண்டன் பத்திரிகையான ஈழகேசரியில் அந்தப் பெண்ணின் படத்துடன் வந்த கட்டுரையே அது. அதை சஞ்சிகை மறுபிரசுரம் செய்திருந்தது. என்வே மூலத்தைக் குறிப்பிட்டு கட்டுரையை 'மரை' பிரசுரித்தது. மற்றவர்களின் அடிச்சுவடுகளைப் பற்றி நடப்பது என்பது மறுபிரசுரம் செய்வதைத் தானே குறிக்கிறது?

★ ★ ★

'மரை'யில் தமிழர்கள் விவாக ரத்துச் செய்யலாமா என்ற கட்டுரை வந்தது. அதுவும் லண்டன் ஈழகேசரியில் வந்திருந்ததன் மறுபிரசுரம். அந்தக் கட்டுரையின் இறுதியில் 'இந்தக் கட்டுரைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை. எழுதி அனுப்புங்கள் என்றிருந்தது.

எதற்கு அனுப்புவது? மூலத்தை வெளியிட்ட பத்திரிகைக்கா? மறுபிரசுரித்ததற்கா?

★ ★ ★

மறுபிரசுரங்கள் செய்தாலும் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இங்குள்ள கோஷ்டி மோதல்களின் போது ரொறன்ரோ சண் பத்திரிகையில் எமது 'பிரகிருதி' ஒருவரின் கைங்கர்யத்தால் ஒரு குறிப்பிட்ட ஊரவர்களை இழிவுபடுத்தி கட்டுரை ஒன்றை வெள்ளையர் ஒருவர் எழுதியிருந்தார். இந்தக் கட்டுரையை தாயகம் மறுபிரசுரம் செய்திருந்தது. இதற்கு பலத்த கண்டனம்..

இதை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது என்று 'தகவல்' தெரிவித்த ஒருவர் மனம் நொந்திருக்கிருர். உண்மையில் தாயகம் மறுபிரசுரம் தானே செய்தது. அதுவும் இவ்வாருன கருத்துக்கள் வெள்ளையர்களிடம் உள்ளன, அதை தெரிவித்தவர் 'நம்ம பிரகிருதி' தான் என்றும் தாயகம் குறிப்பிட்டிருந்தது.

ஆனுல் அந்த தகவலை வெள்ளையருக்கு சொன்ன பிரகிருதியை அல்லவா குற்றம் சாட்டியிருக்க வேண்டும்? எய்தவன் இருக்க அம்பை நோகலாமா?

★ ★ ★

பரவாயில்லை. முன்பு தாயகம் தடை செய்யப்பட்டதில் சிலருக்கு விசேட பங்குண்டு. தாயகம் சில இடங்களில் விற்பனை செய்யப்படுவதற்கும் 'இது எங்கட இடம், இங்க வித்தால் கண்ணுடி உடைப்போம்' என்று சொன்னதும் உண்டு. அதை கண்டிக்க யாரும் துணியவில்லை.

★ ★ ★

பத்திரிகைகள் மிரட்டப்படுவதும் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும் வழமையாகி வருகிறது. தாயகத்திற்கு நடந்தது தானே. இப்போது சோமாலியாவில் எங்களிடமிருந்து நிறையவே கற்றுக் கொண்டிருக்கிருர்கள்.

சோமாலியாவில் முன்னுள் சர்வாதிகாரி பதவி இழந்ததை அடுத்து பத்திரிகைகள் ஆரம்பித்தன. ஆனுல் புதிதாக தோன்றிய தலைவர்கள் நாட்டை இன்னமும் குட்டிச்சுவராக்குவது குறித்து அதிருப்தி அடைந்த பத்திரிகைகள் கடுமையான கண்டனங்களைச் செய்தன.

இதில் குலேட் என்ற பத்திரிகையாளர். 26 வயதானவர். ஹொக் ஒகோல் என்ற இவரது பத்திரிகை அங்கு ஐ.நாவினுல் தேடப்படும் அய்டீட்டுக்கு எதிரான கருத்துக்களை பிரசுரித்து விட்டது. பிறகென்ன? அய்டீட்டின் அடியாட்கள் அவரைக் கொல்வதற்காக மூன்று பேரை ஒழுங்கு செய்திருக்கிருர்கள். இதில் ஒருவரை பத்திரிகை ஆசிரியரின் காவலர்கள் கைது செய்திருக்கிருர்கள்.

அய்டீட்டுக்கு ஆதரவாளர்கள் நிறையவே இருக்கிருர்கள் என்பதை குலேட் ஒப்புக் கொள்கிருர். ஆனுல் இவர்கள் எல்லாம் அய்டீட்டு ஜனுதிபதியானுல் தாங்கள் ராஜதந்திரிகள் ஆகலாம், பதவி கிடைக்கும் என்று நம்புபவர்களே என்கிருர் அவர்.

இதைக் கேட்ட அய்டீட்டின் ஆதரவாளர்களுக்கு இரத்தம் கொதித்தது. இதனுல் ஒவ்வொருவருக்கும் 1200 டொலர்கள் கொடுத்து அவரைக் கொல்லும்படி மூவரை அனுப்பினர். மூவரும் அவரைக் கொல்ல அவரது வீட்டுக்கு வந்த போது அதில் ஒருவர் பிடிக்கப்பட மற்றவர்கள் தப்பி விட்டார்கள்.

19 வயதான இந்த

கொலைமுயற்சிக்காரர் ஒரு உணவகத்தில் தட்டுக்கள் கழுவுபவர். இவர் குலேட்டின் பத்திரிகையை வாழ்நாளில் வாசித்ததில்லை. அப்படி ஒன்றும் கோபமில்லை. அவருக்கு வாசிக்கத் தெரியாது. அவ்வளவு தான்.

ஏழு நாட்களாக அய்டீட்டின் ஆதரவு வானொலி ஹொாக் ஒகாலுக்கும் கரான் என்ற இன்னொரு சுதந்திரப் பத்திரிகைக்கும் வேலை செய்பவர்களை கண்ட இடத்தில் சுடும்படி அறிவித்தது.

தனனைக் கொல்ல முயன்றவர்களை தான் கொல்லப் போவதாக குலேட் கூறுகிறார். கடும் பாதுகாப்புகளுடன் தான் பத்திரிகை வெளியாகிறது. பத்திரிகை வினியோகம் துப்பாக்கிய ஏந்திய பத்துப் பேருடன் நடைபெறுகிறது.

இது எப்படி இருக்கு? நம்ம ஆட்களிடம் நிறையவே உலக நாடுகள் கற்றுக் கொண்டிருக்கின்றன. பாவம் யோகி. இதைச் சொன்னதோடு சரி.. இப்போது அவரது பதவியில் இன்னொருவர்...

★ ★ ★

இந்திய சினிமா நட்சத்திரங்கள் கட்சிகளில் சேர்வது ஒன்றும் புதியதல்ல. ரஜனி முதல்வராவார் என்று ரஜனியின் ரசிகர்கள் கனவு காண்கிறார்கள். இப்போது ஆனந்தவிகடனுக்கு அளித்த பேட்டியில் 'யார் முதல்வராக உட்கார்ந்தாலும் எதுவும் பண்ண முடியாது. நல்லது நடக்காது. நடக்கவும் விடமாட்டாங்க.. இந்த நிலையில் புரட்சி வர்றது தான் ஒரே வழி' என்கிறார். இந்திய அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும் என்கிறார். நாட்டுக்கு ஒரு சர்வாதிகாரி, முதலில் அவசர காலச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும், மக்கள் நலனை கருத்தில் நினைத்து செயற்படுகின்ற தலைவர் வேண்டும் என்கிறார். அப்படி நிலை வந்தால் தான் அரசியலுக்கு நுழைவேன் என்கிறார். சஞ்சய் காந்தி மாதிரி துடிப்பும் காந்தி மாதிரி நல்ல உள்ளம் கொண்ட தலைவர் வேண்டுமாம். சிங்கப்பூரை உதாரணம் காட்டுகிறார். பணக்காரர்களும் அரசியல்வாதிகளும் மக்களை ஏமாற்றுவதைக் கண்டிக்கிறார்.

என் காலம் வரும், என் கடமை வரும், இந்த காக்கையர் கூட்டத்தை ஒழிப்பேன் என்று எம்.ஜி.ஆரும் தான் பாடினார். என்ன நடந்தது?

★ ★ ★

ஸ்ரீகாந்த் ஜனதாக் கட்சியில் சேர்ந்திருக்கிறார். கேள்விப்படாத கட்சியில் கேள்விப்படாத நடிகர். இவர் முன்பு பெரும் வில்லன். கலைப்படங்களில் ஹீரோ.. ஜெயகாந்தனின் படங்களில் நடித்தவர். ரஜனியின் வரவால் இவர் ஒதுக்கப்பட்டு இப்போது அட்ரஸ் இல்லாமல் இருந்தார். இப்போது அரசியலில் குதித்திருக்கிறார். கதாநாயர்கள் அரசியலில் குதித்து சக்கை போட அங்கே வில்லன்களும் வேண்டாமா?

★ ★ ★

வில்லன்கள், நாயர்கள் இருந்தால் நாயகிகளும் வேண்டுமே.. ஜெயலலிதா வரிசையில் இப்போது லட்சுமி பாரதிய ஜனதாவில் சேர்ந்திருக்கிறார். இந்துத்துவத்தை வலியுறுத்தும் கட்சியில் லட்சுமி.. பிரச்சனையில்லை.. ஆனாலும் பாஸ்கர், மலையாளமோகன், சிவச்சந்திரன் என்று மூவரைத் திருமணம் செய்த (உத்தியோகபூர்வமாக) லட்சுமியை இந்துப் பாரம்பரியங்களை வளர்க்கும் பா.ஜனதா எப்படி ஏற்றுக் கொள்ளுமோ?

★ ★ ★

லட்சுமி இந்துக் கட்சியில் சேர.. மகள் ஐஸ்வர்யா தற்போது முஸ்லிம் இளைஞரான தன்வீரைத் திருமணம் செய்து முஸ்லிமாக மாறியிருக்கிறார். தனது மகளையே காப்பாற்ற முடியவில்லை. நாட்டை எப்படி லட்சுமி காப்பாற்றப் போகிறாரோ? ஆண்டவன் தான் இந்தியாவைக் காப்பாற்ற வேண்டும்.


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**



**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**



இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS

516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ், ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**



TRADING CO LTD

SIVA'S

321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

# P.S.S.T

எக்கோ, தொம்சன் கசட்டுகள் 1.99
8 லேசர் இசைத்தட்டுக்கள் 29.99
வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம்
Video Transfer (Any system) 8.99

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**Tel:609-0141**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**